26 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com







நதி 26 | பாலம் 24 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 15, 2016

# இரும்புப்பெண்மணி புரட்சித் தலைவி ஜெயலலிதா



இரும்புப் பெண்மணி முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்காக ஒட்டுமொத்த தமிழர்களும் கண்ணீர் வடிக்கின்றனர். இந்திய அரசியலில் மிகப் பெரும் சக்தியாகத் திகழ்ந்தவர் ஜெயலலிதா. தமிழகத்தின் முதல்வராகச் செல்வி ஜெயலலிதாவின் 20 வருடங்களுக்கும் அதிகமான ஆட்சிக்காலத்தில் பெண்களுக்காக, பெண்களைமையப்படுத்திப் பல நல திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். மேலும் இதுவரை தமிழக முதல்வராக இருந்தவர்களின் பெண்களுக்கு முக்கியதுவம் கொடுத்து அதிக திட்டங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்ததும் இவர் தான். மழைநீர் சேகரிப்பு, மகளிர் காவல்நிலையம் என பல அருமையான திட்டங்களை தம்முடைய ஆட்சிக் காலத்தில் அமல்படுத்தியிருந்தார் மறைந்த முதல்வர் ஜெயலலிதா.

**அனைத்து மகளிர் காவல் நிலையம்:** 1992-ம் ஆண்டு முதலாவது அனைத்து மகளிர் காவல் நிலையத்தை உருவாக்கினார். தமிழகம் முழுவதும் 200 மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கியிருந்தார்.

**தொட்டில் குழந்தைத் திட்டம்:** பெண் குழந்தைகள் கொல்லப்படுவதைத் தடுக்க 1992-ல் சேலத்தில் தொட்டில் குழந்தைத் திட்டத்தை அமல்படுத்தினார். இத்திட்டத்தின் கீழ் குழந்தையை வளர்க்க முடியாதார் தங்களது கைக்குழந்தையை அரசு தொட்டிலில் போட்டுவிட்டால், இக்குழந்தைகளை அரசு பொறுப்பேற்றுக் கவனித்துக் கொள்ளும். மேலும் இக்குழந்தைகளைத் தத்துக்கொடுக்கவும் அரசுக்கு உரிமை உண்டு என்பதுதான் இத்திட்டம். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது தொடக்கம் தமிழ்நாட்டில் பெண் சிசுக் கொலை அதிகளவில் குறைந்தது. மேலும் பாலினத்தின் அடிப்படையில் கருக்கலைப்பும் குறைந்தது. இத்திட்டம் மூலம் 2011இல் தமிழகத்தில் பெண் குழந்தை வீதம் அதிகரித்தது.


(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

## தமிழகத்தின் புதிய முதல்வராக ஓ பன்னீர் செல்வம் பதவியேற்றார்

தமிழகத்தின் புதிய முதல்வராக ஓ பன்னீர்செல்வம் பதவியேற்றார். தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா காலமானதைத் தொடர்ந்து புதிய முதல்வராக ஓ. பன்னீர்செல்வம்



(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)











IP GOLDHOUSE 905-554-5890


















கனடா வரலாற்றில் எவரும் கண்டிராத சேவை
NEW RANGANAS JEWEL HOUSE
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீலீஸ்
நம்பிக்கை நாணயம் கைராசி ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
தங்க நகை சேமிப்புத்திட்டம்
கனடாவில் கைராசியான முதல்தர நகை மாளிகை
சிங்கப்பூர், டுபாய் நகைகள் wholesale & Retailலும் பெற்றுக்கொள்ளலாம்.
தங்கபிஸ்கட் 24KT அவுஸ்பார் கொயின்ஸ் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
பதிவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் 1 தங்க நாணயம் இலவசம்.
பழைய தங்க நகைகள் மிகவு கூடிய விலைக்கு வாங்கப்படும்.
நம்பகரமான கைராசியான ஒரே முதல்தர தங்கநகை விற்பனையாளர்கள்.
6055 Steeles Ave E Unit C102,
Scarborough, ON., M1X 0A7
Tel: 647-702-2159

Selling or Buying
Exclusive
Luxury Condo in Richmondhill
1BR, 1Bath room, parking & Locker
Assignment sale $309,000
Detached 2 Storey
From $350,900. Only one hour from GTA.
Occupancy: Sep 2017
ESSO
Esso Gas Station &Property
$625,000
Warden & Lawrence
B.Room: 3 + 1 Bath Room: 2
Fin. Basement; Sep. Entrance
$779, 000
Thas ThiruNavukkarasu
Sales Representative Dip-in-Eng.(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract




Friends
MATRIMONY
திருமணத் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# இரும்புப்பெண்மணி...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

**தாலிக்குத் தங்கம்:** முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சிகாலத்தில் 2011ஆம் ஆண்டுத் திருமணத்திற்குத் தங்கம் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம்



பிரபல சமூக சேவையாளர் மூவலூர் ராமாமிர்தம் பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தின் பிற்படுத்தப்பட்டோர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பட்டப் படிப்பை அல்லது டிப்ளோமோ படித்திருந் தால் அவர்களின் திருமணத்திற்கு 50,000 ரூபாய் ரொக்கமும், தாலிக்கு தேவையான 4 கிராம் தங்கத்தையும் தமிழக அரசு இத்திட்டத்தின் வாயிலாக அளிக்கிறது.

**புதிய வீராணம் திட்டம்:** சென்னை நகரின் குடிநீர் பஞ்சத்தை போக்க புதிய வீராணம் திட்டத்தை 2004ஆம் ஆண்டு அமல்படுத்தினார். அண்ணா, கருணாநிதி ஆட்சிக் காலங்களில் ஏட்டளவில் இருந்த இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி சென்னையின் குடிநீர் தாகம் தீர்த்தவர் ஜெயலலிதா.

**மழைநீர் சேகரிப்புத் திட்டம்:** 2001ஆம் ஆண்டு மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை கட்டாயமாக்கினார் ஜெயலலிதா. இதன் மூலம் சென்னை நகரின் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது.

**இலவச லாப்ரொப்:** 2011ஆம் ஆண்டு மாணவர்களுக்கு இலவச லாப்ரொப் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தினார். தமிழக அரசு நடத்தும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படித்துவரும் மாணவ மாணவிகளுக்குத் தங்களின் அறிவை மேம்படுத் திக்கொள்ளவும், தொழில்நுட்ப கல்விய றிவை சிறப்பான முறையில் பெறவும் விலையில்லா லாப்ரொப் வழங்கப்பட்டது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்த 3.25 லட்சம் மாணவர்கள் பயன்பெற்றனர்.

**அம்மா உணவகங்கள்:** தமிழகம் மட்டுமல்ல, உலக அளவில் ஏறெடுத்துப் பார்க்க வைத்த ஜெயலலிதாவின் உன்னத திட்டம் 2013இல் அறிமுகப்படுத்தப்பட்ட அம்மா உணவகம். இட்லி ரூ1க்கும் பொங்கல் ரூ5க்கும் வழங்கிய இந்த உன்னத திட்டம் தமிழகத்தைத் தவிர பிற மாநிலங்களிலும் பின்பற்றப்படுகிறது. தமிழ் நாட்டின் பெரு நகரங்களில் மலிவான விலையில் தரமான முறையில் மக்களுக்கு உணவு அளிக்க வேண்டும் என்று திட்டமிட்ட செல்வி ஜெயலலிதா அம்மா உணவகத்தை உருவாக்கினார். இப்புதிய திட்டத்தின் மூலம் 1 ரூபாய்க்கு இட்லி முதல் அதிகப்படியாக 10 ரூபாய்க்கு பல உணவுகளைச் சமானியர்களின் வயிறு நிரம்பச் சாப்பிடும் அளவிற்கு உணவளிக்கும் திட்டத்தை வடிவமைத்து, திறம்படச் செயல்படுத்தியுள்ளார். இதன்மூலம் பெரு நகரங்களில் மிகவும் குறைவான வருமானம் கொண்ட மக்கள் தினமும் போதுமான அளவிற்கு உணவு பெறுகின்றனர்.

**அம்மா குடிநீர்:** தவித்த வாய்க்குத் தண்ணீர். தமிழ்நாட்டில் போத்தல் தண்ணீர் 20-25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# தமிழகத்தின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பதவியேற்றார். தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா உடல்நலக் குறைவால் 75 நாட்களாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். திங்கள்கிழமை டிசெம்பர் 05, 2016 நள்ளிரவு 11:30 மணியளவில் ஜெயலலிதா காலமானதாக அப்பல்லோ மருத்துவமனை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

இந்த அறிவிப்பு வெளியாவதற்கு சற்று முன்பாக நடைபெற்ற அதிமுக எம்எல்ஏக் கள் கூட்டத்தில் அதிமுக சட்டசபை கட்சித் தலைவராக நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து தமிழகத்தின் புதிய முதல்வராக டிசெம்பர் 06, 2016 செவ்வாய்க்கிழமை அதிகாலை 1:20 மணியளவில் ஓ பன்னீர் செல்வம் பதவியேற்றார்.



அவருக்குத் தமிழகப் பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ் பதவியேற்பு பிரமாணம் செய்து வைத்தார். அவருடன் 31 அமைச்சர்களும் பதவியேற்றனர். ஒட்டுமொத்தமாக அனைத்து அமைச்சர்களும் ஒரே நேரத்தில் பதவியேற்றனர். முன்னதாக ஜெயலலிதாவின் மறைவுக்கு ஆளுநர் வித்யாசாகர் ராவ் இரங்கல் தெரிவிக்கும் குறிப்பை வாசிக்க 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



# அம்மாவின் அம்மா!

## அ.தி.மு.க. புதிய பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்படவுள்ள சசிகலா கடந்து வந்த பாதை

தமிழ்நாட்டை ஆளும் அதிமுக கட்சியின் சக்திமிக்க பதவியான பொதுச் செயலாளர் பதவியை கைப்பற்றும் போட்டியில் சசிகலா நடராசன் அனைவரையும் முந்தி முன்னிலையில் உள்ளார். அவர் தேர்ந்தெடுக்கப் படுவது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. சசிகலாவுக்குப் போட்டியாக இருக்கலாம் எனக் கருதப்பட்ட தமிழ் நாட்டின் இன்றைய முதல்வர் ஓ. பன்னீர் செல்வம், இந்திய நாடாளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை, எம். ஜி. ஆர். காலத்து அரசியல்வாதியான செங் கோட்டையன் உட்பட அமைச்சர்கள், அதிகமுக கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் போட்டியின்றி ஏகமனதாக சசிகலாவை பொதுச்-செயலாளராக தேர்ந்தெடுக்க முன்வந்து உள்ளனர். அடுத்த நான்கரை ஆண்டுகள் தமிழ்நாட்டின் உச்ச அதிகார மையமாக விளங்கப்போகும் சசிகலா, இந்த இடத்துக்கு சுலபமாக பெற்று விடவில்லை. மிகத் திட்டமிட்டு, தெளிவாக காய்களை நகர்த்தி, கடந்த 36 ஆண்டுகள் காத்திருந்து, இந்தப் பதவியைக் கைப்பற்றியிருக்கிறார். எப்படி? ஒரு பிளாஷ்பேக்.

ஜெயலலிதா வாழ்க்கையை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். அம்மா சந்தியாவுடன் இருந்த ஆரம்ப காலம், எம். ஜி. ஆரால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டு அவரது கவனிப்பில் இருந்த இடைக்காலம்,



மூன்றாவது எம். ஜி. ஆர். மறைவுக்கு பின்பான கடந்த 28 ஆண்டுகள். இந்த 28 ஆண்டுகளும் ஜெயலலிதாவின் நிழலாகக் கூடவே இருந்தவர், அவரால் 'உடன்பிறவா சகோதரி' என அழைக்கப்பட்ட சசிகலா.

தமிழக அரசியல் வரலாற்றில் உயிர்த் தோழி என்ற வார்த்தையே ஜெயலலிதா _ சசிகலா நட்பின் நெருக்கத்தால் உருவானதுதான். இரண்டாயிரம் ஆண்டில் 'சுற்றமும் நட்பும்' என்று ஒரு பிரபல பத்திரிகைத் தொடராக எழுதும் அளவுக்கு சசிகலாவின் நட்பும் அரசியல் தலையீடுகளும் இருந்தன. எண்பதுகளில் தொடங்கிய இவர்கள் நட்பின் கதை ஆலமரமாக வளர்ந்து ஜெயலலிதாவின் மரணப்படுக்கை வரையில் நீண்டு முடிந்திருக்கிறது.

ஜெயலலிதா _ சசிகலா நட்பு உருவானது, அது இவ்வளவு காலம் நீடித்தது, இன்று அதிமுக பொதுச் செயலாளர் பதவிக்கு சசிகலா பெயர் பரிந்துரைக்கப்படுவது எல்லாம் சசிகலாவின் கணவர் ம. நடராசனின் கச்சிதமான திட்டங்கள் மற்றும் அதை நேர்த்தியாக செயல்படுத்தியது ஆகியவற்றின் விளைவு. (நடராசனின் திட்டத்தின் சாதக பாதகங்கள் ஒருபக்கம் இருக்க, அவரது ஊக்கப்படுத்துதல் இல்லாமல் இருந்திருந்தால் ஜெயலலிதா அரசியலுக்கு வராமலே போயிருக்கக்கூடும் என்றும் சிலர் கணிக்கிறார்கள்.)

அப்போதைய தென்னாற்காடு மாவட்ட மக்கள்தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றியவர் ம. நடராசன். 1980 களில் எம். ஜி. ஆருக்குப் பிறகு அதிமுகவின் தலைமையைக் கைப்பற்ற வாய்ப்புள்ளவர் எனக் கருதப்பட்ட, அன்றைய அதிமுக கொள்கைப் பரப்பு செயலாளர் ஜெயலலிதாவுடன் நெருக்கமாகத் திட்டம் வகுத்தார் நடராசன். அப்போது தென்னாற்காடு மாவட்ட ஆட்சியராக இருந்த சந்திரலேகாவிடம் நல்ல நட்பு நடராசனுக்கு இருந்தது. ஜெயலலிதாவுடனும் நல்ல நட்பில் இருந்தார் சந்திரலேகா. இந்த வழியைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்ட நடராசன் முதலில் சசிகலாவை சந்திரலேகாவுக்கு அறிமுகப் படுத்தினார். சசிகலா அப்போது சென்னை அபிராம புரத்தில் வீடியோ கடை நடத்தி வந்தார். சந்திரலேகா மூலம் ஜெயலலிதாவுக்கு வீடியோ கேசட்டுகள் கொடுக்கும் வாய்ப்பு சசிகலாவுக்கு கிடைத்தது. இதற்காக அடிக்கடி போயஸ்கார்டன் சென்று வந்த சசிகலா, தனிமையில் இருந்த ஜெயலலிதாவுடன் அவரைக் கவரும் விதமாகப் பேசி நட்பானார். வீடியோ கேசட்டுகளின்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)


ஒரு புதிய சட்டம் உங்களது பணிக்கொடைகளைப் பாதுகாக்கிறது.

நீங்கள் பணிக்கொடைகளைச் சம்பாதிக்கிறீர்களா? நீங்கள் சேவைத் துறையில் வேலை செய்கிறீர்களா? அப்படியாயின், நீங்கள் உங்களது பணிக்கொடைகளையும் ஏனைய கொடைகளையும் பாதுகாக்கும் புதிய ஒன்ராறியோச் சட்டத்தைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அது சில விதிவிலக்குகளைத் தவிர, தொழில் தருநர்கள் உங்களது பணிக்கொடைகளையும் ஏனைய கொடைகளையும் பெறுவதிலிருந்து தடுக்கிறது.




Coin images© 2016 Royal Canadian Mint. All rights reserved /
Images des pièces© 2016 Monnaie royale canadienne. Tous droits réservés /

இச்சட்டம் உங்களுக்கு எவ்வாறு உதவுகிறதென
**ontario.ca/tips** இல் அறிந்து கொள்ளுங்கள்

ஒன்ராறியோ அரசாங்கத்தினால் கட்டணமளிக்கப்பட்டது

Ontario

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*
Brokerage Office : 3121–1396, Don Mills Rd, Toronto, ON, M3CB 0A7 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?

பவர் ஒப் சேல் பிரச்சினை ?

பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?

லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?

எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?

அவசர தேவைக்கு வீட்ட வைச்சு காசு எடுக்க வேணும் ?

வீடு கட்ட மோட்கேஜ் எடுக்க வேணும்?

ரீபைனான்ஸ் செய்ய வேணும்?

2வது, 3வது மோட்கேஜ் எடுக்கவேணும்?



## என் கேள்விக்கு என்ன பதில்?

WIN UP TO $100,000* WHEN YOU USE THE RIGHTBROKER™
ASK ME HOW!
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்" ✓

உங்களுக்கு பதில் கொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011



## வோக் இன் - திங்கள் - சனி 9.00 - 5.00 மணிவரை

ஜெ(Jey)இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



# தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளுடன் பேச்சுவார்த்தை!

இன, மத நல்லுறவை மேம்படுத்தினாலேயே 'நல்லாட்சி' அரசாங்கம் தெரிவித்து வரும் நல்லிணக்கம் சாத்தியமாகும். ஆனால், அந்த நிலைமையில் முன்னேற்றம் ஏற்படுவதை விடவும் தற்போது பின்னடைவு ஏற்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, முஸ்லிம் தரப்பினரை சீண்டுவதும், அவர்களை மத ரீதியாக புண்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுமான நடவடிக்கைகளை சில கடும்போக்காளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, பொது பல சேனா அமைப்பின் தலைவரான ஞானசார தேரர் மீண்டும் இந்த நிடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக முஸ்லிம் தரப்பினர் குற்றம்சாட்டி வருகின்றனர். அவரது குரோதமான நடவடிக்கைகள் குறித்த ஆதாரங்கள் பல பகிரங்கமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ள போதும், அரசாங்கம் அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதோடு, அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதானது முஸ்லிம் தரப்பினரை ஆத்திரமடையச் செய்துள்ளது. இது குறித்த கருத்துக்களும், கண்டனங்களும் தற்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தில் அமைச்சர்களாகவுள்ளவர்கள் மற்றும், அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஸ்லிம்களே தற்போது அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழக்கும் விதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞான-சார தேரர் தொடர்ந்தும் முஸ்லிம்களை நிந்தித்து வருவதற்கெதிராகவும், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கடந்த 3ம் திகதி பொலிஸ் மா அதிபரிடம் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் முறைப்பாடொன்றை அளித்துள்ளார்.

ஞானசார தேரர் அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பில் அல்லாஹ்வை மிகவும் கீழ்த்தரமான முறையில் திட்டியுள்ளதாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அதற்கான ஆதாரமாக ஊடகவியலாளர் சந்திப்பின் போது தேரர் தெரிவித்த கருத்துக்கள் அடங்கிய ஒளிப் பதிவு நாடாவையும் பொலிஸ் மா அதிபரிடம் அவர் சமர்ப்பித்துள்ளார். ஆனால் இந்த முறைப்பாடு குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்ட தாக தெரியவில்லை. சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இனமுறுகலை ஏற்படுத்தி வன்முறையைத் தூண்டும் வகையில் செயற்படும் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரரையும், அவரோடு இயங்கும் இனவாதக் குழுக்களையும் கைது செய்வதற்கு அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் றஹ்மானும் அண்மையில் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பமான பொது பல சேனா அமைப்பு, முஸ்லிம்களுக்கெதிரான மிக மோசமான



வன்முறைகளை அரங்கேற்றியது. மஹிந்த அரசு பொது பல சேனாவின் இந்த மோசமான செயற்பாட்டை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் அவர் களின் இனவாத வன்முறை செயற்பாட்டுக்கு மறைமுகமாக அங்கீகாரத்தையும் வழங்கியது. முஸ்லிம்களுக்கு பலத்த சேதங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்திய அளுத்கம, பேருவளை கலவரங்களுக்கு காரணகர்த்தாவாகிய ஞானசார தேரர் மீது அப்போதைய மஹிந்த அரசு எவ்வித சட்ட நடவடிக் கையையும் எடுக்கவில்லை. கைது செய்யப்படுவதற்கான தகுந்த ஆதாரங்கள் இருந்தும், ஞானசார தேரர் அன்று கைது செய்யப்படவுமில்லை. இன்று கூட ஞானசார தேரருக்கு எதிராக பல முறைப்பாடுகள் காவல்துறையிடம் பதியப்பட்டு வருகின்றன. ஆனால் இதுவரை அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் பொலிஸார் மேற்கொள் வதாகத் தெரியவில்லை.

நாட்டில் சட்டம் சகலருக்கும் சமம் என்று போதிக்கப்படுகிறது. ஆனால் பொது பல சேனா அமைப்பினரின் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளை தட்டிக்கேட்பதற்கோ, தடுத்து நிறுத்துவதற்கோ அந்த அமைப்பிற்கு எதிராக சட்டங்களை அமல் படுத்துவதற்கோ இன்றும் கூட தயக்கம் காட்டப்படுகின்றமையே உணர முடிகிறது என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வும் தனது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். சமாதானம் மற்றும் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டு வரும் பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் மற்றும் மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதி அம்பிடிய சுமனரத்ன தேரர் ஆகியோரை உடனடியாக கைது செய்ய வேண்டும் என கடந்த 08ம் திகதி நாடா-ளுமன்றத்தில் அவர் தெரிவித்தார் ஆனால் இதற்கு பதிலளித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ, அவ்வாறு உடன-டியாக நடவடிக்கை எடுக்க முடியாது எனவும், இந்த விடயம் தொடர்பில் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும்

**- விகிர்தன் -**

குறிப்பிட்டார். இதனால் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸவுக்கும் இடையில் சபையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலை நாங்கள் வரவேற்கின்றோம். நீங்கள் இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்கும் விடயங்களை நாங்கள் பாராட்டு கின்றோம். ஆனால், இந்த கலந்துரையாடலின் பின்பும் முஸ்லிம்களை மனவேதனைக்கு உட்படுத்தும் வகையில் பொது பல சேனா பொதுச் செயலாளர் ஞானசார தேரர் உரையாற்றியுள்ளார். அவ்வாறாயின் இந்த கலந்துரையாடலில் என்ன பயன் என்று கேள்வி எழுப்பினார். இதற்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டுமாயின், இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் சட்டத்தை அமல் படுத்துவதற்கான ஆலோசனைகளை நீதி அமைச்சராகிய நீங்கள் வழங்க வேண்டும் என கடுமையாக அவர் வாதிட்டார்.

மோதல்களை தூண்டும் வகையில் இனவாதத்துடன் செயற்படும் பௌத்த தேரரை கைது செய்வதை விடுத்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்ப தானது வேதனையளிக்கிறது என அமைச்சர் ரிசாட் பதியூதீன் நாடாளுமன்றில் உரையாற்றுகையில் மீண்டும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 08ம் திகதி நடைபெற்ற புத்தசாசன அமைச்சின் செலவினத் தலைப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மட்டக்களப்பில் சுமன ரத்ன தேரர் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக செயற்பட்டு வருவதுடன், இனவாத செயற்பாடுகளின் மூலம் மோதல்களை ஏற்படுத்த முயன்று வருகிறார். இவ்வாறு தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு எதிராக கடும்போக்குடன் செயற்பட்டுவரும் பௌத்த தேரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை விடுத்து, அவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதானது வெட்கத்துரியதும், வேதனைக்குரியதுமான செயற்பாடாகும். இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இருவேறு சட்டங்கள் காணப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

குற்றமிழைத்தவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டின் நீதித்துறை மீது பொதுமக்கள் நம்பிக்கை கொள்வர் என்றும் தெரிவித்தார். குற்றமிழைத்த தேரர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதை உலமா கட்சி மிகக் கடுமையாக கண்டித்துள்ளதோடு, அக்கட்சி அரசாங்கத்தையும் கடுமையாகத் தாக்கியுள்ளது. இவ்வாறான நடவடிக்கையானது நல்லாட்சியின் மிக மோசமான வரலாற்றுத் துரோகம் என உலமா கட்சி தெரிவித்துள்ளது.

இதுபற்றி அக்கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளதாவது-: மஹிந்த ராஜபக்ஸ ஆட்சிக்காலத்தில் ஞானசார என்பவர் எவ்வளவோ துள்ளிக்குதித்தார். ஆனால் மஹிந்த அவரை-யோ அவரது கோரிக்கைகளையோ கணக்கில் எடுக்கவில்லை.

ஜனாதிபதி மாளிகையில் சமயத் தலைவர்களுடன் பல சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இவை எதிலும் ஞானசார தேரர் மத குருக்களுக்கு சரி சமமாய் அழைக்கப்படவில்லை. ஆனால் இந்த அரசு அவரை தலையில் தூக்கி வைத்திருப்பதன் மூலம் ஞானசாரவுக்கு பின்னால் மைத்திரியும் ரணிலும் இருக்கிறார்கள் என்ற தமது நீண்ட கால சந்தேகத்துக்கு வலுச்சேர்க்கிறது என்றும், ஜனாதிபதி செயலகம் மத

(தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இரும்புப்பெண்மணி...

## 03ஆம் பக்கத்தொடர்ச்சி

நிலையில் தமிழக அரசு மானிய விலையில் பஸ்நிலையம், ரயில் நிலையம் என மக்கள் கூட்டம் அதிகம் இருக்கும் பகுதிகளில் 10 ரூபாய்க்குத் தண்ணீர் போத்தல்களை வழங் கும் திட்டத்தை அறிவித்துத் தற்போது சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

**அம்மா குழந்தை பராமரிப்புப் பொருட்கள்:** தொட்டில் குழந்தைத் திட்டம், தாலிக்குத் தங்கம் என்னும் திட்டங்களைத் தாண்டி தமிழக மக்களின் மனதில் நீக்கா இடம்பிடித்திருந்தது அம்மா குழந்தை பராமரிப்புப் பொருட்கள் திட்டம். தமிழ்நாட்டின் அரசு மருத்துவமனையில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் 1000 ரூபாய் மதிப்புள்ள 16 குழந்தை பராமரிப்புப் பொருட்கள் முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கான துண்டு, மேலாடை, மெத்தை, கொசுவலை, குழந்தைகளுக்கான எண்ணெய், சோப், பொம்பை, மருந்துகள் (குழந்தைக்கும் தாய்க்கும்), சுத்திகரிப்பான் ஆகியவை இதில் அடங்கும்.

**அம்மா கிரைன்டர், மிக்ஸி, ரேபிள் பான்:** 2011ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சர் ஆசனத்தைப் பிடிக்கத் தனது தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டவாறு மக்களுக்கு விலையில்லா அம்மா கிரைன்டர், மிக்ஸி, ரேபிள் பான் ஆகியவற்றை அளித்தது தமிழக அரசு.

**அம்மா காப்பீடு:** 2012ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் தமிழக மக்களுக்கு அனைவருக்கும் மேம்படுத்தப் பட்ட மருத்துவக் காப்பீடு திட்டம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தை அம்மா காப்பீடு என்ற பெயரில் தமிழக அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ் ஒருவர் ஒரு வருடத்திற்கு 1 லட்ச ரூபாய் மதிப்பிலான மருத்துவச் சேவைகளை இலவசமாகப் பெறலாம்.

**அம்மா பார்மஸி:** சந்தையில் நாளுக்கு நாள் மருந்துபொருட்களின் விலை அதிகரித்து வரும் நிலையில், மக்களுக்கு அன்றாட நோய் மற்றும் பாதிப்புகளுக்கான மருந்துப் பொருட்களை மலிவான விலையிலே அளிக்க அம்மா பார்மஸி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தினசரி சம்பளம் வாங்குவோர்முதல் பலதரப்பு மக்களும் மலிவான விலைக்கு மருந்து பொருட்களை வாங்க முடிந்தது.

**பிற திட்டங்கள்:** இதனைத் தாண்டி அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், அம்மா சேவை மையம் எனப் பல திட்டங்களை அடுக்கிக்கொண்டு போகலாம். இத்தகைய திட்டங்கள் மூலம் அம்மா என்ற சொல்லுக்கு மக்கள் மத்தியில் புதிய அர்த்தம் பிறந்தது மட்டும் அல்லாமல் வர்த்தகச் சந்தையில் "அம்மா" என்ற புதிய பிராண்ட் உருவானது.

## முதலமைச்சர் ஜெயலலிதா-வின் வாழ்க்கைக் குறிப்பு

ஜெ. ஜெயலலிதா என்ற கோமளவல்லி ஜெயராம் கர்நாடகாவில், மேல்கோட்டை ஊரில் வாழ்ந்த ஜெயராம் - வேதவல்லி தம்பதிக்கு மகளாக 24 பெப்ரவரி 1948ஆம் நாள் பிறந்தார். திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் தனது பூர்வீக ஊர் என்று அடிக்கடி



கூறுவார் ஜெயலலிதா. இவரது தாத்தாவின் குடும்பம், ஸ்ரீரங்கத்தில் இருந்து மேல்கோட்டைக்கு இடம் பெயர்ந்த குடும்பம். தந்தை ஜெயராமின் மறைவிற்குப் பின்னர் பெங்களூருவிற்கு இடம் மாறிய ஜெயலலிதாவின் குடும்பம், அவரது தாயாருக்குக் கிடைத்த திரைப்பட வாய்ப்புகளால் சென்னையில் குடியேறியது.

வேதவல்லியாக இருந்த ஜெயலலிதாவின் தாயார் சினிமாவில் நடிப்பதற்காக சந்தியா வாக மாறினார். சென்னைக்கு வந்த பின்னர், சேர்ச் பார்க் பிரசன்ரேஷன் கொன்வென்ட் இல் படித்த ஜெயலலிதா மெட்ரிக் தேறினார். ஸ்ரெல்லா மேரீஸ் கல்லூரியில் புகுமுக வகுப்பில் படிக்க அனுமதி கிடைத்த நேரத்தில்தான் திரைப் படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. எனவே படிப்பைக் கைவிட்டு நடிகையானார்.

ஜெயலலிதா முன்னாள் தமிழக முதல்வரும், இந்தியாவின் 3-வது பெரிய கட்சியின் மாபெரும் தலைவரும், அரசியல் தலைவரும், பிரபல முன்னாள் தென்னிந்தியத் திரைப்பட நடிகையும் ஆவார். ஜெ. ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக 1991 முதல் 1996 வரையும், 2001 ஆம் ஆண்டில் சில மாதங்களும், பின்னர் 2002 முதல் 2006 வரையும், 2011 முதல் 2014 வரையும் இருந்தார். 2015 மே 23 முதல் இறக்கும் வரையில் முதலமைச்சராகப் பணிபுரிந்தார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த இவரை 'புரட்சித் தலைவி' எனவும் 'அம்மா' எனவும் தமிழக மக்கள் அழைப்பர்.

அரசியலுக்கு நுழைவதற்கு முன்னர் இவர் 127 இற்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, கன்னட மொழித் திரைப்படங்களில் முன்னணிப் பாத்திரங்களில் நடித்திருந்தார். 1965 இல் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆருடன் ஆயிரத்தில் ஒருவன் படத்தில் நடிக்கத் தொடங்கிய ஜெயலலிதா 28 படங்கள் எம்.ஜி.ஆருடன் கதாநாயகியாக நடித்தார். ஜெயலலிதா சிறந்த நடிகை மட்டுமின்றி, மிகச் சிறந்த குரல்வளமும் மிக்கவராகத் திகழ்ந்தவர்.

சிறுவயதிலேயே பரதநாட்டியம், கர்நாடக இசை கற்றவர் ஜெயலலிதா. சினிமாவில் நுழைந்து சிறந்த நடிகை எனப் பெயரெடுத்த அவர், தனது இனிமையான குரலால் சில தமிழ்ப்படங்களில் பாடல்களும் பாடியுள்ளார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் 1972ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி திமுகவிட்டு நீக்கப்பட்டார். அடுத்த ஒரு வாரத்தில் அதாவது ஒக்ரோபர் 17ஆம் திகதி அதிமுகவைத் தொடங்கினார். சரியாக 10 ஆண்டுகள் கழித்து 1982ஆம் ஆண்டு எம். ஜி. ஆரால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்டார் ஜெயலலிதா.

1982ஆம் ஆண்டு அதிமுகவில் அதிகார பூர்வமாக இணைந்த ஜெயலலிதாவுக்கு அடுத்த ஆண்டே கொள்கை பரப்புச் செயலர் பதவியை வழங்கினார் எம். ஜி. ஆர். அதிமுகவில் அப்போது எம். ஜி. ஆருக்கு அடுத்தபடியான நெடுஞ்செழியன், ஆர்.எம். வீரப்பன், ஹண்டே, கே.ஏ. கிருஷ்ணசாமி, எஸ். டி. சோமசுந்தரம், பொன்னையன் எனப் பலரும் இருந்தனர். இவர்கள் யாருக்குமே ஜெயலலிதாவை அதிமுகவுக்குள் எம். ஜி. ஆர் கொண்டு வந்தது பிடிக்கவில்லை. ஜெயலலிதாவை அதிமுகவில் இருந்து வெளியேற்றியே தீர வேண்டும் என முனைப்புகாட்டிய அணிக்கு தலைமை தாங்கியவர் ஆர்.எம். வீரப்பன். இவர்களின் சகுனி ஆட்டங்களில் சில நேரம் ஜெயலலிதா வீழ்ந்தது உண்டு. ஆனால் ஒருபோதும் நிரந்தரமாக ஒதுங்கிப் போக மறுத்தார் ஜெயலலிதா. தம்மை வீழ்த்தியவர்களை வெல்ல வேண்டும் என்ற வேகம், அதற்கான விவேகம்தான் அவரிடம் இருந்தது. 1984ஆம் ஆண்டு ஜெயலலிதாவை ராஜ்யசபா எம்.பி.யாக்கினார் எம். ஜி. ஆர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சியை விட்டே வெளியே போனார் எஸ். டி. சோமசுந்தரம். இதே எஸ்.டி. சோமசுந்தரம்தான் பின்னாளில் முதல்வர் ஜெயலலிதாவின் பிரசார வாகனத்தில் தொங்கிக் கொண்டு வந்தவர்.

அப்பல்லோவில் உடல்நலக் குறைவால் எம்ஜிஆர் அனுமதிக்கப்பட்ட போது அதற்கு ஜெயலலிதாவே காரணம் என எதிர்ப்புக் கோஷ்டி பிரசாரம் செய்தது. அப்பல்லோ மருத்துவமனைக்குள் ஜெயலலிதாவை அந்தக் கோஷ்டி அனுமதிக்கவே இல்லை. அதே அப்பல்லோவில் தான் 75 நாட்கள் சிகிச்சை பெற்ற நிலையில் தனது கடைசி மூச்சை நிறுத்திக் கொண்டார் ஜெயலலிதா.

ஜெயலலிதாவுக்கு 15,000 எம். ஜி. ஆர். மன்றங்களின் ஆதரவு இருப்பதாக அப்போது கூறப்பட்டது. ஆனால் அனைத்து லக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் ஜெயலலிதா குறித்து ஆபாசமாகப் பேசியதுடன் எம்ஜிஆர் உடல்நலக் குறைவுக்கும் அவரே காரணம் எனக் குற்றம்சாட்ட பெரும் சர்ச்சையாகிப் போனது. வீரப்பனின் சிஷ்யபிள்ளையாக இருந்தவர் அப்போ தைய வேளாண் அமைச்சரான காளிமுத்து. ஜெயலலிதாவிடம் இருந்து கொள்கை பரப்புச் செயலர் பதவி பறிக்கப்பட்டு மீண்டும் பொறுப்பு வழங்கப்பட்டபோது அதை மிகக் கடுமையாக வெளிப்படை யாக எதிர்த்தவர் காளிமுத்து. அனைத்து லக எம்ஜிஆர் ரசிகர் மன்றத் தலைவராக முசிறிபுத்தனோ ஜெயலலிதாவை சிபிஜ உளவாளி என விமர்சித்தார். ஜெயலலிதா வுக்கு எதிராக

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

MORTGAGE PROBLEM?... Too Much Debt?... privacy guaranteed...
$50,000...$100,000...$500,000...$750,000... $1.75 Million... funds for
MORTGAGE ALLIANCE
Corporate Office: 2005 Sheppard Ave E. Suite 200, Toronto ON M2J 5B4
Toll Free: 1-877-366-3487
- Refinance & pay off loans, credit cards, 2nd mortgage...
- Consolidate 1st and 2nd mortgages...
- Purchase properties - Residential & Commercial...
- Construction Financing...
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 10002312
647-922-5704
Twitter @OK_Mortgages





# மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உரிமைகளை மதித்தில்!

- ஆதித்தன் -

உலகம் முழுவதும் டிசெம்பர் 03ம் திகதி, மாற்றுத்திறனாளிகளுக்கான நாளாக அனுஷ்டிக்கப்படுகின்றது. கடந்த 03ம் திகதி இந்நாள் இலங்கையிலும் அனுஷ்டிக்கப்பட்டது. குறிப்பாக - வடக்கு, கிழக்கில் இந்நாள் சில கூட்டங்கள் கலந்துரையாடல்கள் மூலம் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் இடம்பெற்ற போரின் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் அவயவங்களை இழந்துள்ளனர். குறிப்பாக, வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் காயமுற்று அவயவங்களை இழந்துள்ளவர்கள் தொடர்பில் முக்கியமாக கவனமெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இதனை இலங்கை அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைவிட வடக்கிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் மற்றும், வடக்கில் நிர்வாகத்தினை மேற்கொள்ளும் வட மாகாணசபை இதற்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

முதலில் மாற்றுத்திறனாளிகளாக உள்ளவர்கள் தொடர்பில் சரியான புள்ளிவிபரங்களை மேற்கொள்ளுதல் - அடுத்ததாக, அவர்களின் பாதிப்புக்கள் குறித்து ஆராய்ந்து அவர்களை வகைப்படுத்தல் - பின்னர், அவர்களுக்கு எவ்விதத்தில் உதவலாம்? அவர்களின் பொருளாதாரத்தினை மேற்படுத்துவதற்கான வழிகள் என்ன? அவர்களில் இளையோராக இருப்பவர்களுக்கான கல்வி வசதிகளை வழங்குவது, சுய தொழில் பயிற்சிகளை வழங்குவது, பயிற்சி பெற்றவர்களுக்கான தொழில் வாய்ப்புக் குறித்த திட்டமிடல் என, மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்திட்டம் ஒன்றை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால், யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்து விட்ட போதும் இவ்வாறானதோர் செயற்பாடு நடைபெற்றுள்ளதா என்று பார்த்தால் இன்னும் அவ்வாறு நடைபெறவில்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான அவசரமான - அடிப்படையான உதவிகள் கூட இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை என்பது தான் வேதனையானது.

பிறப்பிலும், விபத்துக்களாலும், போரினாலும் பாதிக்கப்பட்டு ஊனமுற்றவர்கள் கணிசமாக உள்ளனர். இன்னும் அவர்கள் தொடர்பில் புள்ளிவிபரங்கள் கூடப் பெறப்படாத நிலையே காணப்படுகின்றது. இறுதிக் கட்டப் போரில் இறந்தவர்கள் தொகையினைக் கூட வடக்கின் நிர்வாகத்தினால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனை வட மாகாண முதலமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளார்.



முல்லைத்தீவில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் இதனை அவர் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். எனவே, நாங்கள் ஆரம்பக் கட்ட முயற்சியில் கூட இன்னும் இறங்கவில்லை. பாதிப்புற்றோர் தொடர்பிலான சரியான புள்ளிவிபரத்தைப் பெற முடியாவிட்டால் அவர்களுக்கான உதவித் திட்டங்களை வகுத்துச் செயற்படுவது முடியாத காரியம். உதவ முன்வரும் அமைப்புக்களிடம் உதவி கோரும் போது அதற்கான திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்குப் புள்ளிவிபரம் என்பது அத்தியாவசியமானது.

தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென சில திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் 4 மணி நேரம் வேலை செய்தாலேயே முழு ஊதியம் வழங்கப்படுவது - மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் குறைபாட்டினைக் கண்டறிந்து தேவையான உபகரணங்கள், சான்றிதழ்கள், உதவித்தொகை, சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் வழங்குதல் - பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவீத வீடுகள் ஒதுக்கீடு - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கென சிறப்புத் தேர்வு - ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு- ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச வயது வரம்பு 45 இலிருந்து 18 ஆகக் குறைப்பு.

இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட இலவச ஸ்கூட்டர்கள் - செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு நவீன காதொலிக் கருவிகள் - பார்வைத்திறன் குறையுடைய மாணவ, மாணவிகளுக்கு எழுத்துகளைப் பெரிதாக்கிப் படிப்பதற்கான கருவிகள் - பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ஒளிரும் மடக்குச் குச்சிகள் - மாற்றுத் திறனாளிகளுக்குப் பேருந்துப் பயணச் சலுகை - குடும்பத்தில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருந்தால் அக்குடும்பத்திலுள்ள அனைவருக்கும் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன் போன்ற பல திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இவ்வாறான செயற்திட்டம் ஒன்றை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத் தேவை இலங்கையிலும் உள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றிருப்பவர்களுக்கு இவ்வாறானதொரு செயற்திட்டம் நடைமுறைப்படுத் தப்படுமானால் அது அவர்களின் வாழ்வில் ஒளியூட்டும் திட்டமாக அமையும்.

வடக்கில், வன்னியில் போரினால் காயமுற்று ஊனமுற்றிருப்பவர்களை சந்திக்கும் போதெல்லாம் அவர்களின் பிரச்சினைகளை செவி மடுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அவர்களது அத்தியாவசிய தேவையான மருத்துவ உதவிகள் கூட சரியான வழிமுறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். வன்னியின் பல பகுதிகளில் வாழும் மாற்றுத் திறனாளிகள் தங்கள் மருத்துவ தேவைகளுக்காகத் தூர இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு செல்ல வேண்டியிருக்கும் போது, அவர்களுக்கான போக்குவரத்து உதவிகள் கூடக் கிடைப்பதில்லை.

மாற்றுத்திறனாளிகள் பேரூந்துகளில் பயணம் செய்யும் போது அவர்களுக்கு அமர இடம்கொடுக்கக் கூட எவரும் முன்வருவதில்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள். அவர்களுக்கான இருக்கை ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதிலும் கூட அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. பேரூந்து நடத்துநர்கள் கூட மாற்றுத்திறனாளிகளை கவனத்தில் எடுப்பதில்லை. வடக்கிலேயே இந்த நிலை காணப்படுகின்றது. எமது சமூகத்திலுள்ள மோசமான மனப்பான்மையினைத்தான் இது வெளிப்படுத்துகின்றது. தங்களுக்காக எவரும் அனுதாபப்படத் தேவையில்லை, மாற்றுத்திறனாளிகளுக்குள்ள அடிப்படை உரிமைகளை அடையளம் கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தினாலேயே போதுமானது என வன்னியிலுள்ள மாற்றுத்திறனாளிகள் தெரிவிக்கின்றனர். சமூத்தினருக்கு இதற்கான விழிப்புணர்வை சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் வழங்க வேண்டியதும் அவசியமாகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் மாற்றுத்திறனாளிகள் சிலரை சந்தித்த போது அவர்கள் சில அத்தியவசிய தேவைகளை முன்வைத்தனர். ஊடகங்கள் ஊடாக அவற்றை வெளிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டனர். மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ வசதிகளை செய்து கொடுத்தல்- தொழில்வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மூன்று வீத ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தவது - தொழில் வாய்ப்பு மற்றும் பரீட்சைகள் போன்ற விண்ணப்பங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாளத்தை உறுதிப்படுத்தல்- பொதுமக்கள் பயன்பாட்டுக்கென அமைக்கப்பட்டுள்ள அனைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் அங்கவீனர்கள் அணுகுவதற்கான வசதிகள்- பேரூந்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தையாவது விட்டுக்கொடுத்தல்- பார்வையற்ற ஒருவர் வெண்பிரம்பு அடையாளத்துடன் வரும்போது பேரூந்து தரிப்பிடம் இல்லாத இடங்களிலும் அவர்களை ஏற்றி இறக்கும் செயற்பாடு-இவற்றை அனுதாபத்துடன் செய்யாவிடினும், மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உரிமைகளை மனதில் கொண்டு மேற்கொண்டாலேயே போதுமானது என்று அவர்கள் கூறினர்.

வருடம் தோறும் வருகின்ற மாற்றுத்திறனாளிகள் நாளை அனுஷ்டிக்கும் வகையில் கூட்டங்களை மட்டும் நடத்தாது அவர்களுக்கான செயற்பாடுகளை களத்திலிறங்கி மேற்கொள்ள வேண்டியது மக்கள் பிரதிநிதிகளதும், பொது அமைப்புக்களினதும், ஒட்டுமொத்த சமூகத்தினரதும் கடமையாக அமைய வேண்டும்.

26 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

# Final EXAM Review 50 hrs.

# G12 Advanced Function

## Last Oppotunity of utilizing Christmas Break

* Starting ASAP

மாணவ, பெற்றோர்களே!

**G12 Advanced Function,** ஆனது சிறந்த பல்கலைக்கழகங்களின் அனுமதிக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஓர் பாடமாகக் கருதப்படுகிறது. தை மாதத்தின் இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ள இப்பாடத்தின் இறுதிப் பரீட்சையில் மாணவர்கள் 90%மும் அதற்கு மேற்பட்ட அளவிலும் இதில் சித்தியீட்டுகையில், மாணவர்கள் இப்பாடத்தில் அதி சிறந்த உயர் புள்ளியினை ஈட்டும் சந்தர்ப்பத்தைப் பெறுகின்றனர். இச் சாத்தியமான நிகழ்வு, உக்ரமான இவ் 50 மணிநேர விஷேட பயிற்சியில் கலந்துகொள்வதன்மூலம் நிட்சயமாக ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதற்கான மிகப்பெரிய இறுதிச் சந்தர்ப்பமானது, எதிர்கொள்ளவுள்ள நத்தார் விடுமுறையினைப் பயன்படுத்துவதைத்தவிர வேறுநல் உபாயம் ஏதுமன்று.

கடந்தகால வருடங்களில் இவ்விடுமுறையின் போது பங்கேற்று ஏறக்குறைய 60% இல் இருந்து 80% த்திற்கு மேலாக பெறுபேறு ஈட்டிய மாணவர் எம்மால் உருவாக்கப்பட்டமையும் இதில் குறிப்பிடவல்லது. மாணவர்கள், தமது இயலாமை எனும் நம்பிக்கையினை போக்கும் இவ் இறுதிக்கட்ட வாய்ப்பினை பயன்படுத்துவதன் மூலம், தாம் எதிர்பார்க்கும் சீறந்த எதிர்காலக் கனவினை நனவாக்க முடியும் என்பது, எமது அனுபவ உண்மையாகும்.

கால அவகாசத்தை மிகவிரைவாக்கிக்கொள்ளுங்கள்.

**MATH WORLD**
MOST ADVANCED TALENTED HELP
- A private math institute -

*"Teaching Experience in Math for more than 23 years"*

**416-666-5515**
*Markham & Steeles*

# தமிழ் நாட்டின் புதிய முதல்வர் ஓபிஎஸ் வாழ்க்கைக் குறிப்பு

மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதல்வராகியிருக்கிறார் ஓட்டக்கார தேவர் பன்னீர்செல்வம் என்ற ஓ. பன்னீர்செல்வம். இந்தியாவின் இன்றைய பிரதமர் நரேந்திர மோடி டீக்கடையில் வேலை பார்த்தவர் என்றால் தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் சொந்தமாக ஒரு டீக்-கடை நடத்தியவர்!

விசுவாசத்துக்கு ஒரு ஸ்டிக்கர் ஒட்டச் சொன்னால் தயங்காமல் ஓ. பன்னீர் செல்வம் படத்தைத்தான் முதலில் அதிமுககாரர்கள் ஒட்டுவார்கள். அந்தளவுக்கு, பல ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதும், அதனால் மனம் சஞ்சலப்படாமல் 'அம்மா' (ஜெயலலிதா) விசுவாசத்தில் உறுதியாக இருந்தவர் ஓபிஎஸ் என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஓ. பன்னீர்செல்வம். அந்த விசுவாசத்துக்குக் கிடைத்திருக்கும் பரிசுதான் இன்றைய தமிழ்நாட்டின் முதல்வர் பதவி. ஜெயலலிதாவுக்கு அடுத்து யார் என்ற கேள்விக்கே இடமில்லாமல், அவரால் அங்கீகரிக்கப்பட்டவராக, 'அம்மா' அடையாளம் காட்டிச் சென்ற நபராக, அதிமுகவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார் ஓபிஎஸ். இவருடைய ஒவ்வொரு நடவடிக்கையும் அம்மாவால் வடிவமைக் கப்பட்டது என்றே நினைக்கிறார்கள் கட்சிக்காரர்கள்.



**- சிவதாணு -**

ஓ. பி. எஸ். வாழ்க்கை அபாரமான பல திருப்புமுனைகள் கொண்டது. தேனி மாவட்டம் பெரியகுளத்தில் 1951 ஜனவரி 14ஆம் தேதி பிறந்தவர் பன்னீர்செல்வம். அப்பா பெயர்: ஓட்டக்காரத் தேவர். அம்மா பெயர்: பழனியம்மாள். தங்கள் குல தெய்வமான பேச்சியம்மன் பெயரை நினைவில் கொண்டு 'பேச்சிமுத்து' என்றுதான் முதலில் ஓ.பி.எஸ்.ஸுக்கு பெயர் வைத்திருக்கிறார்கள். குடும்பத்தில் மூத்த வரான ஓட்டக்கார தேவர் அண்ணன் (ஓ.பி.எஸ்ஸின் பெரியப்பா) பெயரும் பேச்சிமுத்து. பொதுவாக மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் பெண்கள் மாமனார், கணவர், கணவருடன் பிறந்தவர் கள் உட்பட குடும்ப ஆண்கள் பெயரை உச்சரிக்க மாட்டார்கள். இதனால், குழந்தை பேச்சிமுத்துவை பன்னீர்செல்வம் என்று வீட்டுக்குள் கூப்பிட்டார்கள். இப்படி ஓ. பேச்சிமுத்து, ஓ. பன்னீர்செல்வம் ஆனார். இவருடன் பிறந்தவர்கள் எட்டு பேர் நான்கு சகோதரர்கள், நான்கு சகோதரிகள்.

பன்னீர்செல்வம் தந்தை ஓட்டக்கார தேவர் விவசாயத்துடன் வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கும் தொழிலும் செய்து வந்தார். ஆரம்பத்தில் பெரியகுளம் மார்கெட்டில் மட்டும் வட்டித் தொழில் செய்து வந்தார் ஓட்டக்கார தேவர். இவர் குழந்தைகள் பெரியவர்கள் ஆனதும் குடும்பத் தொழிலை விரிவுபடுத்தி லாரிகளுக்கு ஃபைனான்ஸ் கொடுக்கும் தொழிலில் இறங்கியது.

பள்ளிப் படிப்பை சொந்த ஊரான பெரியகுளத்தில் முடித்த பன்னீர்செல்வம், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் பிஏ வரலாறு படித்தார். அதன்பிறகு குடும்பத் தொழிலில் இறங்கிய பன்னீர்செல்வம் அத்துடன் பால் பண்ணை ஒன்றையும் நடந்தினார். மேலும், தனது நண்பர் ஒரு-வருடன் இணைந்து, பெரிய குளம் பிரதான சாலையில் தனது பெயருடன் மனைவி விஜயலட்சுமி பெயரையும் சேர்த்து பி.வி. கேன்டீன் என்ற பெயரில் டீ கடை திறந்தார். 1970இல் ஒரு சின்ன டீ கடையாக செயல்பட்ட நாட்களில் இக்கடையில் டீ மாஸ்டராக இருந்தவர் பன்னீசெல்வம்தான். படிக்கும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...






# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர்: 477

2016ஆம் ஆண்டின் இறுதி இதழாக இது வெளிவருகின்றது. இந்தப் பிரசுரத்தில் ஆதன வியாபாரத்தில் இவ்வாண்டு நடந்தவற்றைப் பற்றிப் பார்க்கலாம். இதன் தொடர்ச்சியாக புதிய வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் எவ்வாறான மாற்றம் ஏற்படலாம் என ஆராயலாம்.

பல வருடங்களாக குறிப்பாக கடந்த ஐந்து ஆண்டுகளாக அல்லது 2008/2009 இல் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார இறுக்கத்திற்குப் பின்னர் கனேடிய ஆதனவியாபாரம் புதியதொரு பாதையை எடுத்தது. இந்நிலைமை ஆரம்பத்தில் நிலத்துடன் அமைந்துள்ள வீடுகளிலேயே அதிகமாகக் காணப்பட்டது. இவற்றை பற்றி முந்தைய வருடங்களில் நாமும் நமது இல்லமும் கட்டுரைகளில் வெளிவந்திருந்தது.

இதன் தொடர்ச்சியினை அடுக்குமாடி மனைகளில் காணக்கூடியதாக உள்ளது. என்னுடைய எதிர்பார்ப்பில், இந்நிலைமை குறிப்பிட்ட காலத்திற்குத் தொடரலாம். இதற்குக் காரணமாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

• ஏற்கனவே நிலத்துடன் சேர்ந்த வீடுகளின் (Detached, Semi detached Freehold town houses) விலை மிக அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் நகரத்தை அண்டியுள்ள பகுதியில் ஆதனமுதலீடு என்பது பலரிற்கு

## அனைவரிற்கும் எனது ‘நத்தார்தின நல்வாழ்த்து’

முயல் கொம்பாகவே தோன்றுகின்றது.

அத்துடன் முதல் தடவை வாங்குபவர்களிற்கு ஆரம்ப முதலீடு என்பது மிகவும் கடினமானதாகக் காணப்படுகின்றது. ஆனால் இன்றைய சூழ்நிலையில்

• குறைந்த வட்டிவீதம்

• புதியவர்களின் தொடர்ச்சியான கனேடிய வருகை. இதில் வசதியானவர்கள், (பணம் படைத்தவர்கள்) தொழில்ரீதியாக புலம் பெயர்ந்தவர்கள், மேல்நிலைப்படிப்பிற்கான மாணவர்கள், தஞ்சம் கோருபவர்கள் அடங்குவர்.

இவர்களின் வருகை கனேடிய இருப்பிடங்களிற்கு மேலதிக இறுக்கத்தை ஏற்படுத்துகின்றது. புதிதாக வருபவர்கள் ஆரம்பத்தில் நகரத்தை அண்மைய பகுதியிலேயே வாழ விரும்புகின்றார்கள்.

நிலத்துடன் சேர்ந்த வாழவிரும்புவர்கள் ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியின் மிகத் தொலைவில் வாங்குவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பொழுது, ரொறொன்ரோ பெரும்பாகத்தின் பெரும்பகுதியில் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளின் விலைகளும் முதல் தடவையாக வாங்குபவர்களுக்கு இறுக்கமாகவே காணப்படுகின்றது. இதுபோன்ற காரணங்கள் புதிதாக அல்லது முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்கள் அடுக்குமாடி மனையை நோக்கிச் செல்வதனைத் தவிர வேறு வழி தோன்றவில்லை. அத்துடன் 60 வயதைத் தாண்டிய பலர் தமது இல்லங்களை விற்றுவிட்டு அடுக்குமாடி மனையை தமது இருப்பிடமாக மாற்றிக் கொள்வதனையும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நிலைமைகள் ஆதன வியாபாரத்தின் அடுத்த இலக்கு அடுக்கு மாடி மனையாகவே காணப்படலாம். பொதுவாக என்னுடைய அனுபவத்தில் ஆதன வியாபாரம் என்பது சுழற்சி வடிவிலேயே செயற்படும். புதிய சுழற்சியில் வருவது அடுக்குமாடி வியாபாரமாகலாம்.

மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சி அரசுகள் தொடர்ந்து ஆதனம் வாங்குபவர்கள் மீது மிகமிக நெருக்கங்களை, இறுக்கங்களை ஏற்படுத்துகின்ற போதும் ஆதன வியாபாரம் தொடர்ந்து ஆரோக்கியமாகவும், விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாமலும் உள்ளது.

இந்த வருடத்தில் (2016இல்) மத்திய அரசு அடமானக்கடன் பெறுவதில் மிகப்பெரிய இறுக்கத்தைக் கொண்டுவந்தது. அத்துடன் வன்கூவரில் வெளிநாட்டு வாங்குபவர்கள் மீது மேலதிக நிலமாற்று வரியைத் திணித்தது. இருந்தும் இதுவரை வியாபாரத்தில் பெரியதொரு மாற்றத்தைக் காணமுடியவில்லை. இதன் தொடர்ச்சி புதிய வருடத்தில் (2017) தொடருமா? இன்றைய சூழல் இதன் தொடர்ச்சி புதுவருடத்தில் முதல் 3/4 மாதங்களில் எதிர்பார்க்கலாம் போலத் தோன்றுகின்றது.

ஆனால் அமெரிக்கப் புதிய ஜனாதிபதி, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டனின் வெளியேற்றம், சீனாவின் மந்த நிலையான பொருளாதாரம், இத்தாலியின் புதிய பிரதமரின் வருகை அல்லது அண்மைய தேர்தலில் EU இற்கு எதிரான இத்தாலிய மக்களின் தேர்தல், ஜேர்மனியின் புதிய தேர்தலின் முடிவுகள்... உலக பொருளாதாரத்தில் நெருக்கடிகளை ஏற்படுத்துமா? பதில் தெரியாத கேள்விகள். இவை காலத்துடன் மாறுபவை. எனவே எதிர்வரும் குறிப்பிட்ட குறுகிய காலங்களில் ஆதன வியாபாரத்தில் குறிப்பாக அடுக்குமாடி மனைகளே மக்களின் அடுத்த தெரிவாக இருக்கலாம்.

புதிய வருடத்தில் (2017) நாமும் நமது இல்லம் மூலம் சந்திக்கும்வரை....


CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Footing, Foundation, Framing & Building Envelope

By Experienced Fine Italian Craftsmen & Tradesmen $110/sq ft

(Interior Finishes, Fixtures, Appliances and Painting Extra)



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு

அனுபவம் நிறைந்த, நாணயமான, தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial & Commercial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

Purchase of the Lot, Building Design, Municipal Fees, and Site Preparation are Not Included in Our Price

# வன்முறையை ஒழிக்க முடியுமா?

பன்னெடுங்காலமாக மனிதகுலத்திற்கு நல்லொழுக்கம் போதிக்கப்பட்டு வந்தபோதிலும், அது பயனளிக்கவில்லை என்பதற்கு இன்றைய உலக நடப்புகளே சான்று. போதனைகள் ஏன் பயனளிக்கவில்லை என்றால் உலகத்திலுள்ள மதங்கள், வாழ்வை உணர்வதற்கான திறனை மேம்படுத்தாமல், வெறும் நம்பிக்கைகளை அடித்தளமாகக் கொண்டு செயல்படுகின்றன.

நீங்கள் வாழ்க்கையை ஐம்புலன்கள் மூலமாக மட்டுமே உணரும்போது பொருள் தன்மை என்னும் பரிமாணத்திற்குள் உள்ளவற்றை மட்டுமே உணரமுடியும். ஏனென்றால் ஐம்புலன்கள் பொருள்தன்மை வாய்ந்தவற்றை மட்டுமே புரிந்து கொள்ளும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

உங்கள் வாழ்க்கை அனுபவங்களுக்குள் வராத விடயங்களில் நீங்கள் வெறும் நம்பிக்கை மட்டுமே கொண்டிருக்கிறீர்கள். இந்த உலகில் நிகழும் முரண்பாடுகளை கவனித்தால், அவை நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போர் போலத் தோற்றம் அளித்தாலும், அது எப்போதுமே ஒருவருடைய நம்பிக்கைக்கும் மற்றவருடைய நம்பிக்கைக்கும் இடையில் நடக்கும் போர்தான். நம் அனுபவத்தில் இல்லாதவற்றை நாம் நம்பத் தொடங்கும்போது, வேற்று நம்பிக்கைகளை உடைய மனிதர்களோடு முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. மனிதகுலத்தின் இத்தகைய நம்பிக்கைகள், ஒருவருக்கொருவர் சொல்லிலடங்காக் கொடுமைகளை ஏற்படுத்திக் கொள்ளக் காரணமாகிவிட்டன. இந்த நம்பிக்கைகளின் தூண்டுதலில்லாமல், தனி மனிதன் நிச்சயம் இத்தகைய கொடுமைகளை பிறருக்குச் செய்யத் துணிந்திருக்க மாட்டான்.


மனிதகுல வரலாற்றை சற்றுப் புரட்டிப் பார்த்தால், இது நமக்கு நன்கு விளங்கும். மனிதர்கள் தங்கள் கடவுள் மீது கொண்ட நம்பிக்கைகள், “இதுதான் சரி, அது தவறு” போன்ற கொள்கைகள், நிறம், இனம், ஜாதி, பாலின வேறுபாடுகள் மற்றும் மூடநம்பிக்கைகள் போன்றவைதான் அதிகபட்ச வன்முறைக்கும், ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும் அளவிற்குக் கொடுமைகளைச் செய்வதற்கும் காரண மாகி விட்டன.

மதம் என்பது ஒருவரைத் தன் உடல் தன்மையைக் கடந்த அனுபவங்களுக்கு இட்டுச்செல்லும் ஒரு வழிமுறை மற்றும் இந்தப் படைப்பு முழுவதும் ஒன்றே என்ற ஒருமைத்தன்மையை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு. ஆனால் நெடுங்காலமாக உலகத்திலுள்ள மதங்கள், உயிர்களின் புனிதத்தை உணர்த்துவதற்குப் பதிலாக, பெரும்பாலும் அதற்குப் புறம்பாகத்தான் செயலாற்றி வந்திருக்கின்றன. முற்காலத்தில் எளிமையான மனமும், சிந்தனைகளும் கொண்ட மனிதர்களுக்கு மதங்கள் எளிமையான நம்பிக்கைகளைப் புகட்டி, அவர்களை நல்வழிப்படுத்தி இருக்கலாம். ஆனால் தற்போது மக்கள் மனதில் தாறுமாறான எண்ண ஓட்டங்களும் இடைவிடாத கேள்விகளும் கொந்தளிக்கின்றன. இத்தகைய மனதை வெறும் எளிமையான நம்பிக்கைகள் கொண்டு நெறிப்படுத்திவிட முடியாது.

மனிதகுலம் தன் உள்நிலையில் ஏற்படுத்திக் கொண்டுள்ள சிக்கல்களை அறிவியல் ரீதியாக அணுகுவதற்கான நேரம் இது. பன்னெடுங்காலமாக இந்தியாவின் கலாச்சாரம் அத்தகைய அறிவியல் ரீதியான வழிமுறைகளை, மிக ஆழமாகவும், புரிதலுடனும்தான் பயன்படுத்தி வந்துள்ளது.

யோகா என்ற சொல்லுக்கு இணைதல் என்று பொருள். இந்தப் பிரபஞ்சமே “தான்” என்று ஒருவர் உணர்வதுதான் யோகா. நீங்கள் உங்களைச் சுற்றி இருக்கும் உயிர்களை “நான்” என்று

எப்போது உணர ஆரம்பிக்கிறீர்களோ அப்போது மற்றவருக்கு எதிராக எப்படி உங்களால் வன்முறையில் ஈடுபட முடியும்? வன்முறைகளுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும். இது வெறும் கற்பனை போல் தோன்றுகிறதா? அப்படி ஒன்றும் இல்லை. நிச்சயமாக இது சாத்தியம்தான். ஆனால் இப்போது மதங்கள் மனநோய் கொண்ட ஒரு சமூகம் போல வழிநடத்தப்படுகிறது. இது நிகழ வேண்டுமென்றால், அதற்குத் தன்னை உணர்ந்த ஒருவரின் வழிகாட்டுதலோடு மிகுந்த அர்ப்பணிப்புடன் அதிக பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் வருங்கால தலைமுறைகளுக்கு தெளிந்த மனதையும் அர்த்தமுள்ள வாழ்வையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.



சத்குரு வாசுதேவ்

பிறரை, “நான்” என்று உணராத வரை, வன்முறைக்கு முடிவில்லை. விரைவில் வன்முறையை ஒழிப்போம்!




# தமிழ் நாட்டின்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

காலகட்டத்திலேயே எம்.ஜி.ஆரின் தீவிர விசிறியாக இருந்த பன்னீர்செல்வம், டீக்கடை நடத்திக்கொண்டே அவ்வப்போது அதிமுக கட்சிக் கூட்டங்களுக்கும் போய் வந்து கொண்டிருந்தார். பன்னீர்செல்வத்துக்கு கவிதாபானு என்ற மகளும் ரவீந்திரநாத் குமார், ஜெயபிரதீப் என்று இரு மகன்களும் உள்ளனர்.

ஓட்டக்கார தேவர் மரணத்துக்குப் பிறகு 1980இல் குடும்ப சொத்துகள் பாகப் பிரிவினை செய்யப்பட்டது. அப்போது பி.வி. கேண்டீன், ஓ.பி.எஸ்.ஸின் தம்பி ராஜாகைக்குச் சென்று சேர்ந்தது. தம்பிக்குக் கேண்டீனை மனமுவந்து அளித்துவிட்டு முழு நேரமாக அதிமுக கட்சிப் பணிகளில் ஐக்கியமானார்.

1987இல் எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு, ஜெயலலிதா அணி, ஜானகி அணி என அதிமுக இரண்டானது. பன்னீர்செல்வம், ஜானகி அணியில் இருந்தார். அப்போது கம்பம் செல்வேந்திரனுடன் இருந்த நெருக்கம் காரணமாக பெரியகுளம் நகர செயலாளரானார். இந்தக் காலகட்டத்தில், குறிப்பாக 1987இல் இருந்து 1989 சட்டமன்றத் தேர்தல் வரைக்கும் ஜெயலலிதாவுக்கு எதிராக ஜானகி அணியில் கடுமையாக வேலை பார்த்தவர்தான் பன்னீர்செல்வம். 1989 தேர்தலில் ஜெய லலிதாவை எதிர்த்துப் போட்டியிட்ட வெண்ணிற ஆடை நிர்மலாவுக்கு ஓடியாடி உழைத்திருக்கிறார். அப்போது ஓபிஎஸ்ஸின் உழைப்பைப் பார்த்து கவரப்பட்டாரோ என்னவோ, தனக்கு எதிராக வேலை பார்த்தவர் என்பதை மனதில் வைத்துக்கொள்ளாமல், 1991இல் அதிமுக ஒருங்கிணைந்த பிறகும் பெரியகுளம் நகர செயலாளராகவே பன்னீர்செல்வத்தை தொடரச் செய்தார் ஜெயலலிதா. மேலும், பெரியகுளம் நகர கூட்டுறவு வங்கியின் இயக்குநர் பதவியும் இவருக்கு வழங்கப்பட்டது. 1996 சட்டமன்றத் தேர்தலை தொடர்ந்து வந்த உள்ளாட்சித் தேர்தலில் பெரியகுளம் நகர்மன்றத் தலைவர் சீட்டையும் வழங்கினார் ஜெயலலிதா. அந்தத் தேர்தலில் ஓபிஎஸ் வெற்றி பெற்றார்.

அடுத்து 1999 நாடாளுமன்றத் தேர்தல்... அப்போது அதிமுகவில் பெரும் செல்வாக்குடனும் ஜெயலலிதாவுக்கு மிக நெருக்கமாகவும் இருந்த டிடிவி. தினகரன் (சசிகலா அக்கா மகன்) பெரியகுளம் தொகுதியில் போட்டியிட்டார். வெற்றிபெற்று எம்.பியான தினகரன், தொகுதிக்குள்ளேயே குடியிருக்கும் திட்டத்தில் 2000ஆம் ஆண்டில் பெரியகுளத்தில் ஓ.பி.எஸ். தம்பி ஓ. ராஜாவுக்கு சொந்தமான வீட்டிற்குக் குடியேறினார். இதுதான் ஓ.பி.எஸ். வாழ்க்கையின் திருப்புமுனை. டிடிவி தினகரன் மனதில் இடம்பிடித்த ஓ.பி.எஸ். அப்படியே சசிகலா குடும்பத்தினர் அனைவருக்கும் நெருக்கமானார். நம்பிக்கைக்குரியர் என்ற எண்ணத்தை அவர்கள் மனதில் விதைத்தார். அதன்பிறகு எல்லாமே ஏறுமுகம்தான்.

நகர்மன்றத் தலைவர் பதவி முடிவதற்குள்ளாகவே டி.டி.வி. தினகரன் சிபாரிசால் 2001 சட்டமன்றத் தேர்தலில் சீட் கிடைத்தது. வெற்றி பெற்று எம். எல். ஏ. ஆன முதல்முறையே அமைச்சர் பதவி ஓ.பி.எஸ்.க்கு வழங்கப்பட்டது. வருவாய்த்துறை அமைச்சரானார். அதைவிட ஆச்சரியம், அடுத்த 4 மாதங்களில் டான்சி வழக்கில் ஜெயலலிதாவுக்கு முதல்முறை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, முதல்வர் பதவியிழந்தபோது, தனக்குப் பதிலாக ஓ. பன்னீர்செல்வத்தை முதல்வர் பதவிக்கு தேர்ந்தெடுத்தார் ஜெயலலிதா. கட்சிக்குள் எவ்வளவோ மூத்த தலைவர்கள், அனுபவஸ்தர்கள் இருக்க, எம்.எல்.ஏ. ஆகி 4 மாதங்களே ஆன பன்னீர்செல்வம் முதல்வரானார். ஆனால், ஜெயலலிதாவின் தேர்வு மிகச் சரி என்பதுபோல்தான் இருந்தது அதன்பின்னரான பன்னீர்செல்வம் நடவடிக்கைகளும். ஆறு மாத காலம் முதல்வராக இருந்தார். வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் ஜெயலலிதா முதல்வராகப் பொறுப்பேற்றபோது ஓ. பன்னீர்செல்வம் விரும்பிய பொதுப்பணித்துறையே அவருக்குத் தரப்பட்டது.

2001 _ 2006 அதிமுக ஆட்சிக் காலத்தில் செல்வாக்குடன் இருந்த பலர், 2011 _ 2016 அதிமுக ஆட்சிக் காலத்தில் இருந்த இடம் தெரியாமல் போனார்கள். ஆனால், அப்போதும் செல்வாக்கு குறையாமல் வலம் வந்தவர் ஓபிஎஸ் மட்டும்தான். நிதியமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், அவை முன்னவர் என்ற முக்கியமான பொறுப்புகள் வழங்கப்பட்டது. இதே காலகட்டத்தில் கட்சிக்குள்ளும் பலமான சக்தியாக இருந்தார். ஒழுங்கு நடவடிக்கை குழு

(தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)

# சிறைக்குள் தள்ளப்பட்ட மதுபோதையில் இருந்த வாகன சாரதிகளின் பத்துக் கதைகள்

## கனடிய தகவல் தொடர் 258

மதுபோதையில் வாகனம் செலுத்திப் பிடி பட்டால் கனடாவில் என்ன நடக்கும் என்பது பலரும் அறிந்த ஒரு செய்தி! அது தொடர் பாக எனது தொடர்தகவல்கள் கட்டுரைக ளில் பல தடவை வெளிவந்து விட்டது. ஆனால் அங்கு ஒரு விபத்து நடந்து எவருக்காவது உடல் காயம், உயிர் இழப்பு என ஏதாவது ஒன்று நடந்தால் எதிர்விளைவு நிச்சயமாக எப்படியிருக்கும் என்பதற்கு கீழேதரப்பட்டுள்ள பத்து சம்பவங்களும் ஓர் எச்சரிக்கையாகும்.

**பத்து சம்பவங்களையும் ஒருமுறை படியுங்கள்**

மது அருந்துவது அவரவர் சுதந்திரம். ஆனால் மது அருந்திவிட்டு வாகனம் செலுத் துவது சுதந்திரமல்ல. எதிர் விளைவுகள் எப்படியிருக்கும் என்பது தெரிந்தும் மதுபோ-தையில் வாகனம் செலுத்துபவர்களுக்கும் இத்தகவலைப் பகிருகின்றேன்.

1. கியூபெக் நீதிமன்றம் மே 2012இல் வழங்கிய தீர்ப்பு. Mr. Roger Waslh என்னும் திருந்த இடமில்லாத 57வயதுடையவர் சக்க ரநாற்காலியின் உதவியோடு வீதியில் வந்து கொண்டு இருந்த பெண்ணை அதிக மது-போதையில் வாகனம் ஓட்டி வந்து மோதிக் கொன்று விட்டார். ஏற்கனவே தமது வாழ்வில் மதுபோதையில் 19 தரம் வாகனம் செலுத்திய குற்றசாட்டில் பிடிபட்டவர் இவர். இறுதியாக கியூபெக் நீதிமன்றம் இவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது. 'திருத்தவே முடி யாத குடிகார வாகன சாரதிக்கு ஆயுள் தண்டனை' (Life Sentence for 'Incorrigible' Drunk Driver) என 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை செய்தி கட்டுரை வெளியிட்டிருந் தது. ஆதாரம் - 'ரொறொன்ரோ ஸ்ரார்' & CTV News

2. Mr. Raymond Yellowknee என்ற 37வய துடையவர் மதுபோதையில் திருடப்பட்ட ஒரு பிக்அப் ரக் ஒன்றினை ஓட்டிவந்து எதிரே வந்த ஒரு வாகனத்துடன் மோதியதில் அந்த வாகனத்தில் வந்த ஒரு தாய், மூன்று பிள்ளைகள் பலியாகினர். ஜனவரி 20, 2006இல் இந்தத் துயர் சம்பவம் அல்பேட்டா மாகாணத்தில் நடந்தது. 2008, யூன் மாதம் நீதிமன்றம் இவருக்கு இருபது வருட சிறைத் தண்டனை வழங்கியது.

2009 ஒகஸ்ட் மாதம் சிறைச்சாலைக்குள் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி வெளிவந்திருந்தது. ஆதாரம் - CTV News (ஒகஸ்ட் 28, 2009)

3. இந்த விபத்து செப்ரெம்பர் 30, 2011இல் நோவாஸ்கொஷியா மாகாணத்தின் தலை-நகரான 'ஹலிபக்ஸ்' நகரில் நடந்தது. 38 வயதான, Mr. Draw William Macpherson என்பவர் மதுபோதையில் அதிவேகமாக வாகனம் ஓட்டி வந்து ஒரு ராக்ஸியுடன் மோதினார். அதில் பிரயாணியாக வந்த 67 வயது நபர் பலியானார். சாரதி காயங்க ளுடன் உயிர் தப்பினார். மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தினை உருவாக் கிய குற்றவாளிக்கு பத்து வருடம் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. விபத்தினால் அவரும் சக்கர நாற்காலி பாவிக்க வேண்டிய நிலையில் கை விலங்குடன் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டது தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. ஆதாரம் - குளோபல் நியூஸ் தொலைக்காட்சி. ஒகஸ்ற் 10, 2015.

4. யூன் 21, 2009 இல் நடந்த வாகன விபத்தின் தீர்ப்பு நவம்பர் 05, 2012 இல் ஒன்ராரியோ நீதிமன்றம் வழங்கியிருந்தது. நண்பர்களோடு அதிக மதுபோதையில் வாகனம் வேகமாக செலுத்தி வந்தபோது, அது பாலம் ஒன்றுக்கு பக்கத்தில் இருந்த பள்ளம் ஒன்றினுள் பாய்ந்து நீரோடையில் அமிழ்ந்தது. ரொறொன்ரோவில் நடந்த இந்த விபத்தில் சேர்ந்து போன நண்பர் ஒருவர் பலியானார். 29 வயதான Mr. Lawrence Bush என்பவருக்கு 12 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆதராம் - CBC News நவம்பர் 05, 2012

5. செப்ரெம்பர் 2015 மதுபோதையில் வாகனம் செலுத்தி வந்த 29 வயதான Mr. Marco Mazzo என்ற சாரதியினால் வோர்ன் நகரில் வயதான மனிதரும் அவருடைய மூன்று பேரப்பிள்ளைகளும் பலியானார்கள். மார்ச் 2016 இல் மார்க்கம் நீதிமன்றத்தில் இவருக்கு பத்து வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆதாரம் - குளோபல் தொலைக்காட்சி செய்தி மார்ச் 29, 2016.

6. ஏப்ரல் 2013இல் நியூபுருண்ஸ்விக் மாகா ணத்தில் இந்த விபத்து நடந்தது.

42 வயதான, Mr. Boyd Reginal Atkinson என்பவர் மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தினை...



**சிவ. பஞ்சலிங்கம் B.Com.,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

(அடுத்த இதழில் தொடரும்)

**INCOME PROTECTION INSURANCE**
**வருமான பாதுகாப்பு காப்புறுதி**

- நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்போம்.
- We can protect you and your family!
- நீங்கள் சுகவீனமுற்றதனாலோ அல்லது காயமடை-ந்ததனாலோ வேலை செய்ய முடியாவிட்டால் இந்தக் காப்புறுதி உங்கள் வருமானத்தை ஈடு செய்யும்.
- If you are unable to work due to injury or illness replace your income with disability insurance
- இந்தக் காப்புறுதி ஆயுள்காப்புறுதியைப் போலவே மிகவும் முக்கியமானது.
- It's just as important as Life Insurance

- 100% return of premium those who are under 40 years old(some conditions apply)
- We can cover up to $10,000 per month.
- We are specializing in coverage for truck drivers, Real Estate agents, Mortgage professionals, self-employed and construction workers.
- Also we can cover your fixed business expenses if you are unable to work.
- Included travel insurance for the family. 5 Million Per person / 60 days per trip. Unlimited trips per year
- Extended Medical $100,000



**Nimal Subramaniam**
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

Life Insurance • Non-Medical Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA • RESP • RRSP • LIRA • LIF

## இரும்புப்பெண்மணி...

### 07ஆம் பக்கத்தொடர்ச்சி

103 எம்.எல்.ஏக்கள் கையெழுத்திட்டுள்ளதாக பேட்டி கொடுத்தனர். எம். ஜி. ஆர் உயிருடன் இருந்தபோது ஜெயலலிதாவை அரசியலில் இருந்து ஒழித்துக் கட்ட நினைத்தது வீரப்பன் அணி. எம். ஜி. ஆர். மறைவுக்குப் பின்னர் காலச் சக்கரம் சுழன்றது. அதிமுக இரண்டாக உடைந்து பின்னர் மீண்டும் இணைந்தது. ஜானகி அணியை வழிநடத்தினார் வீரப்பன். 1989 தேர்தலில் ஜானகி அணி படுதோல்வி அடைய அந்த அணியினர் ஜெயலலிதாவின் தலைமை ஏற்றனர். அரசியலில் இருந்து ஓய்வு நிலைக்கு போன நெடுஞ்செழியன் அதிமுகவில் இணைந்தார். ஜெயலலிதாவை பரம எதிரி, சிபிஜ உளவாளி, காங்கிரஸின் கையாள் என சகட்டுமேனிக்கு விமர்சித்த காளிமுத்துவும் ஜெயலலிதாவின் தலைமை ஏற்றார். ஜெயலலிதாவின் தோழி சசிகலாவின் கணவர் எம். நடராஜன், அப்போது அரசியலை விட்டு விலகி இருந்த ஆர்.எம். வீரப்பனை சந்தித்துப் பேசினார். “அனைத்தையுமே” மறந்து போயஸ் தோட்டம் போய் அதிமுகவில் மீண்டும் ஐக்கியமானார் வீரப்பன். ஆனால் வீரப்பன் உட்பட அனைத்து எம். ஜி. ஆர் காலத்திய தலைவர்களையும் எப்போதும் ஜெயலலிதா நம்பியதில்லை. இதனால் அவர்களில் பெரும்பாலானோர் காலப்போக்கில் அதிமுகவில் இருந்துமட்டுமல்ல அரசியலிலேயே அடையாளம் இல்லாமல் போயினர்.

மக்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்து முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து 2வது முறையாக ஆட்சியைப் பிடித்தவர். 6 முறை முதல்வராகப் பதவியேற்றவர். இந்தியாவில் அதிக நாட்கள் முதல்வர் பதவியில் இருந்த பெண் முதல்வர் என்ற பெருமையையும் அவர் படைத்தார். அவர் மொத்தம் 5539 நாட்கள் முதல்வர் பதவியில் இருந்தார். மக்களால் நான், மக்களுக்காக நான் என்று முழங்கி வந்தவர் முதல்வர் ஜெயலலிதா. தமிழகத்தில் பதவிக்காலத்தில் காலமான 3வது முதல்வர் ஜெயலலிதா ஆவார். பேரறிஞர் அண்ணா, 1969ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது மரணமடைந்தார். அதைத் தொடர்ந்து 1987ஆம் ஆண்டு எம். ஜி. ஆர். முதல்வராக இருந்தபோது உயிரிழந்தார்.



## முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்கு இ ரங்கல்!

திமுக தலைவர் கருணாநிதி தனது இரங்கல் செய்தியில், ‘ஜெயலலிதாவின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்’ என்று தெரிவித்துள்ளார். ஜெயலலிதாவின் புகழ் என்றும் நிலைத்திருந்தால் அதோடு கருணாநிதியின் பெயரும் வரலாற்றில் நிலைத்திருக்கும் என்பதே மறுக்க முடியாத உண்மை.

இலங்கை வடமாகாணசபைக் கூட்டத்தில் ஜெயலலிதா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் 06 டிசம்பர் 2016 இல் ஆற்றிய உரை: இன்றைய தினம் எம் எல்லோரையும் துன்பத்தில் ஆழ்த்தும் ஒரு நிகழ்வு பற்றி சபையில் பேசவேண்டியுள்ளது. தமிழ் நாட்டு அரசி யலில் இரும்புப் பெண்மணி என்றழைக் கப்பட்ட ஜெயலலிதா அவர்கள் காலமானது எம் எல்லோருக்கும் மிகுந்த சோகத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வால் வெள்ளி ஒன்று அரசியல் வானில் பளிச்சென்று பிரகாசமாகி நின்று பின்னர் திடீரென மறைந்து விட்டது. அண்மையிலே வட இந்தியப் பெண் ஊடகவியலாளர் சிமி ஃகரைவால் என்பவருக்கு ஜெயலலிதா, ஆங்கிலத்தில் அளித்த ஒரு பேட்டி இணையத்தளத்தில் வெளியாகியிருந்தது. அதைக் கேட்கும் போதுதான் சூழலானது எவ்வாறு ஒரு மனிதரை முழுமையாக மாற்றக்கூடிய வலு உடையது என்பதை அறியக் கூடியதாக இருந்தது. மிக மெல்லிய சுபாவங் கொண்ட, கல்வியில் அதிகம் சிரத்தை கொண்ட, செழிப்பான ஒரு மென்மையான சூழலில் வளர்ந்த ஒருவர் எவ்வாறு பலவிதமான முரட்டுச் சூழல்களை எதிர்நோக்க வேண்டி வந்ததால் சாது மிரண்டது போன்று மிகவும் திடமான இரும்புப் பெண்மணியாக அவர் மாற வேண்டி வந்தது என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

எம்.ஜி.ஆர் அரசியல் வானில் மின்னிய போது அது அவருக்குப் பெருமை சேர்த்தாலும் அவருக்குப் பாரிய இடர்களையும் இன்னல்களையும் அரசியலில் ஏற்படுத்தவில்லை. ஆனால் ஜெயலலிதா ஒரு பெண்ணாக ஆணாதிக்க சூழலிலே தனித்து நின்று வெற்றி பெற்றார் என்பது அவரின் திடசங்கற்பத்தையும் உழைப்பையும் விடா முயற்சியையும் கெட்டித்தனத்தையும் வெளிப்படுத்துகின்றது. அண்மையில் அவரின் அழைப்பின் பேரில் அவரைச் சென்று சந்திப்பதற்காக நடடிவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கும் போது தான் அவர் சுகவீனமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். விரைவில் குணமடைந்து வருவார் என எதிர்பார்த்திருந்தோம். காலன் அவர் உயிரைப் பறித்துக் கொண்டு போய் விட்டான். ‘அம்மா’ என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அவர் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது பாரதநாட்டு அரசியலிலும் முக்கிய பங்கு வகித்தார். அவர் ஆட்சி காலத்தில் தமிழ் நாடு பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேலும் பல துறைகளிலும் மிக உன்னத நிலையை அடைந்தது. தமிழின் மீதும் தமிழ் மக்கள் வாழ்வின் மீதும் தமிழ் மக்கள் எதிர்காலம் மீதும் அவர் மிக்க பற்றுறுதி கொண்டிருந்தார். கரிசனையுடன் அவர் தனது அரசியல் நடவடிக்கைகளை எடுத்து வந்தார். பெண் குலத்திற்கு எடுத்துக்காட்டாக அவர் விளங்கினார். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் பாதுகாப்பாக வாழவும் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய சூழலை ஏற்படுத்தவும் வேண்டும் எனக் கருதி அவர் முனைப்புடன் செயற்பட்டார்.

“தமிழ்ச் சமுதாயம் தமக்காகக் குரல் கொடுத்த ஒரு பலம் மிக்க அரசியற் தலைவரை இழந்து விட்டது. அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதை விட எம்மால் அவர் சார்பாக வேறு எதையும் இத்தருணத்தில் செய்ய முடியாதிருக்கின்றது என்பது மனவருத்தத்தைத் தருகின்றது. எம் மக்களினது ஒன்று பட்ட சோகத்தினையும் மனச் சுமையினையும் தமிழ் நாட்டு மக்களுடன் இத்தருணத்தில் பகிர்ந்து கொள்கின்றோம்.”இவ்வாறு வடக்கு மாகாண சபை முதல்வர் விக்னேஸ்வரன் உரையாற்றினார்.

## அம்மாவின் அம்மா...

### 04ஆம் பக்கத்தொடர்ச்சி

வழியாக அரும்பிய இந்த நட்பின் வளர்ச்சி நாளடைவில் இணைபிரியாத தோழி என்கிற அந்தஸ்தை சசிகலாவுக்கு வழங்கி யது. அதன்பிறகு அவருக்கு உதவியாளர் போல செயல்பட்டார் சசிகலா. ஜெயலலிதாவுடன் தேர்தல் பிரச்சாரங்களுக்கும் சென்றார்.

இப்படி அடிக்கடி போயஸ்கார்டன் சென்று வந்தவர் எம்ஜிஆர் மறைவுக்குப் பின்னர் நிரந்தரமாக கணவர் சகிதமாக போயஸ் கார்டனிலேயே தங்கிவிட்டார். அதிமுக ஜெ _ ஜா என இரு அணிகளாகப் பிரிந்தபோது ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரியவராக மாறிய சசிகலா, மீண்டும் அதிமுக ஒன்றானபோது மெல்ல அதிமுகவிலும் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கினார். 1991 தேர்தலில் ஒருங்கிணைந்த அதிமுக வெற்றிபெற்று ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றார். இதுவரை வெளிப்படாமல் இருந்த ம. நடராசனின் திட்டம் வெளிப்படத் தொடங்கியது. அதாவது, ஜெயலலிதா முதல்வரானாலும் அவருக்கு நிர்வாகத் திறன் கிடையாது. இந்நிலையில் அவரை ஒரு பொம்மை முதல்வராக வைத்துக்கொண்டு நிர்வாகத்தைத் தான் கைப்பற்றலாம் என்பதுதான் நடராசனின் திட்டம். இதை ஆரம்பத்திலேயே தெரிந்துகொண்ட ஜெயலலிதா போயஸ் கார்டனைவிட்டு நடராசனை வெளியேற்றினார். அப்போது கணவருடன் சேர்ந்து தானும் வெளியேறாமல் ‘தனக்கு ஜெயலலிதாவுக்கு பணிவிடை செய்வதுதான் முக்கியம்’ என்று போயஸ்கார்டனிலேயே தங்கினார் சசிகலா.

போயஸ் கார்டனில் இருந்து நடராசன் வெளியேறிவிட்டாலும், அவரது ஆதிக்கமும் சசிகலாவின் மற்றஉறவினர்கள் ஆதிக்கமும்,



1991_1996 அதிமுக ஆட்சி காலத்தில் அரசு நிர்வாகத்தில் அதிகமாகவே இருந்தது. இதை அனுமதித்ததுடன் சசிகலாவை நிழல் போலக் கூடவே வைத்துக்கொண்டார் ஜெயலலிதா. சசிகலாவை அதிமுகவில் இணைத்து உறுப்பினராக்கினார். இதன் பின்னர் சசிகலா பெரும் செல்வாக்கு மிக்கவராக உயர்ந்தார். அவருக்குத் தலைமை செயற்குழு உறுப்பினர் பதவியும் தந்தார் ஜெயலலிதா. சசிகலா அக்காள் மகனான டி.டி.வி. தினகரன் நாடாளுமன்ற உறுப்பினராகவும் கட்சியின் பொருளாளராகவும் பின்னர் அமைப்பு செயலாளராகவும் ஆக்கப்பட்டார். சசிகலாவின் இன்னொரு சகோதரி மகன் சுதாகரனை ஜெயலலிதா வளர்ப்பு மகனாக தத்தெடுத்து ஆடம்பரமாக திருமணம் செய்துவைத்தார்.

சுதாகரனின் ஆடம்பர திருமணம், சசிகலா உறவினர்களின் அராஜகம்தான் 1996இல் அதிமுக ஆட்சியை இழப்பதற்கு காரணமாக அமைந்தது. அப்போது சசிகலாவின் உறவினர்களால் ஜெயலலிதாவின் செல்வாக்கு சரிவதாக ஊடகங்கள் கடுமையான விமர்சனங்களை முன் வைத்தன. அந்தக் காலத்திலும் கூட தோழியை விட்டுக் கொடுக்கவில்லை ஜெயலலிதா. சசிகலாவை போயஸ் கார்டனை விட்டு

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)




# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## பொதுவாக ஏற்படும் நோய்கள்

எலும்பு மூட்டுக்கள் எவ்வாறு எமக்கு இயக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதாவது ஒரு எலும்பு இன்னும் ஒரு எலும்புடன் இணையும் இடத்தைப் பொறுத்து அசைவுகள் ஏற்படுகின்றன. அசைவிற்கு இரு எலும்புகளும் சேரும் இடத்தில் மென்மையான சவ்வும் ஒருவகைத் திரவமும் காணப்படுகின்றன.

நாம் இலகுவாக நடப்பதற்கும் வேலைகள் செய்வதற்கும் பயன் அளிக்கின்றன. முதிர்வடையும் காலங்களில் மூட்டுக்களின் சவ்வும் திரவமும் காய்வனவு ஏற்பட்டு நடக்கும் போதும், வேலைகள் செய்யும் போதும் 'நோ' வேதனையைக் கொடுக்கும். மேலும் சில மூட்டுக்கள் பந்து வடிவில் உருளும் அமைப்பாக இருப்பதினால் பல பக்கங்களுக்கும் சுழரக்கூடியதாக இருக்கும். ஆனால் பல எலும்புகளின் இணைப்பாலான மண்டை ஓட்டின் எலும்பை அசைக்க முடியாது. சில மூட்டுக்களை முன்னும் பின்னும் அசைக்க முடியும். இவை எவ்விதத்திலும் தாக்கப்படாது இருத்தல் வேண்டும். சிலருக்கு தைரொயிட் (Thyroid Gland) சுரப்பின் பாதிப்பினால் கழுத்தில் கட்டிகள் அல்லது கழலைகள் ஏற்படுகின்றன. தைரொயிட் சுரப்பியை மூச்சுக்குழாயில் இருந்து பிரிக்க முடியாது. அதாவது நாம் உமிழ்நீரை விழுங்கும்போது மூச்சுக்குழாயின் ஏற்ற இறக்கத்திற்கு அமைய தைரொயிட் கட்டி அல்லது 'கழலை' ஏறி இறங்கும் உரியவரின் எச்சிலை விழுங்கச் செய்ய வேண்டுமாகில் எச்சில் விழுங்கும் போது கழுத்தின் மூச்சுக் குழாய் மேல்நோக்கி அசைவது புலனாகும். அவ்வேளை கழலையும் மேல்நோக்கி அசைவதைக் காணலாம். ஒருவர் விலா எலும்பு அடிபட்டு நோயாளியாக இருந்தால் அவர் மூச்சை உள்இழுத்து விடும்போது பாதிக்கப்பட்ட பகுதியில் வலித்தன்மை காணப்படும். எலும்புகள் உடையலாம். சடுதியாக கையால் பிடித்துக்கொள்வார். விலா எலும்பின் மேல் பகுதியை அழுத்திப் பார்த்தால் எலும்புகள் உடைந்திருப்பதை ஓரளவு அறியமுடியும். மேலும் நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புக்களில் பாதிப்பு அடைய இடம் உண்டு.




நாம் உணவை உண்ணும் போது நாக்கின் கீழ் பகுதியிலும், தாடையின் பக்கங்களிலும் உமிழ்நீர் சுரப்பிகள் அதிகளவு உமிழ்நீரைச் சுரக்கின்றன. இதில் ஏதாவது உமிழ்நீர் வடிகால் பகுதியில் அடைப்புக் காணப்பட்டால் சுரந்த உமிழ் நீர் உள்ளே தேங்கி உணவை நாம் உண்ணும் போது வலி நிலை தென்படும். இந்நிலையில் தாடையின் கீழ் பகுதியில் சிறு கழலை தென்பட இடம் உண்டு. காரணத்தை ஆராயும் போது சுரப்பிகளில் ஏற்படும் 'கற்கள்' என அறிய முடிகின்றது. நமது கன்னங்களில் முள் போன்ற பருக்கள் காணப்பட்டால் அவை முகப்பருக்களல்ல என்பதை அவதானிக்க வேண்டும்.

இப்படியான வியாதிக்கு Tuberose sclerosis எனக்கூறப்படுகின்றன. அதாவது முகத்தின் தோல் முள்ளுத் தன்மையாக மாற்றப்படுவதாக அறிய முடிகின்றது. மயிர்கால்களின் வேர் பகுதியிலும் சீழ்தேங்கி கட்டியாகத் தோற்றம் அளிக்கும் என அறியமுடிகின்றது. இப்படி யானவர்களுக்கு ஞாபகசக்தி குறைந்து காணப்படும். ஆனால் மூளை வளர்ச்சி மிக நன்றாக இருக்கும் எனவும் அறியப்படுகின்றது. சிலவேளை தோல் பகுதியில் சில இடங்களில் வெள்ளை நிறத்தழும்புகள் காணப்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

நகத்தைச்சுற்றி கட்டிகளும் தென்பட இடம் உண்டு எனவும், இந்நிலை ஏற்படாதிருக்க உணவில் சரவிகித உணவுச்சத்துச் சேர்ப்பதுடன் 'A' உயிர்ச்சத்து கொண்ட ஆகாரங்களை கையாள வேண்டும். இதனால் நற்பயன் பெறமுடியும். நாம் பொதுவாக நோயாளியாகும் போது கழுத்தில் உள்ள உணவுக்குழாய், தொண்டை, இரத்த நாளம் என்பவற்றில் நிணநீர் அழற்சி, தைரொயிட் கட்டிகள் ஏற்பட இடம் உண்டு. தொண்டைப் பகுதி உமிழ்நீர்ச் சுரப்பிகள் கட்டியாக மாற்றம் அடையும். அத்துடன் நின்று விடாது காதின் கீழ் அமைந்துள்ள உமிழ்நீர் கட்டிகள் சாதாரணமாக அல்லது புற்று நோய்க்குரியவையாகவும் இருக்கலாம். முகநரம்பு வாதம் ஏற்பட இடம் அளிக்கலாம் எனவும் அதனை 'முகவாதம்' எனவும் அழைப்பர்.நாக்கின் அடிப்பாகத்தில் உள்ள உமிழ்நீர் சுரப்பி சிலவேளையில் பாதிப்படை யலாம். இத்தன்மைக்கு முக்கிய காரணம் உமிழ்நீரில் கல் உருவாகி அடைப்பு ஏற்பட லாம். இப்படியானவர்கள் உணவு உண் ணும்போது உமிழ் நீர் அதிகம் சுரப்பதினால் வலித்தன்மை அதிகரித்துக் காணப்படும்.

உடல் பருமனைக் குறைப்பதற்கு யோகாசனம் செய்வதினால் பயன் பெறுவது குறைவு. ஆனால் உடற்பயிற்சி செய்தால் உடல் வலிமை அடையுமேதவிர எடை குறைவது அரிது. ஆனால் நமது உடலில் இருக்கும் அதிகளவு கொழுப்பைக் கரைக்க முடியும். இதனால் கலோரி அளவை ஓரளவு குறைக்கலாம். எனவே உடல் பருமனைக் குறைப்பதற்கு உணவு கட்டுப்பாடு மிக முக்கியமாகும். கொழுப்பு உணவு, மாச்சத்து உணவு வகை, சக்கரை சார்ந்த உணவு வகைகளைத் தவிர்த்தல் வேண்டும்.

உணவின் அளவை குறைத்து எடுத்தல் வேண்டும். அளவான சத்துள்ள போசாக்கான உணவை எடுத்து வருதலால் நன்மை பயக்கும். உணவின் அளவைக் குறைப்பதற்கு அதிகநீர், பச்சைக் காய்கறிவகை எடுக்கலாம். நார்ச்சத்து உணவுகளான தவிடு, கீரைவகை போன்றவற்றை எடுத்துவந்தால் உடல் பருமன் குறைவடையும். தவறாது கைக்கொள்ளவும்.

சில பெண்களுக்கு மீசையரும்பு தென்படுவதுண்டு. இந்நிலை எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. பொதுவாக மாதவிலக்கு பெரும்பாலும் 45 வயதில் நின்று விடுவதுண்டு. இந்நிலை ஏற்பட்டபின் ஈஸ்ரோஜன் (Estrogen) என்ற ஹோர்மோன் சுரப்பதில்லை. இயற்கையான சிறிதளவு ஆண்டரோஜன் (Androgen) என்ற ஹோர்மோன் சுரக்கும். இதனை எதிர்ப்பதற்கு ஈஸ்ரோஜன் இல்லாததினால் ஆண்களுக்குரிய அடையாளமான மீசை முளைப்பதாகக் கூறப்படுகின்றது.

ஒருவருக்கு புண், அவியல் (Ulcer) இரைப்பையில் தான் ஏற்படுகின்றது....

(தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*





ஒன்டாரியோவுக்காக: மேம்பட்ட காத்திருப்பு நேரங்கள்

பிராந்தியம் முழுவதும் மருத்துவமனைச் செயல்பாட்டுச் செலவுகளில் செய்யப்படும் முதலீடுகள், இடுப்பு மற்றும் மூட்டு மாற்றுகள் போன்ற அறுவை சிகிச்சைகளுக்கான காத்திருப்பு நேரங்களை குறைக்கும் மற்றும் MRI கள் மற்றும் CT ஸ்கேன்கள் போன்ற நோயறிதல் சார்ந்த பரிசோதனைகளுக்கான அணுகலை மேம்படுத்தும். ஆரோக்கியமான ஒன்டாரியோவுக்காக நாங்கள் எவ்வாறு முதலீடு செய்கிறோம் என்பதை ontario.ca/bettercare -இல் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்டாரியோ அரசால் பணம் செலவழிக்கப்படுகிறது

Ontario




### யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்


# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் கதை)

**1. நிமிடங்களின் ஆரம்பம்**

'ஆகாய கங்கை' எனக் கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஆகாய கங்கை என்பது மில்கிவே (Milky Way) என்கிற எங்களது பால்வழி கலக்சிதான். இந்த ஆகாய கங்கையில்தான் எங்களது கதிரவன் தனது குழந்தை குட்டிகளோடு இருக்கின்றது. அதுவும் சும்மா இருக்கவில்லை, பலகோடி விண்மீன்களுடன், பால்வழி கலக்சியின் மையத்தை வலம் வருகிறது. பால்வெளி கலக்சியின் பருமனும் கொஞ்ச நஞ்ச மல்ல. 100 ஒளியாண்டு விட்டமானது. ஒளி யாண்டு என்பது மீற்றர், மைல் என்பவை போன்று தூரங்களை அளக்கிற ஓர் அலகாகும். மிகமிகப் பெரிய தூரங்களை அளப்பதற்கு விஞ்ஞானிகள் இதனைப் பாவிப்பார்கள். நேரங்களை அளப்பதல்ல. ஒளி ஒரு வருடத்தில் கடந்து செல்லக் கூடிய தூரத்தைத்தான் ஒளியாண்டு என்பார்கள். இத்தூரத்தையும் கொஞ்சம் கற்பனை பண்ணிப் பாருங்கள். ஒரு செக்கனில் ஒளி 3 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தினைக் கடந்து சென்றுவிடும். ஆயின் ஒரு வருடத்தில் எவ்வளவு தூரம் ஓடியிருக்கும்? அப்படியாயின் 100 ஒளியாண்டுகள் என்பது எவ்வளவு பெரிய தூரமாக இருக்கும்? உங்களிடமே அத்தூரத்தின் அளவினை விட்டு விடுகின்றேன், அளந்து விடுங்கள்.

பேரண்டத்தின் பெருவெளியிலே, எங்களது பால்வழி கலக்சியைப்போல் ஏராளமான கலக்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு கலக்சிகளுக்கு இடையேயும் பெரும்வெளிகள் காணப்படுகின்றன. எங்களது பால்வெளிக் கலக்சியிற்கு அருகில் இருக்கிறது அன்றோமேடா என்ற இன்னொரு கலக்சி. அன்றோமேடாக்கும் எங்களது மில்கிவேயிற்கும் இடையிலான தூரம் கிட்டத்தட்ட 2.5 மில்லியன் ஒளியாண்டுகள். இதுபோலவே, பேரண்டத்துள் காணப்படும் கலக்சிகளுக்கு இடையே பெரும் வெளிகள் இருந்தாலும் சில கலக்சிகள் ஒரு கட்டுக்குள் இருந்து கொண்டு, தம்முள் ஒரு கொத்தணியை உண்டாக்கிக் கொள்கின்றன. இப்படியாகச் சில கலக்சிகளை ஒரு கொத்தணிக்குள் கட்டி வைத்திருப்பது அவற்றிக்கு இடையிலான ஈர்ப்பு ஆகும். பேரண்டத்துள் பல கலக்சிக் கொத்தணிக் கூட்டங்களைக் காணலாம். மில்கிவேயும் அன்றோமேடாவும் ஒரு கொத்தணிக் கலக்சிகளில் உள்ள இரண்டு கலக்சிகள் ஆகும். அவற்றிற்கு இடையேயான தூரமான 2.5 மில்லியன் ஒளியாண்டு என்பது ஈர்ப்பிற்கு ஒரு பெரிய விடயமில்லை. ஈர்ப்பானது, கலக்சிகளின் திணிவி(பாரம்)னைக் கொண்டு, தனது ஆதிக்கத்துள் அவற்றினைக் கொண்டு வந்துவிடும்.



இனிக், கொத்தணிகளாகக் காணப்படும் கலக்சிக் கூட்டங்களுக்கு இடையேயும் மிகப்பெரிய இடைவெளிகள் உள்ளன. வெளி என்றால் சிறிய பெரிய இடைவெளி யல்ல. பல மில்லியன் ஒளியாண்டு தூரமான இடைவெளிகள். இத்தூரமானது மிகவும் பெரியதாக இருப்பதனால் ஈர்ப்பினால், கொத்தணிக் கலக்சிகளை ஒன்றாகக் கட்டி வைத்திருக்க முடியவதில்லை.ஈர்ப்பின் வலிமை கொத்தணிகளுக்கு இடையே மிகவும் சிறியதாக இருப்பதனால், கலக்சிக் கொத்தணிகளுக்கு இடையிலான இடைவெளிகளும் பேரண்டம் விரிவடைந்து கொண்டு செல்ல அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

இதனை விளங்கிக் கொள்வதற்கு, பூதி (பலூன்) ஒன்றினை எடுங்கள். அதன் மேற்பரப்பில் சிறிய சிறிய புள்ளிகளைப் பொட்டுக்கள் போல இடுங்கள். இனிப் பூதியினுள் காற்றைச் செலுத்துங்கள். பூதி விரியத் தொடங்கும். பூதி விரிய விரிய, நீங்கள் இட்ட பொட்டுக்களுக்கு இடையிலான தூரமும் அதிகரித்துக் கொண்டு போகும். இத்தூர அதிகரிப்பின் போது எந்த இரண்டு பொட்டுக்களும் ஒருபோதும் ஒன்றை ஒன்று அண்மிப்பதில்லை. இந்தப் பொட்டுக்கள் போன்றவைதான் கலக்சிக் கொத்தணிக் கூட்டங்களும்.

பூதியில் உள்ள பொட்டுக்கள் போலத்தான் எங்களது பேரண்டத்தில் கலக்சிகள் இருப்பதாக எண்ணிவிடாதீர்கள். கலக்சிக் கொத்தணிகளுக்கு இடையிலான தூரங்கள் பேரண்டத்தின் விரிவுடன் எவ்விதம் அதிகரிக்கின்றன என்பதனை விளக்குவதற்காகவே, பூதியை எடுத்துக் காட்டாகக் காட்டினேன்.

கலக்சிகள் பேரண்டத்திற்கு உள்ளே இருக்கின்றன. பேரண்டத்தை பலூன் என்கிற பூதியாகக் கருதுவோமாயின், பூதியின் உள்ளே இருக்கும் காற்றின் வெளிகளில்தான் கலக்சிகள் இருக்கின்றன. பேரண்டம் விரிவடைகையில் உள்ளே உள்ள கலக்சிக் கொத்தணிகளின் விரிவினைத் தெளிவுபடுத்துவதே நோக்கமாகும். இனி, இதில் இன்னொரு விடயத்தினைப் பாருங்கள். தனித்தனிக் கலக்சிகளுக்கு இடையிலும் பெரும் இடைவெளிகள் உள்ளன. ஆனால் பேரண்டத்தின் விரிவுடன் இத்தூரங்கள் அதிகரிப்பதில்லை. ஏனெனில் கொத்தணியை ஆக்கிக் கொண்டிருக்கும் ஈர்ப்பு, கலக்சிகளுக்கு இடையிலான தூரம், பேரண்ட விரிவுடன் அதிகரிப்பதை தடுத்து விடுகின்றது.

இதேபோலத்தான் விண்மீன்களைச் சுற்றியிருக்கும் கோள்களிலும் விண்மீனின் ஈர்ப்பின் செல்வாக்கு பெரியதாக இருப்பதால், விண்மீன்களுக்கும் அவற்றின் கோள்களுக்குமிடையிலான தூரங்களும் பேரண்டத்தின் விரிவடைவால் அதிகரிப்பதில்லை. இன்னமும் விண்மீன்களோ அல்லது அவற்றின் கோள்களோ, கோள்களிற் காணப்படும் பொருட்களோ, உயிரினங்களோ பேரண்ட விரிவினால் பருமனைப் பெருப்பிப்பதில்லை.

அவற்றினை எல்லாம் ஈர்ப்பு வலிமையாகக் கட்டி வைத்திருக்கின்றது. ஆனால், பெரும் பொருட்களான கலக்சிக் கொத்தணிகளுக்கு இடையில் உள்ள தூரம் மிகவும் பெரியதாக இருப்பதால், ஒரு கலக்சிக் கொத்தணியின் மேல் இன்னொரு கலக்சிக் கொத்தணியின் ஈர்ப்பின் செல்வாக்குப் பெரியதாக இருக்காது. ஒரு கொத்தணியின் மேல் இன்னொரு கொத்தணியின் ஈர்ப்பின் விளைவு இல்லை என்று கூறுமளவுக்குச் சிறியதாக இருக்கும். அதனால் பேரண்ட விரிவின்போது, அவற்றிக்கு இடையில் உள்ள இடைவெளிகள் நேரத்துடன் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

எங்களது பூதியை எடுத்துக் காட்டின் ஒவ்வொரு புள்ளிகளையும், ஒவ்வொரு கலக்சிக் கொத்தணியாகக் கருதலாம். இயற்கையின் இந்த அதிசய விளையாட்டுத்தான் எங்களுக்குப் பேரண்டத்தின் நடவடிக்கையைக் காட்டிக் கொடுத்தது. கொத்தணிகளுக்கு இடையிலான இடைவெளிகள் அதிகரிப்பதை ஹபிள் கண்டு பிடித்து விட்டார். அதன் மூலமாகத்தான் ஹபிள், புடவி புடைத்துக் கொண்டு செல்கின்றது என்ற உண்மையைப் புரிந்து கொண்டார், கண்டு கொண்டார். அயன்ஸ்ரைனின் சார்புக் கொள்கைச் சமன்பாடுகளும் இதனைக் காட்டி நின்றன.

பேரண்ட விரிவினால் இரண்டு கலக்சிக் கொத்தணிகள் ஒன்றை ஒன்று விலத்தி ஓடிக் கொண்டு இருக்குமாயின் அப்படி அவை ஒன்றையொன்று விலத்தி ஓடிக் கொண்டிருக்கும் வேகம் ஒன்று இருக்கும். இந்த விலத்தி ஓடிக்கொண்டு இருக்கும் வேகம், கலக்சிக் கொத்தணிகளுக்கு இடைப்பட்ட தூரத்தில் தங்கியுள்ளது என்பதனையும் ஹபிள் கண்டு பிடித்துக் கொண்டார். தூரம் கூடக்கூட, கொத்தணிகள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று விலத்தி ஓடுகின்ற வேகமும் கூடும். இந்த உண்மையானது இன்று ஹபிளின் விதி எனப்படுகின்றது. இந்தக் ஹபிளின் விதிதான், புடவியின் ஆரம்பக் காலத்தை, அதாவது பிக்பாங்கின் காலத்தைக் கணிக்க உதவியது.எப்படி என்பதை அடுத்த தடவையிற் கூறுகிறேன்.


விளம்பரம் வாசகர்களுக்கு நத்தார் புது வருட வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# 100 வயது ஆரோக்கியமாக வாழ

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## *Healthy live untile 100*

100 வயதைக் கடந்தும் ஆரோக்கியமாக இருப்பவர்களைப்பற்றிய செய்திகளை அவ்வப்போது கேள்விப்படுகிறோம். சிலருக்கு மட்டும் அது எப்படி சாத்தியப்படுகிறது என்கின்ற கேள்வி இங்கே எழுகிறது. மனிதன் நோயின்றி வாழ ஓர் இரகசியத்தை அகத்திய முனிவர் கூறியுள்ளார். 'அதாவது எவன் ஒருவன் ஊட்டச்சத்துள்ள உணவை உண்கிறானோ, கொஞ்சமாக சாப்பிடுகிறானோ, பருவகாலங்களுக்கேற்ற உணவை உண்கிறானோ அவன் எப்போதும், நோய்கள் ஏதும் இல்லாதவனாக இருப்பான்' என்பதே யாகும். எனவே அந்த 100 வயது வாழ்க்கை முறைபற்றிப் பார்ப்போம்.

தலை சிறிது நரைத்து முகம் கை கால்களில் சிறிது மாற்றங்கள் ஏற்படும் போதுதான் நமக்கு வயதாகிவிட்டது என்பதை உணரத் தொடங்குகின்றோம். வயதைத் தள்ளிப்போடுவது என்பது நீண்ட நாள் நடைமுறைப் படுத்த வேண்டிய ஒரு முயற்சி. வயதைப் பொறுத்தவரை உள்உறுப்புகள் மற்றும் வெளிப்புறத்தோற்றம் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. உடலிலுள்ள ஹோர்மோன்கள் (Hormones) குறையத் தொடங்கும் போது தான் உள்உறுப்புகளும் வெளித்தோற்றமும் வயதான நிலையை அடைகின்றன இதற்காக ஒருவர் நவீன



அழகுசாதனப்பொருட்களைப் பயன்படுத்துவதாலேயோ, அதிக சத்துகள் நிரம்பிய மாத்திரைகளை உண்பதாலேயோ வயதைக் குறைத்துக் காட்ட முடியாது. ஆரோக்கியமான உணவை அளவோடு உண்ணும் போதுதான் இளமையைத் தக்கவைக்க முடியும்.

சைவமோ, அசைவமோ எதை உணவாகக் கொண்டாலும் அதிலுள்ள கலோரியின் அளவு கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். கலோரி கட்டுப்பாட்டின் மூலம் ஆயுளைக் கூட்டமுடியும். இது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கத்தைய கலாசாரத்தைப் பின்பற்றும் நாம் விதவிதமான உணவுகள் கடைகளில் கிடைப்பதால் எந்தவித கட்டுப்பாடுமின்றி இரவு பகல் பாராது சாப்பிடுகிறோம். உணவை அளவு மீறி உண்பதால் அவற்றிலுள்ள ஊட்டச்சத்துள்ள எடுத்துக்கொண்டு கழிவுகளை நீக்கும் பணியைச் செய்யும செரிமான மண்டலத்திற்கு அதிகமான வேலையைக் கொடுக்கிறோம். இடையிடையே விரதங்கள் இருக்கும்போது உடலில் உள்ள விஷங்கள் நீங்கித் தேவையான ஆற்றலைப் பெறமுடியும். இது எலும்புகள், நரம்புகள் என்பனவற்றின் உறுதிக்கு உதவுகிறது. அத்துடன் உடல் எடை சீராக இருப்பதோடு சர்க்கரை-நோய், இரத்த அழுத்தம் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றது.

### உணவு

ஒமேகா (Omega 3) கொழுப்புகள் உள்ள சல்மன் (Salmon) மற்றும் எண்ணெய் மிகுந்த மீன் வகைகளை வாரத்தில் ஒரு முறையாவது சேர்ப்பதன் மூலம் மூளையின் சுருக்கத்தைக் குறைக்க முடியும். குறிப்பாக 30 வயதைக் கடக்கும் போது மூளையின் அளவு சுருங்கித் தளர்வு ஏற்படும். அப்பிள் சாறு (Apple Juice) மூளையை இள-மையாக வைத்திருக்க உதவுகிறது.

### சருமத்திற்குக் காய்கறிகளும் பழங்களும்

வானவில்லின் நிறங்களில் காணப்படும் பழங்கள் மற்றும் காய்கறிகளில் மஞ்சள், பச்சை, ஊதா மற்றும் சிவப்பு நிறங்களில் உள்ளவற்றில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம் உள்ளன என்று ஆய்வுகள் கூறுகின்றன. தோடம்பழம் (Orange) மற்றும் காய்கறிகளை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு சருமம் நெடுநாட்களுக்கு ஆரோக்கியமாகவும் கவர்ச்சியாகவும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

### வாழ்வியல் முறைகள்

சூரிய நமஸ்காரத்துடன் கூடிய யோகாசனப் பயிற்சிகளை மேற்கொள்ளும்போது மூளையில் ஏற்படும் அதிர்வலைகளைக் கட்டுப்படுத்தி மன அமைதியின்மை, பீதி, பதட்டம் போன்றவற்றைக் குறைக்கின்றது. அத்துடன் ஹோர்மோன்களின் (Hormones) அளவு சமநிலை அடைகிறது. இதனுடன் சேர்த்து தினமும் தியானப்பயிற்சி (Meditation) மேற்கொள்ளும்போது உடலின் உயிர்ச்சக்தி (Vital Energy) அதிகரித்து படபடப்பை நீக்கி கவலைகளை அழிக்கிறது. நல்ல தூக்கத்தைத் தருகிறது. நல்ல உறக்கம் நினை-வாற்றலை அதிகரிக்கும், இரத்த ஓட்டத்தை சீராக்கும். இதனால் தோல் சுருங் குவதைத் தவிர்த்து முதுமையை உள் மற்றும் வெளித் தோற்றத்தில் தள்ளிப் போடலாம்.





C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm


(தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)


Second Career

Planning for a New Career or Upgrading Your Skills?

Find Out:

- Which program best suits your skills?
- What government funding is available for you?
- Which careers have the best job opportunities?



- EENC is an award-winning service network that is connected to 100's of Training Institutions and Employers.
- We are NOT a Training Institution.
- Our services are free and you are under no obligation.

Join 100's Who Say They're Glad That They Called Us First

EENC.ca Employment and Education Network Canada Inc.

2016 readers' choice Awards WINNER · 2016 readers' choice Awards DIAMOND

Nira (Mon to Fri 9AM to 5 PM)
(416)-224-5020 Ext: 201

தமிழில் விபரங்களிற்கு:
(416)-224-5020 Ext 205

Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:

BUSINESS / LAW CAREERS
Accounting ♦Payroll Admin ♦Business Administration ♦ERP Information System Analysis ♦Banking and Financial Services ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Supply Chain & Logistics ♦Business Management ♦Business Analysis, Projects & Service Management ♦PMP ..

IT CAREERS
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦Network Security Specialist ♦Web & Mobile Developer ♦CISCO ♦LINUX ♦Software Quality Assurance and Testing ♦ITIL ♦Datawarehousing & Business Intelligence ..

HEALTHCARE & Related
Medical Office Administration ♦Diagnostic Cardiovascular Sonography♦ ECG/Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker(PSW) ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant(ECA) ♦Medical Laboratory Technician ♦Physiotherapist Assistant and Occupational Therapist Assistant♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ..

TRADES
HVAC Technician ♦Gas Technician-G3/G2 ♦Home Inspection ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechinacial / Engineering ♦Welding / Solar Energy Technician ..

ENGINEERING / DESIGN
Civil Engineering Design and Technology ♦CNC and MasterCAM Technology ♦Mechanical Engineering Design and Technology ♦Structural Engineering Design and Technology♦Electrical and Electronics Engineering Design & Technology ..

PHARMACEUTICAL
Pharmaceutical Manufacturing ♦Pharmaceutical Quality Control ♦Regulatory Affairs ♦Research & Development ♦Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Modern Technology ♦Pharmaceutical and Bio-Pharmaceutical Clinical Research ..

# அம்மாவின் அம்மா...

14ஆம் பக்கத்தொடர்ச்சி



வெளியேற்றுவதுபோல் வெளியேற்றி ஒரு மாதத்தில் மீண்டும் சேர்த்துக்கொண்டார். தொடர்ந்து வந்த திமுக ஆட்சியில் சொத்துக்குவிப்பு வழக்கு கள், சிறை வாழ்க்கை என இருவருக்குமே போராட்டங்கள் நிறைந்த காலகட்டம். இரு வரும் சிறையில் தள்ளப்பட்டார்கள். அந்தத் துயர்மிகு காலத்தில் சசிகலா நினைத்திருந் தால் ஜெயலலிதாவைப் பிரிந்து வழக்குக ளில் இருந்து தப்பியிருக்கலாம். ஆனால், அவர் தோழியை விட்டுவிலகவில்லை. அதனால் சசிகலா மேல் மேலும் நம்பிக்கை வைத்தார் ஜெயலலிதா.

கடைசியாக 2011 _ 2016 அதிமுக ஆட்சிக் காலத்தில் ஜெயலிதா - சசிகலா நட்புக்கு இடையே ஒரு பெரும் விரிசல் விழுந்தது. சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவு க்கு தண்டனை வழங்கப்பட்டால், ஆட்சி யைக் கைப்பற்ற வேண்டும் என்று சசிகலா உறவினர்களுடன் திட்டமிட்டது, உளவுத் துறை மூலம் வெளியானது. இதனையடுத்து ஒரு நீண்ட அறிக்கைக்குப் பிறகு சசிகல-ாவை கார்டனில் இருந்து வெளியேற்றினார் ஜெயலலிதா. சசிகலா பினாமியாக இருந்த, ஜெயலலிதாவுக்குச் சொந்தமான பல கம்பெனிகளில் இருந்தும் அவர் கழட்டி விடப்பட்டார். ஆனால், அந்தப் பிரிவும் விலகலும் நிறைய நாட்கள் நீடிக்கவில்லை. சில மாத இடைவெளியில், 'தனது உறவி னர்களின் சதித்திட்டம் பற்றி தனக்கு தெரியாது என்றும் இனி அவர்களுடன் ஒட்டும் உறவும் வைத்துக்கொள்ள மாட்டேன் அக்காவை பார்த்துக்கொள்வதுதான் தன் ஒரே பணி' என்று உருக்கமாக ஒரு கடிதம் எழுதினார் சசிகலா. அதனை ஏற்று மீண்டும் சசிகலாவை சேர்த்துக்கொண்டார் ஜெயலலிதா. அதன்பின்னர் ஜெயலலிதாவின் கடைசி நிமிடங்கள் வரை கூடவே இருந்தார்.

சசிகலா_ஜெயலலிதா 'உடன்பிறவா சகோத ரத்துவத்துக்கு' 28 வயது என்றால், சசிகலா தனது கணவர் நடராசனை விட்டுப்பிரிந்து வாழத் தொடங்கி 28 ஆண்டுகள் கடந்து விட்டன என்றும் அர்த்தம். நடராசனும் சசி-கலாவும் திருமணத்துக்குப் பின்னர் நான்கு ஆண்டுகள் மட்டுமே சேர்ந்து வாழ்ந்திருக் கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சசி-கலா_நடராானுக்கு குழந்தை கிடையாது. இப்படி அனேக சதிகள் மற்றும் பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும், ஜெயலலிதா-வின் தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்வின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர் சசிகலா என்பதையும் சசிகலாவின் நட்பை ஜெயலலிதாவே பேணிக் காத்து வந்தார் என்பதையும் மறுக்க முடியாது.

ஒரு பேட்டியில், "சசிகலாவுடானன உங்கள் சிநேகம் பல விமர்சனங்களை சந்தித்த பின்னும், நீங்கள் அதைத் தொடருவது ஏன்? சசிகலாவை விட்டுக்கொடுக்காமல் இருப்பது ஏன்?" என்ற கேள்விக்கு ஜெயல-லிதா சொல்கிறார்: "என் மீதான சசிகலா வின் விசுவாசத்தின் காரணமாகவே அவரை விட்டுவிலகாமல் இருக்கிறேன். மற்றவர்க ளால் மிகத்தவறாக சித்தரிக்கப்பட்ட, புரிந்து கொள்ளப்பட்ட ஒரு பெண் அவர். எனக்காக அவர் மிக சிரமப்பட்டிருக்கிறார். ஒரு வருடம் சிறை அனுபவித்திருக்கிறார். என்னுடனான நட்பு மட்டும் இல்லையென்றால், அவரை யாருமே இந்தளவு தொந்தரவு செய்திருக்க மாட்டார்கள். ஆண்கள்தான் எங்கள் நட்பை தவறாக சித்தரிக்கிறார்கள்.

பரபரப்பான அரசியல் வாழ்க்கையை மேற் கொள்ளும் ஒருவரால், அவருடைய குடும் பத்தைக் கவனித்துகொள்வது இயலாத காரியம். அரசியலில் இருக்கும் ஆண்களு க்கு அதை அவர்களுக்கு வீட்டில் மனைவி-யோ அல்லது வேறு யாரோ இருப்பார்கள். எனக்கான ஷாப்பிங்கை கூட நான் செய்ய முடியாது. எனக்கான பொருட்களை யாரா வது எனக்கு வாங்கி வர வேண்டும். என்னு டைய குடும்பத்தை எனக்காக யாராவது நிர்வகிக்க வேண்டும். அதைத்தான் சசிகலா செய்கிறார். என்னுடன் பிறக்காத சகோதரி அவர். என் அம்மாவின் இடத்தை நிரப்பிய-வர்" என்று சொல்லியுள்ளார் ஜெயலலிதா.

அம்மாவின் உயிர்தோழி இன்று அம்மாவின் இடத்தையும் கைப்பற்றியிருக்கிறார். ஜெயல-லிதா மறைவுக்குப் பின்னர் அவர் இடத்தைக் கைப்பற்றுவது யார் என்ற போட்டியில், முதல்வர் பதவியை பன்னீர்செல்வத்துக்கு விட்டுக்கொடுத்து, முதலில் பின்னடைவைச் சந்தித்தாலும், பொதுச் செயலாளர் பத-வியை கைப்பற்றியதன் மூலம், மீண்டும் ஒருமுறை தன் திறமையை நிரூபித்திருக் கிறார் ம. நடராசன்.

அதிமுக பொதுச் செயலாளர் ஆகிவிட்டால், அடுத்து முதல்வர் பதவியையும் கைப்பற்று வது சுலபம்தானே!


JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON,CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories.
- Mixers
- Window Assemblers.
- Forklift Opetators.
- CNC Machine set-up/ Operators.
- Packagers & Assembly line Workers.
- Welders MIG & TIG.
- Wood & Upholstery Workers.

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN & PHOTO ID
AND TALK TO OUR CUSTOMER SERVICE REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

STAFF MASRER INC.
5109 STEELS AVE W. UNIT 105
TORONTO ON. M9L 2Y8
TEL: 416-551-1626
staff.master.inc@gmail.com

STAFF MASTER INC.

# இதயத்தின் வலிமை

ஞானா உருத்திரன். மருத்துவ துறையில் கல்வி கற்று உயிரியல் மருத்துவ (Bio Medicine) துறையில் முது நிலை பட்டப் படிப்பை முடித்து இருக்கிறார். Healing மற்றும் energy work போன்றவற்றை முழுமையாகப் படித்து இத்துறைகளில் மக்களுக்காக சேவை செய்து வருகிறார். தகவல்களை இணையத் தளத்தில் காணலாம்.

http://gnanauruthiren.com/tamil/

எமது வாழ்வில் பலமுறை நாம் பலர் கூறக் கேட்டிருப்போம் “உனது இதயத்தைக் கேட்டு எந்த முடிவையும் எடு” என்று. அல்லது ஒரு குறிப்பிட்ட நபரைப் பார்த்து அவர் இதயம் அற்றவராக நடந்து கொள்கின்றார் என்று. அதேபோல அன்பை வெளிப்படுத்தவோ அல்லது காதலைக் குறிக்கவோ இதயத்தைப் படமாக வரைந்து காட்டுவதையும் காண்கின்றோம்.

இதயம் எமது உடலுறுப்புக்களுக்கு இரத்தத்தை வழங்கும் ஓர் உறுப்பாகத் தொழிற்படுகிறது என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். அப்படிப்பட்ட இதயத்தை அன்போடு இணைத்துப் பேசப்படுவதற்கு ஏதேனும் காரணம் இருக்கின்றதா? எமது வாழ்க்கையைப்பற்றிய நல்ல முடிவுகள் எடுப்பதற்கு இதயம் எவ்வாறு பங்கு வகிக்கின்றது என்பதைப்பற்றிப் பார்ப்போம். இதயம் எமது உடலில் உள்ள அனைத்து இயக்கங்களையும் கட்டுப்படுத்தும் ஓர் உறுப்பாக விளங்குகின்றது என ஆராய்ச்சிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதனால் தான் நாம் எந்த வகையான நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு மருத்துவரிடம் சென்றாலும் அவர் எமது இதயத்துடிப்பை பரிசோதனை செய்து பார்ப்பதைக் காண முடியும்.



அமெரிக்காவில் உள்ள heart math என்னும் ஓர் ஆராய்ச்சிக் குழு இதயத்துக்கும் உணர்வுகளுக்கும் உள்ள தொடர்பைப் பல ஆராய்ச்சிகளின் மூலம் வெளிக் கொணர்ந்து இருக்கின்றார்கள். அந்த ஆய்வுகளின்படி நாம் அன்பு, கருணை, இரக்கம், நன்றி உணர்வு போன்ற நேர்மறையான உணர்வுகளைக் கொண்டிருக்கும் போது எமது இதயத்துடிப்பு சீரான (rhythm) முறையில் இருப்பதாகவும், கோபம், எரிச்சல் போன்ற எதிர்மறையான உணர்வுகளின்போது இதயத்துடிப்பு சமநிலை தவறிச் சீரற்றதாக இருப்பதாகவும் அவர்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள்.

நல்ல உணர்வுகள் உடலில் உருவாகும் போது உடலுக்குத் தேவையான நன்மை தரும் சுரப்பிகள் இயங்கி நல்ல சுரப்புகள் சுரக்கின்றன. இதனால் DHA (Docosa-hexaenoic Acid) என்னும் சுரப்பி அதிகமாக சுரக்கிறது. இது எமது உடல் கலங்களை புதுப்பிப்பதற்கு உதவுகின்றது. இந்தச்சுரப்பி எமது நரம்புமண்டலத்தை ஓய்வாக வைத்திருக்க உதவுகின்றது என்பதும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது போல் எதிர்மறை உணர்வுகள் உடலில் அட்ரீனல்,கோர்டிசோல் (adrenaline, cortisol) போன்ற தீமை தரும் சுரப்பிகளை சுரக்க வைக்கின்றன என்பதும் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. இது எமது இதயத்தின் துடிப்பை விரைவுபடுத்துவ தால் பல எதிர்மறை தாக்கங்களை ஏற்படுத்தி எமது உடலின் சமநிலையை சீர்குலைக்கின்றது. ஒருவர் மன அழுத்த முள்ள உணர்வுகளான பயம், கோபம் போன்றவற்றை உணரும்போது இதயத்தின் உணர்வுகளான அன்பு, அமைதி என்பன அவரிடம் இல்லாத நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் அவர் எடுக்கும் எந்த முடிவுகளும் சரியாக அமைவதில்லை என்பதும் இந்த ஆராய்ச்சிகளில் உறுதியாகின்றது.

பல மனிதர்களும் எமது மூளைதான் உடல் உறுப்புக்களை இயக்குகின்றது என்று நம்புகின்றார்கள். உண்மையில் ஒரு குழந்தை உருவாகும்போது இதயமே முதலில் உருவாகின்றது என்றும் இதயத்தில் மூளைக்கான ஒரு பகுதி இருக்கின்றதென்றும் தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதனால் இதயம் மூளையின் தொடர்பின்றி ஆரம்பத்தில் தனியாக இயங்குவதும் மூளைக்கும் இதயத்துக்கும் இருபக்கங்களிலும் தொடர்பு கொள்ளும் ஆற்றல் (two way communication) இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் John & Beatrice Lacey எனும் குழுவின் ஆராய்ச்சியின் படி இதயத்திலிருந்து செல்லும் அனைத்துத் தகவல்களும் மூளையால் ஏற்கப்படுகின்றன என்றும் மூளையிலிருந்து வரும் எல்லா தகவல்களும் இதயத்தால் ஏற்கப்படுவதில்லை. எனவும் சிலவற்றை மட்டுமே இதயம் ஏற்கின்றது என்றும் அறியக்கூடியதாக உள்ளது. மனம் என்பது மூளை மாத்திரம் அல்ல அது எமது அனுபவங்களை உணரக்கூடிய தன்மையும் எங்களுடைய எண்ணங்களுக்கும் காரணமாக இருக்கிறது. அதனால்தான் எமது இதயம் எப்பொழுதும் நல்ல முடிவுகளை எடுக்கும் இடமாகவும், மனம் எதிர்மறை உணர்வுகள் உருவாகுவதற்குக் காரணமாகவும் அமைகின்றது. மனம் எப்பொழுதுமே பழைய நினைவுகளில் இருந்து புதிய முடிவுகளை எடுப்பதால் அவை எமக்கு ஏற்றதாக அமைவது இல்லை எனவும் தெரிகின்றது. எமது இதயத்தின் உணர்வு களை உள்ளுணர்வு (intuition) எனக் கூறுவார்கள். நீங்கள் ஒரு பிரச்சினையில் இருக்கும்போது அல்லது வாழ்வின் முக்கிய மான முடிவு ஒன்றை எடுக்கும் தருணத்தில் இதை உணர்ந்திருப்பீர்கள். பெரும்பாலும் மனிதர்கள் இந்த உள்ளுணர்வை அடிவயிற்றில் ஏற்படும் ஒரு வகையான உணர் வாக (cut feeling) அல்லது இதயத்தில் தோன்றும் உணர்வாகக் கொண்டிருப்பார் கள். இந்த உள்ளுணர்வை எம்மால் வளர்த்துக் கொள்ள முடியும். இதனை எமது வாழ்வில் நல்ல முடிவுகளை எடுப்பதற்குப் பயன்படுத்தலாம்.

**- Dr. குணா உருத்திரன் -**



# தமிழ் புத்தகங்கள் விற்பனை
# TAMIL BOOKS SALE

## JENMA PUBLICATIONS

**880 MARKHAM RD.(MARKHAM & PAINTED POST)**

(நல்லூர் குமரன் கீழே)

காலம் : டிசம்பர் 16,17,18 வெள்ளி, சனி, ஞாயிறு தினங்கள் மட்டும்

**Tel: 437-995 4099**

ஜோதிடம் - ஆன்மீகம் - தத்துவம் - சமையல்
யோகா - உடற்பயிற்சி - தியானம் - ஆரோக்கியம் - மருத்துவம்
உணவுமுறை - அதிஷ்டவிஞ்ஞானம் மற்றும் பல்வேறு பயனுள்ள புத்தகங்கள் விற்பனையாகவுள்ளன. தினசரி வாழ்விற்கு உதவும் இவ் அரிய சந்தர்ப்பத்தை ஒரு போதும் தவறவிடாதீர்கள்.

★ உண்மையான வாசகன் வாசிப்பதை விடுவதே இல்லை.
★ புத்தகங்களுக்குத் தரும் தொகை ஒரு செலவல்ல மூலதனம்.

ஆண், பெண் முக அழகை வசீகரப்படுத்தி, மென்மையான சருமத்தை கவர்ச்சிகரமாக இளமைப்பொலிவுடன் அழகாக்கித் தரவல்ல தூய சந்தனக்கட்டைகளில் அரைத்தெடுத்த (**Sandle Paste**) எம்மிடம் கிடைக்கும்.

தற்பொழுது
**Limited Quantity**
(**One only**)
வாங்கிச் செல்லலாம்.

புத்தகங்களுக்கு கழிவு 10% **OFF**
**Gift Items** கழிவு 20% **OFF**
**ONLY 3 DAYS**

- ✓ 100% தூய செப்புக் காப்புக்கள்
- ✓ ஓம் முருகா, ஓம் சாயி பெயர் பதித்தவை
- ✓ வாகனத்திற்குரிய தெய்வங்கள் **(CAR HANGINGS)**
- ✓ உருத்ராட்சை மணிகள்
- ✓ மந்திரங்கள் **CD**, ஆன்மீகப் பாடல்கள்
- ✓ மற்றும் வாழ்வில் அதிஷ்டம் தரும் பொருட்கள்

மேலும் தொடர்புகளுக்கு 437.995.4099 இலக்கத்தை அழையுங்கள்


GTA SQUARE MALL
GTA store வாடிக்கையாளர்களுக்கும் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்.
SIDEWALK SALE & SERVICES
December 16 - 24, 2016 (1pm -9 pm)
SANTA CLAUS will be HERE on
December 22- 5-8pm
December 23- 5-9pm
December 24- 12noon-3pm
Happy New Year
Boxing Day week SALE
from December 26
Christmas Week Sale
Open 7 days
Monday - Saturday 9am-9pm
Sunday & Holiday 10am-8pm
5215 Finch Ave. East
Scarborough, ON M1S 0C2
www.gtasquaremall.com
MIDDLE FIELD
FINCH
N
GTA MALL

# SELENE
METROGATE

Another project by TRIDEL.....
Last and Final Phase at
METROGATE Community.
Don't miss the last chance...




TRIDEL®
BUILT FOR LIFE

## Completion: SPRING 2020
**Kennedy and HWY 401**

# 416-321-6969

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage.***
**5215 Finch Ave. East. Unit #203**
**Toronto M1S 0C2**

*Independently Owned & Operated.


Special Available: Dec 16th- Dec 22nd
Dec 16th GRAND OPENING
Field Fresh 好世界 Supermarket
全場 9 折 大酬賓
10% OFF
5661 Steeles Ave. E. Toronto, ON. M1V 5P6
Tel: 416-292-6158
Business Hours: 8:00AM-10:00PM
大型超市
盛大開業
Live Canada Lobster 6.99 lb
BBQ Duck with Head 12.99
Fresh Asian Pear 88¢ lb
Butter Cake 1.99
Fresh Large Yellow Free Run Chicken 7.99
Wonder Bread 675g 1.38
Baby Yu Choy 1.29
Baby Cabbage Mustard 1.29
Golden Gate All purpose flour 3.99
FULL SERVICE HALAL MEAT DESIGNATED READY
HALAL
WEEKDAY SALE 週一到週四大特賣
FRUIT & VEG 果菜
Chinese Fuji Apple 98¢
Fresh Ya Pear 79¢
Dragon Fruit 1.58
Fresh Black Sugar Cane 1.99
Dole Banana 49¢
Sunkist Orange (Large) 88¢
Golden Kiwi 2/.88¢
Young Coconut 2 for 3
Pineapple 99¢
Cantaloup 1.99
Lotus Root 1.39
Korean Cabbage 29¢
Watercress 2/1.88
Baby Shanghai Bok Choy 1.29
Taro 39¢
Pumpkin 39¢
Oyster Mushroom in Bag 1.99
GROCERY 雜貨
FISH 魚部
MEAT 肉類
Baci Perugina Chocolate 200g 5.99
Snacks Potato Chips Series 160g 2 for 3
Fujian Cooking Wine 485ml 1.68
Desi Wheat Farina Suji Coarse 4lb 1.99
Britannia Wheat Rusk 1.29
Tide Simply Clean & Fresh 4.08L 7.99
Jelly Head Slice 88¢
Live Cherry Stone Clam 99¢
Fresh Salmon Steak 4.88
Fresh Pork Chop 99¢
Fresh Boneless Chicken Breast 2.59
Fresh Beef Flank Steak 3.38
Fresh Pork Side Ribs 1.59
FROZEN 極凍
KITCHEN 美食
Seabest 2% Milk 4L 3.99
Thai Gold White Shrimp 5.66
Deep Fried Whiting 2.19
2 Items Combo with Fried Rice or Noodles and Soup 3.99
Red Bean & Winter Melon Pastry 2.88
Walnut Cookies 12pcs 1.69

Mega Financial Group
Vasanta Raviendren
Insurance & Investment Advisor
Dir: 416.716.1540
vasanta@megafinancial.ca

www.megafinancial.ca
PH2B - 4168 Finch Ave. E
Scarborough. ON M1S 5H6

# காதலியை கதற வைத்த 'ஐ ஸ்கிறீம்' திரைப்படம்!

இனிப்பான பண்டங்களை சுவைக்காது காரமான, உறைப்பான பண்டங்களை விரும்பி உண்பவர்களைப் போன்று காதல், கல்யாணம் போன்ற இன்பக் காட்சிகளை விடுத்து வாள் சண்டை, கத்திக் குத்து, கொலைகள் போன்ற காட்சிகளை ரசிக்கும் ரசிகர்களும் நம்மத்தியில் இருக்கவே செய்கின்றனர். அதனால் நாடகத் தயாரிப்பாளர்களும், திரைப் படத் துறையினரும் அத்தகைய ரசிகர்களையும் திருப்திப்படுத்தும் நோக்குடன் நாடகங் களையும், திரைப்படங்களையும் தயாரித்து வழங்கி வருகின்றனர். இந்த வகையில்தான் சதா சிரித்த முகத்துடன் ஓர் அப்பாவியாகக் காட்சியளிக்கும் திரு. ரவி அச்சுதன் அவர்கள் "நான் வீறிட்டுக் கத்துகிறேன்" (I Scream) என்ற ஆங்கில தலைப்பிலான தமிழ் திரைப் படத்தினை தயாரித்து இம்மாதத்தின் முதலாவது வாரஇறுதி நாட்களில் றிச்மன்ட்-ஹில்லில் உள்ள யோர்க் சினிமாவில் திரையிட்டிருந்தார். அத்துடன் தனது வேண்டுகோ-ளினை ஏற்று உடனடியாகத் திரையிட அனுமதித்தமைக்காக திரு. ரவி அச்சுதன் அவர்களுக்கு பாராட்டினையும், நன்றியையும் தெரிவித்திருந்தார். புலம் பெயர்ந்த நாடான கனடா நாட்டில் நம்மவர்கள் பல்வேறு துறைகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி வரும் வேளையில் ஒளிப்பதிவு கலையில் கை தேர்ந்தவரன திரு. ரவி அச்சுதன் நீண்ட காலமாகத் திரைப் படத்துறையில் ஈடுபட்டு "உயிரே உயிரே", "வசந்த கானம்", "கனவுகள்" போன்ற எட்டு திரைப் படங்களை எடுத்து அவற்றில் தனது கை வண்ணத்தினை பதித்து ரசிகர்களின் பாராட்டினை பெற்றுவருவது யாவரும் அறிந்த உண்மை. அவரது பாரியா-ரான ஜெயாவும் அவருக்குப் பக்க பலமாக இருந்து உதவி வருவதும் பாராட்டுக்குரியது.




இத்திரைப் படத்திற்கான கதை வசன-த்தை திரு. அருண் சிவகுமாரனும், பாடல்களை திரு. ரவிப்பிரியன், திரு. பூர்ஜி ஆகியோரும் எழுதியுள்ளனர். இந்தியாவிலுள்ள சிறந்த திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஆர். ரி. பாலா திரைக் கதையினை சீர் செய்துள்ளார். யாவற்றுக்கும் மேலாக திரு. ஜெயா ஜெயகாந்தன் இத்திரைப் படத்தினை தயாரித்துள்ளார். திரு. ரவி அச்சுதனின் முயற்சிக்கு இங்குள்ள நல்லிதயம் படைத்த வர்த்தகப் பிரமுகர் களின் பேருதவியின் காரணமாக நாம்-எல்லோரும் திரு. ரவி அச்சுதனின் கை வண்ணத்தில் உருவாகிய "ஐ ஸ்கிறீம்" என்ற திரைப் படத்தினை திரையில் பார்த்து ரசிக்கக் கூடியதாக இருந்தது. இதற்கு கை கொடுத்து உதவியோர் "ஓம்" கட்டிட நிறுவன உரிமையாளரான திரு. கண்ணன் கனகையா, "சி. எஸ். ஐ." நிறுவன உரிமையாளர் திரு. தயாளன் முத்துலிங்கம், திருமதி ரவீனா ஸ்ரீஸ்காந்தன், "சி. ரி. எஸ்." திரு. றஞ்சித் கோணேஸ்வரன், "தேடிப் பார்" வர்த்தக கைநூல் பதிப்பாளர் திரு. குமார், திரு. ரவி கனகசபை, வீடு விற்பனை முகவர்களான திரு. கரு கந்தையா, திரு. சான் தயாபரன், திரு. லியோநாத் செல்வரட்னம், சட்ட நிறுவன திரு. நவா, ரங்கனாஸ் நகைக்கடை உரி- மையாளர் திரு. றங்கன், ரி. டி. வங்கி திரு. மூன் மகாலிங்கம் ஆகியோருட்பட மற்றும் சிலர் இத்திரைப்படத்துக்கு நிதியுதவி வழங்கி ஆதரவளித்துள்ளமை பாராட்டுக்குரியது.

படப்பிடிப்புக் காட்சிகள் கனடாவில் மாத்திரமல்ல கியூபா, டொமினிக்கன் குடியரசு நாடுக-ளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கல்வி பயின்று வரும் மாணவ மாணவிகளே இதில் நடித்துள்ளனர். கதாநாயகன் டனிஸ், கதாந-ாயகி மெலானி, வில்லன் காண்டீபன் மற்றும் சுதர்சன், சுஜந்தன், நிக்றொன், ஹிரணியா, கபீனா, கம்ஸா ஆகியோருடன் இலங்கை வானொலியின் பழம் பெரும் நாடகக் கலைஞரான திருமதி சுப்புலச்சுமி காசிநாதன், CTBC சாந்தாக்கா ஆகியோருட்பட மற்றும் சிலரும் நடித்துள்ளனர். மிக்க அனுபவம் வாய்ந்த புகைப்படப்பிடிப்பாளரான திரு. ரவி அச்சுதனின் அனுபவம் திரைப் படத்தில் பளிச்சௌப் பிரதிபலிக்கின்றன. அண்மைக் காட்சிகள் மாத்திரமல்ல தொலை தூரக்காட்சிகளும் அத்துடன் காதல் காட்சிகள், உல்லாசப் பயணக் காட்சிகள் யாவும் வெகு துல்லியமாக இருக்கின்றன.

கதாநாயகனான டனிஸ் கதாநாயகியான மெலானியைக் காதலிக்கின்றார். ஆனால் மெலா னியை காந்தீபன் என்பவரும் விரும்பி அவளிடம் தனது விருப்பத்தினை தெரிவிக்கின்றார். ஆனால் நான் டனிஸைத் தான் விரும்புகின்றேன் என மெலானி நேரடியாகவே அவரிடம் சொல்லி விடுகின்றாள். அதனை காண்டீபனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அந்த வயிற்றெரிச்சல் எரிமலையாக அவனுக்குள் குமுறிக் கொண்டே இருந்தது. நான்கு நண்பிகளும் அடிக்கடி அவரவரது காதலர்களை சந்தித்து உல்லாசமாக பொழுதைப் போக்கி வந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்றாக டொமிக்கன் குடியரசு, கியூபா ஆகிய நாடுகளுக்கு உல்லாசப் பயணத்தை மேற்கொண்டனர். பெண்களின் பெற்றோர் முதலில் அதனை விரும்பவில்லை. இருந்தாலும் ஏனோதானோ என பின்னர் அனுமதித்தனர். இத்தகவல் எப்படியோ காண்டீபனுக்குத் தெரிந்து விடுகின்றது. அவன் அதனை சகித்துக் கொள்ள முடியாது மனதுக்குள் கர்விக் கொண்டான். உல்லாசப் பயணத்தினை மேற்கொண்ட காதலர்கள் மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த வேளை-யில் எதிர்பாராத விதமாக டனிஸை இரு முரடர்கள் மூர்க்கத்தனமாகத் தாக்கிக் கொலை செய்து விடுகின்றனர். அக்கோரக் காட்சியினைக் கண்டு அவனது காதலியான மெலானி அலறிக் (Scream) கத்துகிறாள்.

இளம் மாணவ, மாணவிகளின் நடிப்பு அனுபவம் மிக்க நடிகர்களின் நடிப்பினைப் போன்று மிகவும் தத்ரூபமாகவும், திறமையாகவும் இருந்தன. அத்துடன் கொலைக் காட்சியின் போதான நடிப்பும் தத்ரூபமாகவே இருந்தது. அதைப் பார்த்த பார்வையாளர் களுக்கும் ஐயோ என்று அலற வேண்டும் போலிருந்தது. அவ்வாறு தத்ரூபமாக எடுக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் பாராட்டுக்குரியதாகும். ஆனால் இரு மணித்தியாலங் களுக்குள் நிறைவுற்ற இத்திரைப்படம் திடீரென முடிந்து விட்டதைப் போன்றிருக்கின்றது என ரசிகர்கள் கூறிக் கொண்டார்கள்.

**- வீரகேசரி மூர்த்தி**

# காலநிலை மாற்றத்தின் கோலம்..

கால நிலை மாற்றம் கனடாவில் கடும் குளிர் சீற்றம்
காய் கனி மரங்கள் எல்லாம் காய்கள் இன்றி வாட்டம்

விடியல் பொழுதிலும் ஒரு மணி நேரம் முந்தியே மாற்றம்
வீசும் பனிக் காற்றால் பச்சிலைகள் யாவும் பழுப்பு நிறம்

பாரிய காற்றுப் பட்டு நிலத்தில் உதிர்ந்து விழும் இலைகள்
பாதை ஓர மரங்கள் யாவும் பார்வைக்கு பட்டமரத் தோற்றம்

கூடுகட்டி மரத்தில் குடியிருந்த குருவிகள் எல்லாம் கூடுவிட்டு
கூடி இருக்க வேறு இடம் தேடி அலையும் குருவிக்கூட்டம்



மரங்களில் தாவித்திரிந்த மர அணில்கள் பதுங்கி வாழ
மரப் பொந்துகள் தேடி எங்கும் அலையும் அணில்கள்

கட்டிவைத்த கம்பளிப்போர்வைகளை மெல்லத் தட்டி எடுத்து
கட்டில் மெத்தைமேல் விரித்தும் தக்கவற்றை அணிந்து கொள்வர்

வீட்டுக்கு வெளியே வீதி உலாவந்த வயதில் முதிந்தோர்
வீதி எங்கும் வீழும் பனியால் வீட்டுக்குள்ளே முடங்கிடுவர்

கொட்டிக்கிடக்கும் பனி மேட்டைத் தட்டிப் பரவி அள்ளிக்
கொட்டிக்கொண்டு வீதிவெளியே விரையும் இயந்திரங்கள்
வீதியிலே வாகனங்கள் விரைந்து செல்ல முடியா ஊர்ந்து செல்ல
வழிப்போக்கர் பாதையிலே பனியில்வழுக்கி விழுவோம்

பனியைக் கையால் அள்ளி உருட்டிப் பிரட்டிப் பந்துபோலாக்கி
பனிமேட்டில் உருட்டி விளையாடும் இளசுகளையும் காணலாம்

காலநிலை மாற்றம் எம்மைக் காணவைக்கும் சில
காட்சிகளைக் கோலமிட்டுக் காட்டும் கவிதை இது.



கவிநாதம் பரந்தாமன்

# செஞ்சீனா பச்சையாகிறதா?

## பயணக் கட்டுரை -1

சென்ற செப்ரெம்பர் மாதம் நானும் எனது நண்பரும் இருவாரச் சீனப் பயணத்தை மேற் கொண்டோம். இது ஒரு புதிய, எதிர்பாராத அனுபவமாக இருந்தது. எனவே அங்கு பார்த்தவை கேட்டவை இரசித்தவை போன்ற வற்றை விளம்பரம் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணினேன். அப் பயணம் பற்றிப் பார்க்கும் முன் சீனாவின் வரலாறு பற்றி அறிந்து கொள்வது நல்லது. அதுபற்றிப் பார்ப்போம்.

### வரலாறு

கிழக்காசியாவில் தனிப்பெரும் அரசாகத் திகழும் சீனா, சீன மக்கள் குடியரசு (People's Republic of China) என அழைக்கப்படுகிறது. இதன் சனத்தொகை 1.381 பில்லியன் ஆகும். உலகிலேயே சனத் தொகை கூடிய நாடாகச் சீனா உள்ளது. இதன் தலைநகரம் பெய்ஜிங் (முன்னாள் பீக்கிங்). இந்நாட்டை ஆள்வது சீனாவின் கொமியூனிசக்கட்சி (பொதுவுடமைக்கட்சி). இது 22 மாகாணங் கள், 5 தன்னாட்சிப் பிரதேசங்கள், நேரடிக் கட்டுப்பாடுள்ள 4 மாநகர சபைகள் (பெய்ஜிங்), ரியான்ஜின், ஷாங்காய், சொங்கிங்) சுய அரசாட்சியுள்ள விசேட நிர்வாகப் பிரதேசங்கள் ஹொங் கொங், மக்கௌ ஆகியவற்றைத் தன் கட்டுப்பாட் டுக்குள் வைத்திருக்கிறது.

இத்துடன் தைவான் தீவின் மீதும் தமக்கு ஆட்சியுரிமை இருப்பதாகக் கூறுகிறது. இதன் பிரதான நகரங்களாக ஷாங்காய், பெய்ஜிங், சொங்கிங், சென்ஷென், ரியான் சின், ஹொங்கொங் ஆகியன விளங்குகின் றன. சீனா ஒரு வல்லரசு நாடாகவும் வரக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

சீனாவின் பரப்பளவு 9.6 மில்லியன் சதுரகி- லோ மீற்றர். இது உலகிலேயே அமெரிக்கா வுக்கு அடுத்ததாகக் கூடிய நிலப்பரப்பைக் கொண்ட நாடாக உள்ளது. இது மிகவும் வேறுபட்ட நிலப்பரப்புக்களை அதாவது உலர்ந்த வடக்குப் பகுதியில் ரெப்பீஸ் காடு களையும், கோயி, ரக்ளமாகன் வனாந்திரங் களையும், ஈரமான உபஉஷ்ண வலயக் காடுகளையும் கொண்டுள்ளது. இமாலயா, கரக்கோரம், பமிர், ரியான்ஷான் போன்ற மலைத்தொடர்கள் சீனாவை தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிலிருந்து பிரிக்கின்றன. திபெத்தியப் பள்ளத்தாக்கி லிருந்து ஆரம் பிக்கும் யங்சி (உலகின் 3வது நீளமானது), மஞ்சள் (உலகின் 6ஆவது நீளமானது) ஆறுகள் மிகவும்

அடர்த்தியான சனத்தொகைப் பிரதேசமான கிழக்கில் பாய்ந்து பசுபிக் சமுத்திரத்தை அடைகின்றன.

சீனாவின் பசுபிக் கரையோரம் 14,500 கிலோமீற்றர் நீளமானது.

மிகப்பழமை வாய்ந்த நாகரிகம் தோன்றிய நாடாகச் சீனா விளங்குகிறது. மஞ்சள் ஆற்றுப்படுக்கையின் வளமான பகுதியாகிய வடசீனாவில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் நாகரிகம் தோன்றி நன்னிலையில் இருந்தது. அக்காலத்தில் அரச பரம்பரை ஆட்சி வழக்கத்திலிருந்தது.



CORNEL ELECTRIC
CERTIFIED MASTER ELECTRICIAN LICENCE
•Residential And Commercial Electrical Works
•New Construction •Renovation
•Pot Light Installation
•Service Work - Panel installation
Contact : 647.990.9331

DRIVERS WANTED
Knowledge of GTA, Mississauga, Vaughan. Monday - Friday
8:30 a.m - 5:30 p.m Full Time
PLEASE CONTACT : 416.320.1446

ACCOUNTING CLERK HELP WANTED
Monlis Homes நிறுவனத்திற்கு Quick Book அனுபவமுள்ள ACCOUNTING CLERK தேவை.
ஈடுபாடுள்ளவர்கள் உங்கள் Resume ஐ Email செய்யவும்.
Email: lingan@monlishomes.ca
Phone :416.755.8453

GENERAL LABOUR WANTED
MIDDLEFIELD & FINCH
Need Male General Labourers for grinding and Food packaging for a food processing and packaging company. Good Driving record is added advantage.
Call: 416.291.7755

LOT PERSON / AUTO DETAILER WANTED
SCARBOROUGH வில் அமைந்துள்ள Used Car Dealer Ship ஒன்றிற்கு வாகனங்களை Cleaning செய்ய, Display Lot ஐ பராமரிப்பதற்கு ஆட்கள் தேவை. Must have Ontario valid Driver Licence. Full / Part time position available.
தொடர்புகளுக்கு: 416.419.2300


மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31, 32

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com www.tamilvanakkam.com

# வெள்ளை மணல் பணம்

## Sand Dollars

டொமினிக்கன் குடியரசு தமிழ் மக்களுக்கு அந்நியமான தீவல்ல. உல்லாசப் பயணிகள் அதிகளவு செல்லும் இத்தீவு பல்வேறு விடயங்களுக்கும் பிரசித்தி பெற்றது. அமெரிக்க லீக் பேஸ்போல் கழகங்களுக்காக பல டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த வீரர்கள் விளையாடி வருகின்றார்கள். புலம்பெயர் தமிழ் மக்கள் பலர் வட அமெரிக்காவுக்குக் குறிப்பாக கனடாவிற்கு குடிபெயர முன்னர் டொமினிக்கன் குடியரசில் தங்கித்தான் வந்துள்ளார்கள். இப்பொழுது அங்கு ஒரு சில விவசாயப் பண்ணைகள் தமிழர்களுக்குச் சொந்தமாகவுள்ளன.

**- ரதன் -**

ஜமெய்க்கா போன்ற தீவுகளில் இந்திய வம்சாவளிகள் தங்களது வியாபர நிறுவனங்களில் கறுப்பு நிறத்தவரைக் காணமுடியாது. அவர்கள் கறுப்பினத்தவர் மீது வைத்திருக்கும் அதீத நம்பிக்கையைக் காட்டுகின்றது. இதனை நான் நேராகவே தரிசித்துள்ளேன். மேற்கிந்திய தீவுகள் எங்கும் இதேநிலைதான் காணப்படுகின்றது. இதனைத்தான் 'சான்ட் டொலர்ஸ்' என்ற படத்திலும் காணலாம். டொமினிக்கன் குடியரசை மையமாகக் கொண்டுள்ளது இப்படம். இப்படத்தை Laura Amelia Guzmán-Israel Cárdenas மனைவி-கணவன் இணைந்து இயக்கியுள்ளனர். இது இவர்கள் இணைந்து இயக்கியுள்ள மூன்றாவது படம். மனைவி டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்தவர். கணவன் மெக்சிக்கோவைச் சேர்ந்தவர். டொமினிக்கனும், மெக்சிக்கோவும் உல்லாசப் பயணிகளுக்குப் பிரசித்தமான நாடுகள்.

நொய்லி என்ற இளம் டொமினிக்கன் பெண்ணுக்கும், அனி என்ற பிரென்ச் உல்லாசப் பயணிக்குமான உறவைக் கருவாகக் கொண்டுள்ளது இப்படம். நொய்லிக்கும் அனிக்குமான மூன்று வருட உறவு உடலளவிலும் தொடருகின்றது. அனி நொய்லிக்குப் பணம் கொடுப்பதுடன் நின்று விடவில்லை. நொய்லிக்கு பிரான்ஸ் செல்வதற்கு விசாவும் பெற்றுக் கொடுக்கின்றார். பிரான்ஸ் சென்று பின்னர் பாசிலோனாவில் வசிக்கும் தனது தாயிடம் செல்வது நொய்லியின் திட்டம். திடீரென நொய்லி தான் கருவுற்றதாகக் கூறுகின்றார். அனி மேலும் அக்கறையுடன் கவனிக்கின்றார்.

பிரான்ஸ் செல்வதற்கு முன் இரவு நொய்லியின் காதலன் அவளைச் சந்திக்கின்றான். அன்றிரவு அனி நித்திரை கொள்ளும் பொழுது தனது கடவுச்சீட்டு, அனியின் பணம் அனைத்துடன் தனது காதலனுடன் செல்கின்றாள். தனது காதலனிடம் "நான் உன்னை விரும்புகின்றேன்" என்கின்றாள். இப்படம் Jean-Noël Pancrazi பிரென்ச் நாவலாசிரியரின் நாவலை முன்வைத்து எடுக்கப்பட்டுள்ளது.



படத்தின் ஆரம்பத்தில் வேறொரு உல்லாசப் பயணியிடம் நொய்லி சங்கிலி ஒன்றைப் பெறுவதாகக் காட்டப்படுகின்றது. நொய்லி உல்லாசப் பயணிகளுக்கு தனது சேவையை வழங்குகின்றார். அதனைத் தவறான கண்ணோட்டத்தில் ஏன் திரையில் காட்டவேண்டும். அனியுடன் தங்கியிருக்கும் பொழுதுகளில் நொய்லி பாதுகாப்பாக உணர்வதாக வெளிப்படுத்தப்படுகின்றது. டொமினி க்கன் குடியரசு போன்ற நாடுகள் உல்லாசப் பயணிகளுக்குப் பாதுகாப்பான நாடுகள். மேற்கத்திய நாடுகளின் அந்தப்புரமாக மேற்கிந்திய தீவுகளை மேற்கத்திய மக்கள் கருதுகின்றனர். படம் முழுவதும் அனியின் தனிமையும் அதற்காக அவர் படும் அவஸ்தைகளும் காட்டப்படுகின்றன.

அதேசமயம் நொய்லியின் உறவானது பணத்தைக் குறிவைத்து எனக் காட்டப்படுகின்றது. எப்பொழுது மூன்றாம் உலக நாட்டு மக்களை மோசமானவர்களாகக்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)



**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995 +HST**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports including Boundary & Topographical Survey, Site Plan, Site Grading & Erosion Control Plan, Site Servicing Plan, Floor Plans, Elevations, Cross Sections, Foundation & Roof Details, Arborist Report, Heat Loss Calculations, Duct & Ventilation Design to obtain the Site Plan Approval and Building Permits.

**Create Your Dream Home !!**

**We offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975 +HST**



**சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்**

**M.BASKARASINGHAM**, P.Eng.

**CHARLES AARON JAYAKAR**, B.Arch **JOOMIN PARK**, M.Eng

416 **332 1743** www.**buildingexpertscanada**.com

# நினைவுகள் ஜெ. ஜெயலலிதா

- சிவதாணு -

அக்ரஹாரத்துப் பெண், அம்மாதான் உலகம் என்றிருந்த ஜெயலலிதாவை, "அம்மா... நீங்கள்தான் எங்கள் உலகம்" என்று அதி-முகவினரும் தமிழக மக்களும் வணங்கும் அளவிற்கு முதல்வராக அவர் விஸ்வரூபம் எடுத்ததற்குப் பின்னால் சவால்களும் சாக-சமும் நிரம்பிய சிலிர்ப்பூட்டும் சரித்திரம் உள்ளது. எத்தனையோ எதிர்ப்புகள் அத்த னையையும் சளைக்காமல் எதிர்கொண்டு வென்று காட்டியது ஜெயலலிதாவிற்கே உரிய தனித் துணிச்சல். இந்திரா காந்திக்குப் பிறகு இப்படியொரு இரும்பு மனுஷியை இந்தியா சந்தித்ததில்லை. இதனாலேயே சாதாரண தமிழ்ப் பெண்களுக்கு மட்டுமல்ல, மம்தா பானர்ஜி, மாயாவதி போன்ற வட இந்திய தலைவர்களுக்கும் அவர் ஆதர்ஷ மாக இருந்திருக்கிறார்.

ஜெயலலிதா வாழ்விலிருந்து சில துளிகள்...

• ஜெய விலாஸ், லலித விலாஸ் என்ற அப்பா வழி தாத்தா வீட்டின் பெயரையும் அம்மா வழி தாத்தா வீட்டின் பெயரையும் சேர்த்துதான் ஜெயலலிதா என்று இவருக் குப் பெயர் சூட்டப்பட்டது.

• ஜெயலலிதாவின் அப்பா வழி தாத்தா ரங்காச்சாரியார் மைசூர் ராஜ குடும்பத்தின் மருத்துவராகப் பணியாற்றியவர். இதனால், அக்காலங்களில் செல்வச் செழிப்புடன் இருந்த குடும்பம் பிறகு நொடிந்தது. "அம்மா சம்பாதித்தையெல்லாம் சேமித்து வைத்தி-ருந்தால் நான் சினிமாவுக்கே வந்திருக்க மாட்டேன். என்னை நன்றாகப் படிக்க வைத்து, சாதாரண குடும்பத்துப் பெண் மாதிரி நல்ல இடத்தில் கல்யாணம் செய்து



கொடுத்து, ஹேப்பியாக வாழ்ந்திருப் பேன் வாழ்க்கை மிகவும் ஸ்மூத்தாகப் போயிரு-க்கும்" என்று தன் சுயசரிதையில் எழுதியு ள்ளார் ஜெயலலிதா.

• ஜெயலலிதா எதற்கும் அஞ்சாதவர் என்று தெரியும். இப்போது மட்டுமல்ல சிறு-வயதிலேயே அப்படித்தானாம். ஜெயலலிதாவின் தாத்தா ஒரு பேனாப் பிர-ியர். நிறைய வித்தியாசமான பேனாக்களை சேகரித்து வைத்திருந்தார். அவரிடம் பேசவே குடும்பத் தினர் அஞ்சுவார்கள். ஒருமுறை அவரது சேகரிப்பில் இருந்த விலையுயர்ந்த பேனா ஒன்றைக் காணவில்லை. யார் எடுத்தது வீட்டையே களேபரம் செய்து கொண்டிருந்த வரிடம், "நான்தான் எடுத்தேன் இப்போ என்ன" என்று துணிச்சலாகக் கூறியிருக் கிறார்.


• தனது 12 வயதில் சென்னை சட்டக் கல்லூரி ஆண்டு விழாவில் பரதநாட்டியம் ஆடிய ஜெயலலிதா அந்த விழாவில்தான் முதன்முதலில் எம்.ஜி.ஆரை சந்தித்தார். அந்த விழாவுக்கு எம். ஜி. ஆர். சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். ஜெயலலிதா பரதநாட்டியத்தால் கவரப்பட்ட எம். ஜி. ஆர்., அவருக்கு ஒரு வெள்ளிக் கோப்பையை பரிசாக வழங்கினார். இந்தப் பெண்தான் பிறகு தன்னுடன் 28 படங்களில் ஜோடியாக நடிக்கப் போகிறது என்பதை என்று எம். ஜி. ஆர். நினைத்துக்கூட பார்த் திருக்கமாட்டார்.

• ஒய்.ஜி. பார்த்தசாரதியின் நாடகங்களில் தான் முதல்முறையாக நடிக்க ஆரம்பித்தார் ஜெயலலிதா. இந்த மேடை நாடக அனுபவ ங்கள்தான் பின்னாட்களில் ஜெயலலிதாவின் நடனத்திற்கும் நடிப்பிற்கும் ஜாம்பவான்க ளின் பாராட்டுக்கும் ரசிகர்கள் மனசில் இடமும் கிடைப்பதற்கும் அடிப்படையாக இருந்தது.


• நாடக மேடைக்கு அடுத்து அன்றையை ஜனாதிபதி வி.வி. கிரியின் மகன் ஷங்கர் எடுத்த 'எபிஸில்' என்ற ஆவணப் படத்தில் நடித்திருந்தார் ஜெயலலிதா. இந்நிலையில் பி.ஆர். பந்துலு இயக்கிய 'கர்ணன்' படத் தின் வெற்றிவிழாவுக்கு ஜெயலலிதாவை அழைத்துச் சென்றிருக்கிறார் சந்தியா. ஜெயலலிதாவைப் பார்த்த இயக்குநர் பந்துலு, 'கன்னடத்தில் நான் ஒரு படம் இயக்குகிறேன் அதில் உங்கள் மகளை நடிக்க வைக்க முடியுமா?" என சந்தியா விடம் கேட்க, "தனக்கு சினிமாவில் விருப்ப மில்லை. படிப்பில் கவனம் செலுத்த

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)


SRI GANESHA ASTROLOGY & LOVE PSYCHIC



I will succesed in all unfinished works!
ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி
ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்



மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித்
அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நளவவிடாதீர்கள்
அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும்
பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்
WHO INHERITED ASTROLOGIST PRACTICE PASSED DOWN FROM GENERATIONS.
35 YEARS EXPEREANCE
100% உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு
*Face Reading *Hand Reading *Date of Birth & *Horoscope Reading
உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.
*Removes Kala, Jaadu, Witchcraft, Evil Spirits & Black Magic*
மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.
MEET ONE TIME & SEE YOUR FUTURE CHANGING 100%
*7 Days a Week - 10:30 am To 9:00 pm*
**Pandith: Rajuguru 647-745-7879**
*1938 Weston Road, Toronto ON. M9N 1W2 North York - (Weston & Lawrence)*

# நினைவுகள்...

## 35ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டும்" என்று ஜெயலலிதா மறுத்துவிட்டாராம். ஆனால், "இரண்டே மாதங்களில் ஷூட்டிங் முடிந்துவிடும்" என்று விடாப்பிடியாக பந்துலு கேட்க, "சரி" என்று சம்மதித்திருக்கிறார். பந்துலு கன்னடத்தில் இயக்கிய அந்தப் படம் 'சின்னதா கொம்பே.' அப்போது ஜெயலலிதாவுக்கு வயது 15.

• சென்னை ஸ்டுடியோ ஒன்றில் 'சின்னதா கொம்பே' படத்தின் ஸ்கிரீனிங். அப்போது ஏதேச்சையாக அங்கு வந்த இயக்குநர் ஸ்ரீதர் ஜெயலலிதாவின் நடிப்பைப் பார்த்து வியந்து, "யார் இந்தப் பெண். புதுமுகங்களை வைத்து நான் ஒரு படம் எடுக்கப் போகிறேன். அதில் இவர் நடித்தால் நன்றாக இருக்கும்" என்று பந்துலுவிடம் கேட்டு, அடுத்த நாளே சந்தியாவையும் ஜெயலலிதாவையும் சந்தித்து 'வெண்ணிற ஆடை'யில் நடிக்கக் கேட்டார். 'காதலிக்க நேரமில்லை' பெரிய வெற்றியை அடைந்து டிரண்ட் செட் இயக்குநராக ஸ்ரீதரை சினிமா உலகம் போற்றிக் கொண்டிருந்த நேரம் அது. பெரிய இயக்குநரே முன்வந்து கேட்கிறாரே என்று நினைத்து ஜெயலலிதாவிடம் சொல்லி நடிக்க சம்மதிக்க வைத்தார் சந்தியா.

• "கண்ணன் என்னும் மன்னன் பேரை சொல்ல சொல்ல... கள்ளும் முள்ளும் பூவாய் மாறும் மெல்ல மெல்ல..." என்ற பாடல் காட்சிதான் ஜெயலலிதா தமிழில் நடித்த முதல் காட்சி. 'வெண்ணிற ஆடை' படத்தில் இடம்பெறும் அந்தப் பாடல் காட்சியில் நடித்து முடித்தபோது, "வெரிகுட் பிரமாதமா நடிச்சம்மா..." என்று ஸ்ரீதர் பாராட்டினாராம்.

• 'சின்னதா கொம்பே' படத்துக்குப் பிறகு தமிழுக்கு திரும்பி பந்துலு, எம்ஜிஆரை வைத்து 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தை இயக்க ஒப்பந்தமானார். அப்போது எம்ஜிஆர் படங்களில் பெரும்பாலும் நாயகியாக சரோஜாதேவிதான் நடித்து வந்தார். இந்நிலையில் 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் ஜெயலலிதாவை கதாநாயகியாக நடிக்க வைக்கலாம் என்று எம்ஜிஆரிடம் சொன்ன பந்துலு, அவருக்கு ஜெயலலிதா நடித்த கன்னட படத்தைப் போட்டுக் காட்டினார். எம்ஜிஆரு- க்கும் இதில் திருப்தி ஏற்பட எம்ஜிஆர் ஜோடியானார் ஜெயலலிதா.

• 'வெண்ணிற ஆடை', 'ஆயிரத்தில் ஒருவன்' இரண்டு படங்களும் அடுத்தடுத்து வெளியாகி வெற்றிவிழாக் காண தமிழ் ரசிகர்கள் மனதில் ஜெயலலிதா இடம்பிடித்தார். அதன்பின்னர் எம்ஜிஆர் – ஜெயலலிதா ஜோடி சேர்ந்த படங்கள் அத்தனையும் ஹிட்டானது. எம்ஜிஆருடன் மட்டும் 28 படங்கள் கதாநாயகியாக நடித்தார் ஜெயலலிதா. சிவாஜியுடன் 17 படங்கள். கன்னடம், தமிழ் மட்டுமின்றி தெலுங்கில் 'மனசுலு மமதலு' படம் மூலம் அறிமுகமான ஜெயலலிதாவை ஆந்திரா ரசிகர்களும் தங்கள் கனவுக் கன்னியாக் கொண்டாடினர். இந்தியில் தர்மேந்திரா ஜோடியாக 'இஜத்' என்ற படத்திலும் நடித்தார்.

• தமிழ் சினிமாவில், 1965ல் தொடங்கி 1980 வரை, கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் அதிக சம்பளம் வாங்கும் கதாநாயகியாக வலம் வந்தவர் என்ற ஜெயலலிதாவின் சாதனை இன்றுவரை யாராலும் முறியடிக்கப்படவில்லை. 227 படங்களில் நடித்திருக்கிறார். சிறந்த நடிகைக்கான மாநில அரசின் விருதை ஐந்து முறை பெற்றிருக்கிறார்.

• நடிப்பு, நாட்டியம் மட்டுமின்றி ஜெயலலி-



தாவின் சங்கீத ஆற்றலையும் தெரிந்து கொண்ட எம்ஜிஆர் 'அடிமைப் பெண்' படத்தில் 'அம்மா என்றால் அன்பு...' என்ற பாடலைப் பாட வைத்துப் பின்னணி பாடகியாகவும் அறிமுகப்படுத்தினார். 'அன்பைத் தேடி' படத்தில் 'சித்திர மண்டபத்தில்...' என்ற பாடல், 'சூரியகாந்தி' படத்தில் 'நான் என்றால் அது நானும் அவளும்...' உட்பட சில பாடல்களைப் பாடியுள்ளார், ஜெயலலிதா. குன்னகுடி வைத்தியநாதன் இசையமைப்பில் 'மாரியம்மா முத்து மாரியம்மா...' உள்ளிட்ட பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார்.

• 1980-ல் வெளிவந்த 'நதியை தேடி வந்த கடல்' படம்தான் ஜெயலலிதா நடித்த கடைசி படம். கலைச்செல்வியாக தமிழ் திரையில் ஜெயலலிதா ஜொலிஜொலித்த காலம். அப்போது, 'வந்தாளே மகராசி' (1973) படத்தில் ஒரு வசனம் ஜெயலலிதாவைப் பார்த்து சோ சொல்வார்: "தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் உனக்கு ஓர் இடம் இருக்கிறது." இத்தனைக்கும் எம்.ஜி.ஆர். அதிமுகவைத் தொடங்கி ஓராண்டுதான் ஆகியிருந்தது. அதுவும் ஜெயலலிதா அரசியலில் ஈடுபட்டிருக்கவில்லை. அப்போதே இப்படியொரு வசனத்தை ஜெயலலிதாவுக்காக எழுதியிருக்கிறார் இயக்குநர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன். எப்பேர்ப்பட்ட தீர்க்க தரிசனம். இது பின்னாளில் நிரூபணமானது தமிழக அரசியல் வரலாறு.

• சினிமாவுக்குப் பின்னர் ஒரு நடன நாட்டியக் குழுவை உருவாக்கி நிர்வகித்து வந்த ஜெயலலிதாவை எம்.ஜி.ஆர். அரசியலுக்கு அழைத்து வந்தார். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.க. தலைவியான ஜெயலலிதா, அக்கட்சியைக் கட்டிக் காத்து, 4 முறை வெற்றிபெற வைத்தார். 44 சதவிகிதம் ஓட்டு வங்கி என்ற புதிய சகாப்தம் படைத்தார்.

• ஏழுமுறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதில் போடிநாயக்கனூர், ஸ்ரீரங்கம், பர்கூர் ஆகிய தொகுதிகளில் ஒருமுறையும், ஆண்டிப்பட்டி, ஆர்.கே. நகர் தொகுதிகளில் இரண்டு முறையும் வெற்றி பெற்றிருக்கிறார். ஒரே ஒருமுறை 1996இல் பர்கூர் தொகுதியில் தோல்வியடைந்தார்.

• காவிரி, முல்லைப் பெரியாறு, சமீபத்தில் நீட், ஜிஎஸ்டி போன்ற பல விவகாரங்களில் மாநில உரிமைகளை வற்புறுத்தி மத்திய அரசை உறுதியுடன் எதிர்த்து வந்தார், ஜெயலலிதா. மாநில உரிமைகள் பேசிய திமுக தலைவர் கருணாநிதியே இன்று அதில் உறுதியாக இல்லாத நிலையில், ஜெயலலிதா துணிச்சலாக முடிவெடுத்தது ஆச்சரியமானது.

• உறுதியானவர் என்றாலும் அதற்காகத் தனது கருத்துக்களில் விடாப்பிடியாக இருக்கமாட்டார். உதாரணத்துக்குப் பிரபாகரனை கைது செய்யவேண்டும் என்று சொன்னவரே ஈழத்துக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றினார். காளிமுத்து, நாஞ்சில் சம்பத், தீப்பொறி ஆறுமுகம் போன்றோர் தன்னைக் கடுமையாக, ஆபாசமான வார்த்தைகளில் விமர்சித்திருந்தும்கூட பின்னாளில் மன்னித்துப் பதவி கொடுத்து அழகு பார்த்தார்.

• கட்சியில் அடிமட்டத்தில் இருக்கும் ஒருவரை திடீரென்று மேலே கொண்டுவருவார். அப்படி சாதாரண நிலையில் இருந்து ஜெயலலிதாவால் எம்.எல்.ஏ. ஆக்கப்பட்டு, அமைச்சர் பதவியும் கொடுக்கப்பட்டவர் வைகைச்செல்வன். "அம்மாவின் இழப்பு தனிப்பட்ட முறையிலும் எனக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு. தன் வாழ்நாளின் மிகப்பெரிய துக்கத்தைக் கடக்க முடியாமல் என்னைப் போலவே ஒவ்வொரு அ.தி.மு.க தொண்டனும் இப்போது தவித்துக் கொண்டிருக்கிறான். தாயின் கனிவும் தந்தையின் கண்டிப்பும் கலந்த கலவை அவர். கோட்டை தொடங்கி குடிசை வரை நம்பிக்கை விதைத்தவர். திறமையைத் தட்டிக் கொடுப்பதும், தவறை நெறிப்படுத்துவதும் அவரிடம் இருந்த அருங்குணங்கள். அதனால்தான் இந்த இயக்கமே உயிர்த்துடிப்போடு இருக்கிறது. என்னிடம் தாயின் பரிவோடு அவர் சொன்ன விடயங்கள் கண்முன் நிழலாடுகின்றன. 'குறையொன்றுமில்லை' என்பது போல் அவர் இருந்த போது எண்ணினேன். இந்த நிமிடம் அவரில்லை என்பதே குறையாக மாறிவிட்டது" என்கிறார் வைகைச்செல்வன்.

• கடிகாரம், கார் மீது கொள்ளைப் பிரியம் கொண்டவர் ஜெயலலிதா. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இவரைச் சவாரி ஏற்ற போயஸ் போர்டிக்கோவில் லேட்டஸ்ட் கார் காத்திருக்குமாம். 2016 மே தேர்தலின் போது தேர்தல் பிரச்சாரங்களுக்குச் செல்ல மூன்று கார்களை வைத்திருக்கிறார். 'அரசியல் ரீதியான ராசி எண் 2 ஆட்சி ரீதியிலான ராசி எண் 7 பொதுவான ராசி எண் 9' என்பது ஜெயலலிதா நம்பிக்கை. எனவே, இந்த மூன்றும் ஒன்று சேர்வது போல 279 எண் கொண்ட புதுக்காரைதான் கடைசியாக அதிகம் பயன்படுத்தி இருக்கிறார்.

• அரசியல், சினிமா ஆகியவற்றுடன் ஜெயலலிதாவுக்கு இன்னொரு முகமும் இருக்கிறது. அது இலக்கியம். ஜெயலலிதா நடித்த பல படங்களை இயக்கியவர் பழம்பெரும் இயக்குநர் சிவி ராஜேந்திரன். ஜெயலலிதாவின் இலக்கிய ஆர்வத்தை நன்கு அறிந்தவர். இவர் சொல்கிறார்: "ஸ்ரீதரிடம் அசிஸ்டெண்ட் டைரக்டராக இருக்கும் காலகட்டத்திலேயே எனக்கு ஜெயலலிதாவை தெரியும். அந்தக் காலங்களில் நான் பார்த்த ஜெயலலிதா ரொம்ப படித்த, அறிவார்ந்த, படைப்பூக்கம் உள்ளவர். படப்பிடிப்புக்கு வரும்போது கூடவே புத்தகங்கள் எடுத்து வருவார். இடைவேளைகளில் அந்தப் புத்தகத்தை எடுத்துப் படித்துக்கொண்டிருப்பார். அவர் படித்து விரும்பிய புத்தகங்களைப் பற்றிப் பேசுவார். இந்தப் புத்தகங்களை எல்லாம் படி ராஜி என்று எனக்கு நிறையப் புத்தகங்களைப் பரிந்துரை செய்திருக்கிறார். சினிமா வசனங்களைக்கூட ஆழ்ந்து உள்வாங்கித்தான் படிப்பார். ஒருமுறை படித்தால் போதும் புரிந்துகொள்வார். என்னிடம் நிறையக் கதைகள் சொல்லியிருக்கிறார்" என்கிறார்.

• 'கேட்டுக்கோடி உருவி மேளம்' பாடலின் பல்லவியை ஜெயலலிதாதான் எழுதியிருக்கிறார். கண்ணதாசனும் எம்.எஸ்.வி.யும். மெட்டுப் போட்டு பாடல் எழுதிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது அங்கே வந்த ஜெயலலிதா உடனே பல்லவி...

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது


தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033



MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228

## தண்டிக்கப்பட...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

குருமாருடன் இனவாதியை அழைத்தமை அனைத்து மத குருமாரையும் புண்படுத்துவதாக அமைந்துள்ளதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு, முஸ்லிம் அமைச்சர்களும்- நாடாளுமன்ற உறுப்பினர்களும் - முஸ்லிம் கட்சிகளும் தேரர்களையும் அவர்களோடு சேர்ந்துள்ள குழுக்களையும் மட்டும் குற்றம் சாட்டும் நிலை மாறி குற்றவாளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளாமல் அவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தும் அரசாங்கம் மீதும் கடுமையாக குற்றம்சாட்டும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இது அரசாங்கத்திற்கு சிக்கலான ஒரு நிலைமையே. இதனால், ஜனாதிபதியும் பிரதமரும் முஸ்லிம் அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து சமாதானப்படுத்தும் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ள ஒரு கருத்தினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.



நாட்டில் பௌதீக அபிவிருத்திகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் மனிதனது ஆன்மீகப் பண்பாடுகள் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி நிலைமைகளை நன்கு உணர்ந்திருப்பதையே அவரது இக்கருத்து வெளிப்படுத்துகின்றது. ஆனால், ஆன்மீகப் பண்பாடுகள் வீழ்ச்சியடைந்து வருவதற்கு என்ன காரணம்? யார் காரணம்? என்பதை நன்கு அறிந்திருந்தும் அவர்கள் மீது அவர் தலைமையிலான அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்காமலிருப்பது ஏன் என்பது தான் தெரியவில்லை.

## தமிழ் நாட்டின்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவராக ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் அடுத்த அதிகார மையமாக வலம் வந்தார். அப்போது கட்சி நிர்வாகத்தையும் ஆட்சியில் முக்கிய நிர்வாகத்தையும் ஒழுங்கு நடவடிக்கை குழுதான் கவனித்து வந்தது குறிப்பிடத்தக்கது. அரசின் முக்கிய முடிவுகளை ஒழுங்கு நடவடிக்கை குழுவினரை கலக்காமல் ஜெயலலிதா எடுத்ததில்லை.

இதனால், 2014 செப்ரெம்பர் 27இல், சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூரு நீதிமன்றத்தில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இரண்டாவது முறை பதவியிழந்த போது, முதல்வர் பதவிக்கு பன்னீர்செல்வத் தைத்தான் ஜெயலலிதா தேர்ந்தெடுப்பார் என்பதில் யாருக்கும் சந்தேகமே இருக்கவில்லை.



இப்படித் தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்த ஓ.பி.எஸ். வாழ்வில் நெருக்கடியான நாட்களும் உண்டு. கடந்த சட்டமன்றத் தேர்தலில், ஓ. பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் பலர் கட்சியில் இருந்தும் கட்சிப் பதவிகளில் இருந்தும் அதிரடியாக ஜெயலலிதாவால் 'விடுவிக்கப்பட்டார்கள்' அமைச்சர்கள் பலர் பதவியிழந்தார்கள். ஓ.பி.எஸ்ஸுக்கு சீட் கிடைக்குமா என்பதே கேள்விக்குறியானது. அதுவரை, சசிகலாவுக்கு அடுத்து நினைத்த நேரத்தில் ஜெயலலிதாவை சந்திக்கும் ஒரே அதிமுக தலைவராக இருந்த பன்னீர் செல்வம், அம்மாவின் நம்பிக்கைக்கு உரியவராகக் கருதப்பட்டவர், போயஸ்கார்டனுக்குள்ளேயே நுழைய முடியவில்லை. (அப்போதே ஜெயலலிதா உடல்நிலை மிக மோசமாகத்தான் இருந்தது. எனவே, ஜெயலலிதாவுக்குப் பிறகு யார் என்ற கேள்வி எழும்போது, தங்களுக்கு பலமான போட்டி இல்லாமல் இருக்க, சசிகலா தரப்பே ஓபிஎஸ்ஸுக்கு இந்த நெருக்கடியைக் கொடுத்தார்கள் என்றும் சொல்லப்பட்டது)

அவ்வளவுதான் ஓ.பி.எஸ். காலகட்டம் முடிந்தது என்றே அனைவரும் கருதினார்கள். ஆனால், அந்தத் தடைகளை விசுவாசம், தன்னடக்கம், பணிவு, மரியாதை, என்னதான் பிரச்சனை என்றாலும் அதனை வெளிக் காட்டிக்கொள்ளாத சாந்த சொரூபி என்ற தன் அக்மார்க் முத்திரைகளாலேயே தகர்த்தெறிந்தார். தேர்தலில் வெற்றிபெற்ற பன்னீர் செல்வத்துக்கு அமைச்சர் பதவி வழங்கினார், ஜெயலலிதா. இப்படி தன் முக்கியத்துவம் இறங்காமல் பார்த்துக்கொண்டதன் விளைவு இன்று மூன்றாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதல்வராகி இருக்கிறார்.

தற்போது ஓபிஎஸ் தமிழ்நாட்டின் முதல்வராகி இருப்பதில், சசிகலாவுக்கு விருப்பம் இல்லையென்பதும், இது இந்தியப் பிரதமர் மோடியின் தேர்வுதான் என்பதும் வெளிப்படையானது. ஜெயலலிதா, என்ன காரணத்துக்காக ஓபிஎஸ்ஸை முதல்வராக்கினாரோ, அதே காரணம்தான் மோடி இவரைத் தேர்வு செய்ததற்கும் காரணம்.

சாந்த சொருபீ, அதைவிட சிறந்த விசுவாசி!

## எம்மை நாம்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

இதனால் உரியவர் தான் உண்ணும் உணவின் சத்துக்களைப் பெறமுடியவில்லை எனக் கருதவேண்டாம். நமக்கு தேவைப்படும் சத்துக்களை உறுஞ்சுவது சிறுகுடலும் + பெருங்குடலும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். காரமான பொருட்களைத் திரவங்களை தவிர்ப்பது உத்தமமாகும்.

சிலரை நாம் பார்க்கும் போது உடம்பு எங்கும் தடிப்பாகவும் சிவப்பு நிறம் கொண்டதாகவும் அரிப்புத்தன்மை (சொறிதல்) உடையவராகவும் காணப்படுவர். இப்படியா நிலையை 'Urticaria' என்று அழைக்கப்படுகின்றது. இந்நிலை பெரும்பாலும் ஒவ்வாமையினால் ஏற்படுகின்றது. உணவுகளைப் பாவிக்கும் போது ஒவ்வாமை காணப்பட்டால் அவற்றை நீக்கி விடுவது உத்தமமாகும்.

சில பெண்களுக்கு பெரும்பாலும் மார்பு புற்றுநோய் ஏற்படுவதுண்டு. இதனை இலகுவில் கண்டு கொள்ள முடியும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அதாவது Mammography என்ற கருவின் மூலம் அறுவைச் சிகிச்சையின்றி மார்பின் உள்ளே உள்ள திசுவை ஆய்வு செய்யும்போது புற்று நோய் திசுக்கள் மற்றைய திசுக்களில் இருந்து தனிமையாக சீவிப்பதை கண்டு அறியமுடியும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் வேலை செய்வோர் சிலர் என்னைச் சந்தித்தனர். அவர்களின் சருமத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காட்டினார்கள். சிலருக்கு என்னாலான ஆலோசனைகளைக் கூற முடிந்தது. அதாவது எண்ணெய் ஆலையில் பெற்றோல் தொடர்பான பொருட்கள் தோலில் பட்டால் தோல் உலர்ந்து காணப்படும் அத்துடன் அவ்விடங்களில் அரிப்புத்தன்மையும் ஏற்பட ஏதுவாகும். இரத்த அணுக்கள் சேதமாகலாம். புற்றுநோய் ஏற்பட ஏதுவாகும். இங்கு பாதுகாப்பு முக்கியம் எனக்கூறியதுடன் பின்வருவனவற்றை கையாள வேண்டும் எனவும் நீண்ட நாட்கள் தொடர்ந்து அப்படியான ஆலைகளில் வேலை செய்வதைத் தவிர்ப்பது நன்று எனவும் கூறினேன்.


1. கையுறை பாவித்தல் வேண்டும்.
2. கண்ணுக் கண்ணாடி அணிதல் வேண்டும்.
3. ஈரம் செறிந்த முகமூடி தரித்தல் வேண்டும்.
4. வேலை செய்யும் இடம் காற்றோட்டம் பொருந்தியதாக இருத்தல் வேண்டும்.
5. கழிவு நீரை தொட்டியில் தேக்கி வெளியேற் றல் போன்றவற்றைக் கூறியுள்ளேன். இதில் சில முறைகளைத் தாங்கள் கையாளுவதா கவும் கூறினார்கள். எதற்கும் சிந்தித்து செய லாற்ற வேண்டும்.

## 100 வயது...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

### உடற்பயிற்சி

சிலர் ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். உடற்பயிற்சி என்பதையே இவர்களின் உடல் அறிந்திருக் காது. உடற்பயிற்சி என்றால் ஜிம்முக்குப் போவதுதான் (Gym) என்று நினைக்கின்ற னர். அப்படியல்ல தினமும் அரைமணி நேரம் வேகமான நடைப்பயிற்சியே போதுமானது. எந்த ஒரு புது முயற்சியும் ஆரம்பத்தில் கடினமாகவே இருக்கும். மனம் தளராமல் விடா முயற்சியுடன் நாம் அதைத் தொடர்ந்தால் எல்லா சாத்தியமே. 100 வயது வாழ விரும்புவர்கள் மேலே சொன்னவற்றை முயற்சி செய்துதான் பார்க்கலாமே.



## வெள்ளை மணல்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

காட்டப்படுவதை நிறுத்தப் போகின்றார்கள்? இதனை இயக்கியிருப்பவர்களும் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது கவலையளிக்கின்றது. நொய்லி பண்பாட்டு ரீதியாகவும் மோசமானவராகக் காட்டப்படுகின்றது. அனியுடன் உறவு கொண்டு விட்டு, தனது காதலனுடனும் வாழ்வதாகக் காட்டப் படுகின்றது.

அடிப்படையில் நேர்மையற்றவராகவே நொய்லி படைக்கப்பட்டுள்ளார். 90 டேய்ஸ் பியான்சி அதாவது 90 நாட்கள் துணைவராகப் போகின்றவர் என்ற பெயரிலான அமெரிக்க யதார்த்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் காதலன் - காதலி என அமெரிக்காவினுள் கே1 விசாவுடன் வருபவர்கள் 90 நாட்களில் திருமணம் செய்ய வேண்டும். அதன் பின்னரே இவர்களுக்குப் பச்சை அட்டை வழங்கப்படும்.

அதற்காக இவர்கள் பல தில்லு முல்லுக்கள் செய்வதாகக் காட்டப்படுகின்றது. பச்சையட்டை கிடைத்தவுடன் இவர்கள் அமெரிக்க பிரஜைகளை விட்டு விட்டுச் செல்வதாகக் காட்டப்படுகின்றது. இவ்வாறு வருபவர்களாகப் பெரும்பாலும் முஸ்லீம்களும் மூன்றாம் உலக நாட்டினருமே காட்டப்படுகின்றனர். இவ்வாறான நிகழ்ச்சிகளும் அமெரிக்காவில் இனவாதம் வளரக் காரணமாகின்றது. இப்படமும் அவ்வகையானதாகும்.

# ராகுல்காந்தி காங்கிரஸ் தலைவராக வேண்டும் மூத்த இந்திய காங்கிரஸ் தலைவர் உம்மன் சாண்டி

கடந்த இதழ் தொடர்ச்சி..

## நேர்காணல்

**தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் பார்க்க அப்போலோ வந்திருந்தீர்கள். அந்த விசிட் குறித்து?**

முன்னாள் முதல்வர் என்ற முறையிலும் அண்டை மாநில முதல்வருக்கு உடல்நலக் குறைவு என்ற அக்கறையிலும் ஜெயலலிதா அவர்களின் உடல்நலம் குறித்துக் கேட்டறிய அப்போலோ வருகை தந்தேன். அப்பொழுது ஜெயலலிதாவைப் பார்க்க முடியவில்லை. அவரது உடல்நிலை தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருவதாக மருத்துவர்களும் அமைச்சர்களும் என்னிடம் தெரிவித்தார்கள். அவர் பூரண நலம்பெற கடவுளிடம் பிரார்த்திப்பதாகத் தெரிவித்துவிட்டு வந்தோம். தற்போது அவர் உடல்நலம் தேறியுள்ளதாகச் செய்திகள் வருகின்றன. அவர் முழுமையாக உடல்நலம் தேறி விரைவில் வீட்டுக்கு வரவேண்டும்.

**சோனியா காந்திக்கு ஓய்வு கொடுத்து காங்கிரஸ் தலைவராக ராகுல் காந்தி பொறுப்பேற்க வேண்டும் என்று ஒருபுறமும், இன்னும் சில காலம் அவகாசம் தர வேண்டுமென மறுபுறமும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள். உங்கள் நிலை என்ன?**

சமீபகாலமாக ராகுல் காந்தியின் பேச்சு, அவரது அணுகுமுறைகள், விமர்சிக்கும் விதம் எல்லாவற்றையும் பார்க்கும்போது அவர் மிகவும் முதிர்ச்சி அடைந்துள்ளார். பாரம்பரியமிக்க காங்கிரஸ் கட்சியைத் தலைமையேற்று வழிநடத்தும் தகுதியை ராகுல் காந்தி அடைந்துவிட்டார். இருண்ட ஜனநாயகத்துக்கு ஒளியேற்ற ராகுல்காந்தி முன்வரவேண்டும். அவரது வழியில் நடக்கும் சூழ்நிலை அமையுமேயானால் அதைப் பெருமையுடன் ஏற்போம். அதேசமயம் அரசியலில் இருந்து சோனியா காந்தி ஓய்வு பெறக்கூடாது என்பதுதான் எனது விருப்பம்.

**'அரசியல் ஒரு சாக்கடை' என்கிறார்கள். நீண்டகால அரசியல்வாதி நீங்கள் எப்போதாவது அப்படி உணர்ந்திருக்கிறீர்களா?**



ஐம்பது ஆண்டுகாலம் உடையது எனது அரசியல் வாழ்க்கை. சமீபத்தில் ஒரு பெண் (சரிதா நாயர் பெயரைக் குறிப்பிடாமல் சொல்கிறார்) எனக்கு கோடிக்கணக்கான ரூபாய் லஞ்சம் கொடுத்ததாக குற்றம்சாட்டினார். குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் அரசியல் வாழ்க்கையில் சகஜம். பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதே பெண் சிறிது நாள் கழித்து, நான் பாலியல் ரீதியில் துன்புறுத்தியதாகப் பொதுவெளியில் ஒரு புகாரை முன்வைத்தார். இப்படியொரு புகாரை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அது என்னை மிகவும் வேதனைப்படுத்தியது. அப்போதுதான் உணர்ந்தேன். அரசியல் ஒரு சாக்கடை. அதில் எது வேண்டுமானாலும் கலக்கலாம் என்று. என் குடும்பத்தினர் தைரியப்படுத்தியதால் அதை மறந்துவிட்டேன். அதுவொரு அரசியல் சதி என்பதைப் பின்னாளில் புரிந்துக்கொண்டேன்.

**உங்கள் குடும்பம் பற்றி...**

மனைவி மரியம்மா வங்கி ஊழியராக இருந்து ஓய்வு பெற்றவர். இப்போது கிறிஸ்தவ ஆலயங்களில் தேவ செய்தி கொடுத்து வருகிறார். மகள்கள் மரியா உம்மன், ஆச்சு உம்மன் ஆகியோருக்குத் திருமணமாகி விட்டது. மகன் சாண்டி உம்மன் முதுகலைச் சட்டப்படிப்பு முடித்துள்ளான். இரண்டு பேத்திகள், பேரன் உள்ளனர். வாரத்தின் ஒருநாளை இவர்களுக்காக ஒதுக்கியுள்ளேன். ஞாயிற்றுக்கிழமை எந்தப் பணியையும் வைத்துக்கொள்ள மாட்டேன். காலையில் குடும்பத்துடன் சர்சுக்குச் செல்வேன். மதியம் மகன், மகள்கள், மருமகன்கள், பேரன் பேத்திகளை வீட்டுக்கு அழைத்து ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவோம். மாலை ஆனதும் வீட்டு வளாகத்தில் பேரன் பேத்திகளுடன் சிறிதுநேரம் விளையாடுவேன். எனக்குக் குழந்தைகள் என்றால் மிகவும் பிரியம். கிறிஸ்துமஸ் நாட்களில் தேவாலயம் சார்பில் நடத்தப்படும் கேரல் ரவுண்ட்ஸில் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்டு ஊர்வலமாகப் போவேன்.

**சந்திப்பு : சிவதாணு**

**இரண்டு முறை கேரளா முதல்வராக இருந்தவர் நீங்கள். உங்கள் சாதனை என்று எதைச் சொல்வீர்கள்?**

இந்தியாவில் ஆரம்பக் கல்வி, நூறு சதவிகிதம் பேரையும் சென்றடைந்த முதல் மாநிலம் என்ற பெருமையைக் கேரளா அடைந்ததை முக்கிய சாதனையாகக் கருதுகிறேன். மேலும் கல்வியறிவு, மனித வள

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

# EDUCATION

## Review Questions16-24

### ➢ CHEMISTRY 12

i. Calculate the $K_b$ value $N_3^-$ at 25°C ($pK_a$=4.72 at 25°C for $HN_3$)

ii. Write equation for the hydrolysis of $N_3^-$

iii. What is the pH of a 0.2 mol/L solution of sodium azide, $NaN_3$, at 25°C?

iv. How many moles of NaOH must be added to 0.50 L of 0.18 mol/L $HC_3H_5O_3$(aq) to obtain a solution with pH=4.8? Assume the temperature is 25°C. (For $HC_3H_5O_3$, $pK_a$ = 3.86 at 25°C).

### ➢ CALCULUS & VECTORS

(A) Differentiate the following

(I) $y = \cos^2\frac{1}{x}$ (II) $y = 3 - \beta^2 \cos\beta$

(B) A smuggler boat (S) that sails from the origin of a set of coordinate axes at 6:00 in a straight line. Its position *t* hours after 6:00 is given by *r = t ( 20, 30)*. If a Coast Guard Police (CGP) boat which is stationed at the point (-40, 30 ) wanted to intercept the smuggler boat, what is the latest time that the CGP-boat can leave from its station?

Assume that the speed of CGP-boat is 3 times the speed of the smuggler boat.

### ➢ PHYSICS 11

i. A piano note, $A_2$ has to be tuned to its proper frequency 110Hz. If you have a tuning fork whose frequency is 220Hz, how should you do the adjustment?

ii. Explain why the output of an AC generator is stepped up when in transmitting electric power across long distances.

iii. A high-resistance voltmeter connected across the battery reads 12 V when the switch is open. When the switch is closed the voltmeter reads 10.8 V. Suggest why this might be.

### ➢ BIOLOGY 12

Outline the potential benefits and possible harmful effects of genetic modification?

*Key Answer*

*This question shall be answered with example/s. ( pesticide resistance/ herbicide resistance in agriculture/ health)*

*Possible benefits: Faster than traditional methods, increased productivity, less use of chemicals,*


*In health; such as may cure genetic diseases, less expensive drug production, human insulin production.*

*Harmful effects: release of GMOs can spread and compete with native species, reduces genetic variability, may potentially harmful to organisms.*

Answer key
16-24 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

## Answer Key : 16-23

### ➢ PHYSICS 12




$F_w \sin\theta = \frac{mv^2}{r}$ ; $F_w \cos\theta = mg$

$$\frac{F_w \sin\theta}{F_g \cos\theta} = \frac{\frac{mv^2}{r}}{mg}$$

$$\tan\theta = \frac{v^2}{rg}$$

$$r = \frac{v^2}{g\tan\theta}$$

If V = 800km/h and θ = 30°

Radius = 8728m

Radius of the turn 9km

# ராகுல்காந்தி...

38ஆம் பக்கத்தொடர்ச்சி

## நேர்காணல்

மேம்பாடு, வங்கிச் சேவையில் தன்னிறைவு, கணினி கல்வியறிவு பெற்ற மாநிலங்களில் கேரளா முதலிடத்தைப் பிடித்தது. சுகாதாரம், சுற்றுலா வளர்ச்சி, சமூக நலம், தரமான வாழ்க்கை, சூழல் பாதுகாப்பு போன்ற பல வழிகளில் கேரளா மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. இவை எல்லாவற்றிலும் என் பங்கும் இருக்கிறது.

தற்போது இந்தியாவில் தமிழகம், பீகார், கேரளா உட்பட பெரும்பான்மையான மாநிலங்களில் மதுப் பழக்கம் ஒரு பெரும் சமூகப் பிரச்னையாக உருவாகியுள்ளது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுத்த முதல் இந்திய மாநில முதல்வர் நீங்கள் தான். ஆனால், உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் கொண்டுவந்த மதுவிலக்கு கொள்கையும் தோல்வியில் முடிந்துவிட்டதே? பூரண மதுவிலக்கு சாத்தியமே இல்லையா?

பூரண மதுவிலக்கை அமல்படுத்தும் முயற்சியில் தோல்வியடையவும் இல்லை அக் கொள்கையில் இருந்து பின்வாங்கவும் இல்லை. சில காரணங்களுக்காகச் சில மதுவிலக்கு நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது அவ்வளவு தான். அதற்கிடையில் தேர்தல் வந்துவிட்டது. பூரண மதுவிலக்கு அமலாக்கத்துக்கான வழிமுறை, மாற்று வருவாய் வழிகள் அடங்கிய புதிய கொள்கைகளை வகுத்து வைத்திருந்தோம். ஒரே கையெழுத்து, ஒரே நாளில் மதுவிலக்கு என்பதெல்லாம் சாத்தியமில்லை. 10 ஆண்டுகால இடைவெளியில் பூரண மதுவிலக்கு இலக்கை அடைய முடியும்.

முந்தைய உங்கள் ஆட்சிக் காலத்தில் எழுந்த ஊழல் குற்றச்சாட்டுகள், முறைகேடு புகார்கள் உங்கள் தோல்விக்குக் காரணமெனக் கருதுகிறீர்களா?

கடந்த ஐந்து ஆண்டுகளில் கேரளாவில் மக்கள் நலனுக்காகக் காங்கிரஸ் பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. மற்ற அரசுகளைவிட காங்கிரஸ் அரசுதான் கேரளாவில் அதிகமான வளர்ச்சித் திட்டங் களை நிறைவேற்றியுள்ளது. காங்கிரஸ் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை துளியும் குறையவில்லை. என்றாலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கேரளாவில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது இயல்பானது என்பதால் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

கேரளா காங்கிரஸ் கட்சிக்குத் தோல்வி புதிது அல்ல. வெற்றியை மட்டுமே நம்பி அரசியலில் இருக்கும் இயக்கமும் காங்கிரஸ் அல்ல. மற்ற கட்சியினர் எங்கள் மீது



பொய்யான ஊழல் குற்றச்சாட்டுகளையும், களங்கம் விளைவிக்கும் வகையில் அவதூறான புகார்களையும் அள்ளிவிட்டது போல், நாங்கள் அப்படிச் செய்யமாட்டோம். மக்கள் பணிக்கே காங்கிரஸ் முக்கியத்துவம் கொடுக்கும். காங்கிரசின் கொள்கைகளையும், வாக்குறுதிகளையும் மக்களுக்கு சென்றடையும் வகையில் ஆக்கப்பூர்வமாக செயல்படுவோம். தோல்வியடைந்து விட்டோம் என்று மக்களிடம் இருந்து ஒதுங்கி இருக்கவில்லை. முன்புபோல 24 மணி நேரமும் மக்களுக்காகக் காங்கிரஸ் சேவை செய்துக் கொண்டிருக்கிறது. எங்கள் மீது வீசப்பட்ட கறைகளைக் களைய இந்த இடைவெளிக் காலம் போதுமானது. தோல்வியில் இருந்து காங்கிரஸ் கட்சி மீண்டும் வலிமை பெற்று எழும். அதற்காகத் தொடர்ந்து தீவிரமாக உழைப்போம்.

### கேரளாவில் பாஜக எழுச்சிபெற்று வருகிறதே?

கேரள மக்கள் அரசியல் விழிப்புணர்வு மிக்கவர்கள். பாஜகவின் அரசியல் யுக்திகள் கேரள மக்களிடம் செல்லாது. கேரளாவில் பாஜகவின் வாக்கு வங்கியானது அதிகரிக்கவில்லை. அக்கட்சியால் கேரளாவில் கால் ஊன்றவே முடியாது.

சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்காதது ஏன்?

நீதிமன்ற வழக்குகளையும், என்மீது சுமத்தப்பட்ட பொய்யான புகார்களையும் எதிர்கொண்டு, நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க நேரம் தேவை. அதனால், எதிர்க் கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்கவில்லை. எனினும், சட்டசபை கூட்டத் தொடர்களில் தொடர்ந்து பங்கேற்று வருகிறேன்.

முதல்வராக இருந்த நீங்கள் தற்போது சட்டமன்ற உறுப்பினர் பணியை மட்டும் கவனித்து வருகிறீர்கள். அந்த சூழலும் இந்த சூழலும் எப்படி இருக்கிறது?

முதல்வர் பதவி எனது இலக்கு அல்ல. முதல்வராக இருந்தபோதும் இப்போது சட்டமன்ற உறுப்பினாராக இருக்கின்ற போதும் மக்களை நேரடியாகச் சந்தித்துக் குறைகளைக் கேட்கும் வழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. வார்டு கவுன்சிலராக இருந்து கூட மக்கள் பணியாற்றத் தயார். எந்தப் பொறுப்பில் இருந்தாலும் எளிமை, நேர்மை, வெளிப்படைத்தன்மை எப்போதும் என்னிடம் இருக்கும்.

உங்களின் பலம், பலவீனம்?

பலம், பலவீனம் இரண்டுமே எனது எளிமை யான பண்புதான். யார் வேண்டுமானாலும் என்னை எளிதில் அணுக முடியும் என்பது பலருக்கும் தெரியும். அதைத் தெரிந்துக் கொண்ட சிலர், என்னை அணுகி, எனது பெயரைப் பயன்படுத்தித் தவறான வழியில் சம்பாதித்து விட்டனர். அதற்கான பலனை இப்போது அனுபவிக்கிறேன். ('டீம் சோலார்' நிறுவனத்தை நடத்தி வந்த சரிதா நாயர் மற்றும் அவரது கணவர் பிஜு ராதாகிருஷ்ணன் இருவரும் உம்மன் சாண்டிக்கு நெருக்கமானவர்கள் என்பதுபோல் காட்டிக் கொண்டு அவரது பெயரைப் பயன்படுத்தி சோலார் பேனல் மோசடியில் ஈடுபட்டனர். இதைத்தான் குறிப்பிடுகிறார்.)

இப்போது உங்கள் பொழுதுபோக்கு?

இப்பொழுதும் எனது ஒரே பொழுதுபோக்கு வாரத்தில் ஒருநாள் குடும்பத்தினருடன் நேரம் செலவிடுவது மட்டும்தான். மற்றபடி எம்.எல்.ஏ பணிகள், மக்களைச் சந்திப்பது, கட்சி நிகழ்ச்சிகள், சட்டசபை பங்கேற்பு, கட்சிக்காரர்கள் சந்திப்பு என நேரம் சரியாக இருக்கிறது. 73 வயதிலும் சோர்வடையாமல் சுறுசுறுப்பாக இருக்கும் ஆசீர்வாதத்தைக் கடவுள் தந்துள்ளார். கடும் பணிகளுக்கு இடையிலும் ஒரு ஐந்து நிமிடம் ஓய்வெடுத்தால்கூட மீண்டும் புத்துணர்ச்சியுடன் பணியை தொடங்கிட என்னால் முடியும்.

---

# நினைவுகள்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

சொல்லியிருக்கிறார். அது கண்ணதாசனுக்கும் எம். எஸ். வி. க்கும் பிடித்துப்போக அதனையே வைத்திருக்கிறார்கள். ஜெயலலிதாவின் பல்லவியை இருவரும் உடனே ஏற்றுக்கொள்ளக் காரணம், தமிழகம் அறிந்த புகழ்பெற்ற நடிகையாக ஜெயலலிதா இருந்த இந்தக் காலகட்டத்தில் ஓர் எழுத்தாளராகவும் அவருக்கு இன்னொரு பக்கம் இருந்தது என்பதுதான்.

• "ஆங்கிலம், தமிழ் என இரண்டு மொழிகளிலும் பத்திரிகைகளில் ஜெயலலிதா தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார். தமிழில் நான்கு நாவல்களும், பல சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இதில் சில புத்தகமாக வெளிவந்துள்ளன. பல வரவில்லை. குறிப்பாக 1980களில் ஜெயலலிதா நிறைய எழுதியிருக்கிறார். அப்போது அவர் எழுதிய 'உறவின் கைதிகள்' என்னும் தொடர்கதை கல்கி இதழில் 1980ஆம் ஆண்டு வெளியானது. இதே காலகட்டத்தில் குமுதத்தில் ஜெயலலிதா எழுதிய ஒரு நாவல் தொடராக வெளிவந்தது. "துக்ளக்" பத்திரிகையில் "எண்ணங்கள் சில" என்னும் ஒரு கட்டுரைக் தொடர் வெளியானது. "தாய்" வார இதழில் "எனக்குப் பிடித்த ஊர்", "எனக்குப் பிடித்த வாத்தியார்", "எனக்குப் பிடித்த ஓவியர்", "எனக்குப் பிடித்த எழுத்தாளர்", "எனக்குப் பிடித்த நாவல்", "எனக்குப் பிடித்த தத்துவஞானிகள்" என 45 வாரங்கள் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். இந்தக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு "மனதைத்தொட்ட மலர்கள்" என்ற நூலாக வெளிவந்துள்ளது.



• ஒவ்வொரு நாளுக்குரிய நட்சத்திரங்களுக்கு ஏற்ற நிறங்களில்தான் புடவைகளை உடுத்துவார். பச்சை, நீலம், மெஜந்தா பிடித்த நிறங்கள். கட்சி மற்றும் ஆட்சி தொடர்பான கோப்புக்களில் கையெழுத்திட பச்சை வண்ணப் பேனாகளையே பயன்படுத்துவார். சாலட், சூப் வகைகள் விருப்பமான உணவு. செல்போன்களை கையில் வைத்து க்கொள்வதில்லை. பயணங்களிலும் அத- னைக் கடைப்பிடிப்பார்.

• புத்தகங்களில் மாவீரர்களின் சுயசரிதைகள் விருப்பமானவை. தேர்தல் தேதி அறிவித்து, கூட்டணி பேச்சுவார்த்தை, பிரசாரம் என பரபரப்பாகிவிட்டால், அதுவரை படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் கடைசியாக முடித்த பக்கங்களில் அடையாள ரிப்பனை வைத்துவிட்டு, பரபரப்பு முடிந்தபிறகு, விட்ட இடத்தில் இருந்து தொடர்வார்.

• சினிமாவிலும் பின்பு அரசியலிலும் பிரவாகம் எடுத்து ஓடிய ஜெயலலிதா என்ற நதி இப்போது சென்னை கடற்கரையில் தன் வாத்தியார் சமாதி அருகே ஓய்வெடுக்கிறது.

நகைச்சுவைத் தொடர் 345

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



தமிழ் நாட்டு சட்டசபையில் அ.தி.மு.க. கட்சி செயலாளர் பதவி வாக்குவாதத்தைவிட ஆட்டிலறி அன்னம்மா செக்கண்ட்புளோர் செல்லம்மா இருவரும் காரசாரமான விவாதமும் அமளிதுமளியும்தான்.



ஆனால் இன்றைய வதந்திகள் செய்திகளை அவ்வப்போது அப்டேற் பண்ணிக்கொண்டிருந்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி. கொஞ்ச நாட்களுக்குள் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா சரித்திரம் ஒலிச்சித்திரம்போல ஒலித்துக்கொண்டிருந்தது. எல்லாவற்றையும் பாத்துக்கொண்டிருந்த உலகருக்கு சிரிப்பாக இருந்தது.

எத்தனை எம்.ஜி.ஆர். ஜெயலலிதா படங்களை திரும்பத் திரும்ப பார்த்திருப்பார். அன்றுமுதல் இன்றுவரை அவ்வப்போது படித்தது உலகரின் மனக்கண்முன் வந்தது.



பதவிக்காக பரதன் முடிசூடவேண்டும். அயோத்தியை ஆளவேண்டும் என்பதற்காக ராமனை 14 வருடம் காட்டுக்கு அனுப்பினார் கைகேயி - ராமாயணம் (இதிகாசம்)


பதவிக்காக சூதினால் பஞ்ச பாண்டவர்களை வென்று இறுதிவரை அவர்களை வெல்ல முடியாமல் எந்த நல்ல ஆலோசனையையும் மதிக்காமல் அழிந்தொழிந்தனர் கௌரவர்கள் - பாரதம் (இதிகாசம்)

பதவிக்காக நற்போதனை செய்த யேசு கிறிஸ்துவை முள் கிரீடம் அணிந்து சிலுவையை சுமக்கவைத்து சிகப்பு அங்கியால் போர்த்து சவுக்கால் அடித்து சிலுவையில் அறைந்து கொன்றார்கள்.

பதவிக்காக கிரேக்க தத்துவஞானி சோக்கிரடீஸ் இளைஞர்களுக்குப் புதிய தத்துவத்தோடு கூடிய அறிவுரை வழங்கினார். விசம் கொடுத்து கொன்றது கிரேக்க அரசு. (உன்னையே நீ அறிவாய் - சோக்கிரட்டீஸ்)



பதவிக்காக பிரதமராக இருந்த பண்டாரநாயக்கா புத்தர கித்தர தேரோ சோமராம தேரோ என்பவர்களால் 26 செப்ரெம்பர் 1959 இல் சுட்டுக்கொல்லப்பட்டார். (கொலையில் உள்வீட்டு விடயங்கள் பல மூடி மறைக்கப்பட்டதாக பல வதந்திகள்) கணவன் மறைவிற்குப்பின் 21 யூலை 1960 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமரானார்.




பதவிக்காக ரோமாபுரியை ஆண்ட யூலிய சீசரை சூழ இருந்தவர்களே கத்தியால் குத்திக் கொலை செய்தனர். கிரகேரியன் கலண்டர் நாணயங்களில் சீசரின் படம் பிரபலமானது அவரைச் சூழ்ந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை.


அலி சியா பூட்டோ பதவிக்காலத்தில் 1979 இல் தனது அரச-ியல் எதிரியை கொலை செய்யத் தூண்டியதற்காக சிறை வைக்கப்பட்டு ஏப்பிரல் 4 1979இல் இரவோடு இரவாக தூக்கிலிடப்பட்டார்.



அந்தக்காலத்தில் அப்பொலோ மருத்துவமனை இருக்கவில்லை. இருந்திருந்தால்......கொலைக்குற்றங்கள் அகால மரணம், இயற்கை மரணம், மாரடைப்பால் மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்.

மறைந்த தமிழக முதல்வரின் மரணம் பலவிதமாகப் பேசப்படுகிறது. மர்மக்கொலை, திட்டமிட்ட சதி, சி.பி.ஐ.விசாரிக்க வேண்டும் எனப் பல ஊகங்கள்.

எம்.ஜி.ஆர் படப்பாடல்...
என்னதான் நடக்கும் நடக்கட்டுமே இருட்டினில் நீதி மறையட்டுமே...
தன்னாலே வெளிவரும் தயங்காதே.



மறைந்த தமிழக முதல்வருக்காக 7 நாட்கள் துக்கதினம் அனுட்டிக்கப்படும். தமிழக அரசு அறிவிப்பு. மு. பன்னீர்செல்வம் (3வது தடவையாக) முதல்வராக பதவியேற்பு. சசிகலா கட்சிப் பொதுச்செயலாளராகத் தெரிவு.

அடேயப்பா எத்தனை துக்கச் செய்திகள்.
செக்கண்ட் புளோர் செல்லம்மா கடுமையாக யோசித்துக்கொண்டிருந்தா. என்ன செல்லம்மா அன்ரி யோசிக்கிறியள் என ஐபொட் அகிலாண்டேஸ்வரி கேட்க...கனடாவிலை அப்பொலோ ஆஸ்பத்திரி பிறாஞ் திறக்கக் கனவு கண்டனான் என்றதும் உலகர் வீட்டில் எழுந்த சிரிப்பொலியை தாங்க முடியவில்லை.

மறைந்த அறிஞர் அண்ணாவின் சொத்து விபரம்....தெரியாது.
மறைந்த அப்துல்கலாமின் சொத்து விபரம் வெளியிட்டபோது கவலையாக இருந்தது. ஆனால் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் சொத்து விபரம் ஒரு பகுதி மட்டும் வெளியானது. 302 புள்ளி விபரத்துடனான சொத்துக்கள்.
எத்தனை வீடுகள்.. (முருகனுக்குள்ளதோ அறுபடை வீடு)
எத்தனை காணி... எத்தனை கடைகள்... எத்தனை வங்கிகளில் கணக்கு வழக்கு... (அதனால் எத்தனை வழக்குகள்)
கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காக கொடுத்தான்?



அஞ்சியவர்க்கு சதா மரணம் எனப் படித்திருப்பீர்கள். கடந்த மாதம் தனது 90 ஆவது வயதில் இயற்கை மரணமான கியூபா புரட்சி அதிபரை கொல்வதற்கு 600 க்கு மேற்பட்ட தடவை கொலை முயற்சி நடைபெற்றருக்கிறது (ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான் ஆனால் அமெரிக்காவால் அழிக்க முடியவில்லை)



அண்டத்தையே கதிகலங்க வைக்கும் 51 நட்சத்திரம் கொடி கொண்ட அமெரிக்கா ஒற்றை நட்சத்திரம் கொண்ட கியூபாவை ஒன்றும் செய்துவிட முடியவில்லை. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.



துக்ளக் என்று சொன்னாலே இந்திய அரசியலவாதிகள் அதிர்ந்து போவார்கள். தான் விரும்பியபடியே எழுதும் ஆற்றல் உள்ளவர் சோ எழுத்தாளர் - நடிகர் - அரசியல் ஆலோசகர்.
டிசம்பர் 07ஆம் திகதி காலமானார்.
இவர் எழுதிய ஒரு தொடர் நீதியே உன் விலை என்ன?
மிருகங்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் மனிதர்கள்.

நம்மில் சினிமா படம் பார்க்காதவர்கள் கிடையாது. எழுத்தோட்டத்திற்கு முன் அல்லது இடையில் இப்படத்தில் மிருகங்கள் துன்புறுத்தப்படவில்லை என அறிவிப்பு இருக்கும். ஆனால் இன்று சினிமா, சின்னத்திரை, தொலைக்காட்சி சீரியல் எனப் பல துறைகளில் அன்றுமுதல் இன்றுவரை அதில் மிளிர்ந்த ஒரு சிலரைத் தவிர பலரின் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது. இருந்த இடமோ இறந்த இடமோ தெரியவில்லை.




சின்னத்திரையில் நடிப்பவர்கள் பலர் கொலை? தற்கொலை? இன்றுவரை விசாரணையிலும் விடுபடாத விடைகளுடனும் போய்க்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இப்படத்தில் மிருகங்கள் துன்புறுத்தப்படவில்லை என்ற வாசகம் சிரிப்பாக இருக்கிறது.

இந்தியாவில் சர்வதேச திரைப்படவிழாவில் தேசிய கீதம் ஒலிக்கும்போது எழுந்து நிற்காத 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தியை ரி.வி.யில் பார்த்துக்கொண்டிருந்தார் உலகர்.
கொடி படத்திற்கு 4 மணிநேரம் வரசையில் நின்று ரிக்கெற் எடுத்துப் படம் பார்ப்பவர்கள் 1 நிமிடம் தேசியக்கொடிக்கும் தேசிய கீதத்திற்கும் மதிப்பளிக்கவில்லையென்றால் சிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் யார் எடுத்துச்செல்வது?

ஞாபகம் இருக்கிறதா? டிசம்பர் 15....31

16. ஜப்பானில் (1920) பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டதில் 200,000 பேர் கொல்லப்பட்டனர்.



17. இலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது

18. சர்வதேச புலம் பெயர்ந்தோர் தினம்



21. வின்ரர் ஆரம்பம்

24. புரட்சித்தலைவர் மக்கள் திலகம் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் நினைவுதினம்

25. நத்தார் பண்டிகை

26. சுனாமி பேரலை பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டது. 2004 ஆண்டு




31.12.2016 ஆண்டு நிறைவு 01-01-2017 ஆங்கில புது வருடம்.




ஆரோக்கியத்திலும்
தரத்திலும் என்றும்
முதலிடம்
நிரு பிராண்ட்
தயாரிப்புகளே.
அனைவருக்கும் நத்தார்தின
நல்வாழ்த்துக்கள்.
Niru
LIME PICKLE
(Jaffna Style)
Niru
Niru
Omega 3
Niru
Niru
FALUDA
Niru
அப்பளம்
40 Minuk Acres, Scarborough, ON. M1E 4Y6
Phone: (416) 750-1976
Niru
Niru
Niru
நிரு


MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
JRS AUTO TECH
OPEN 7 DAYS A WEEK
9am-11pm
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM
$99
USED TIRES FROM
$49.95
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$199
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From…
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.
designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
Special Christmas & Boxing Week Sale
Best Price and collection of 22-karat Singapore Jewelry.
Stone Jewelry no labor charges.
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
Design by: Print Sonic
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com



















Free Real Estate Class - Call: 416.321.6969













**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
www.vlambaram.com
www.tamilvanakkam.com

